3422

PRESENTED BY:
PL. M.
CHETTIAR
KASIVI

# சிந்தனைக் களஞ்சியம்.

PRESENTED BY
V. PR. PL. K. KASI VISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.
3422

இயற்றியது:

ஆர். வி. ராமசுவாமி, பி. ஏ., பி. எல்.,

சேலம்.

வைசிய இளைஞர் தமிழ் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

திருவள்ளுவர் நூல் நிலையம்

சஞ்சீவி பிரஸ், தருமபுரி.

1935.

பதிப்புரிமை]

[விலை அ. 10.

3422

# Dedicated To:

The Sacred Memory Of My
Late Revered Father,
Mr. R. V. Venkatramana Iyer, B. A.
(Tahsildar, Salem Dt.)

# பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாரதப்போரும் பார்த்தனின் குணமும் ... | 1 |
| 2. | கல்வியின் உயர்வும் புத்தகாலய இயக்கமும்... | 25 |
| 3. | அந்திக்கால அறமொழிகள் ... | 50 |
| 4. | மன்னுயிரும் தன்னுயிரும் ... | 62 |
| 5. | ஆங்கில நாடகக்கலை யபிவிருத்தி ... | 76 |
| 6. | விதிவழியாடிய மதிவதனன் ... | 97 |
| 7. | அன்பிற்குரிய பேரைம் பெருங்குரவர் ... | 118 |
| 8. | தமிழ் உரை நடை வளர்ச்சி ... | 133 |

உ

முருகன் துணை.

# சிந்தனைக் களஞ்சியம்.

## 1. பாரதப்போரும் பார்த்தனின் குணமும்.

### I

'தருமம் தலைகாக்கும்' எனக்கருதிய பஞ்சபாண்டவர்களுக்கும், பொறாமை கொண்ட கௌரவருக்கும், இழந்த தத்தமது நாடுகளை மீளவுங்கொள்ள நடந்த யுத்தம் பாரத மெனப்படும். பல்லோராலும் போற்றப்படும் பரிமளங் கமழும் மறை நான்கதனுடன், ஐந்தாம் வேதமெனக் கொண்டாடற்பாலதான ஒப்புயர் வில்லாத தெய்வீகத் தன்மை பொருந்திய, மாயவன் திருவாய் மலர்ந்தருளிய, பகவத் கீதையைத் தன்னகத்தே கொண்டிருத்தலானும்; பாரம்பரையாக வழங்கிவரும் முறைப்படி முக்கணனின் மூத்த மைந்தனாகிய கரிமுகன், தன் கொம்பொன்றை எழுத்தாணியாகவும், மாமேருகிரியை ஏடாகவும்கொண்டு எழுதிப்போந்த விசேடத்தானும்; தருமங்களை உணர்த்துவதில் வேதத்தினும் மிக்க 'பாரம்' உடைத்தாதலினாலும், நளன், அரிச்சந்திரன் முதலிய உத்தமர்களின் உயர்ந்த சரிதைகளைத் தன்னகத்தே கொண்டிருத்தலாலும்; பாரதமதனை 'மகா பாரத' மென்று அடைமொழி கூட்டிச் சிறப்பித்துக் கூறு நிற்பது ஆன்றோர் மரபு. 'பாரத:பஞ்சமோவேத:' எனவும் 'நீடாழியுலகத்து மறைநாலொடைந்தென்று நிலை நிற்கவே

வாடாத தவவாய்மை முனிராஜன் மாபாரதஞ் சொன்ன நாள்' எனவும், வழங்கப்பட்டு வருவன காண்பதற் குரியவை. அங்ஙனம், அஞ்சலி செய்தற்குரியதான நற் புருஷார்த்தங்களைச் சிறக்கக்கொண்ட கீதை பிறத்தற்கேதுவாயிருந்த கழற்கால் வீரன், சந்திரகுல மன்னனும் பாண்டுவின் பாலருள் மூன்றாவதாய் நின்ற அர்ச்சுனனுவன்.

## (பிறப்பு)

**மா**நிலமெங்கும் நன்னிமித்தங்கள் நிறைந்து தோன்ற இருநிலமக்கள் மகிழ்ச்சியுற்று இன்புற, 'பங்குனி நிறைந்த திங்களாதவன் பயிலுநாளில், வெங்குனி வரிவில் வாழ்க்கை விசயன்' அமராவதியின் அதிபனை தேவேந்திரனுக்கும் குந்திதேவிக்கும் மகனுகப் பிறந்தனன். குழவியின் சுந்தரத் தோற்றத்தையும், ராஜீய அம்சங்களையும் கண்டு, அதிசயித்து ஆனந்தமுற்று அசரீரியின் கட்டளைப்படி மகவுக்குப் பற்குனனென்று திருநாமமிட்டனர். இளம் பிராயந்தொட்டு அறிவு, அன்பு, அருள், அடக்கம், ஊக்கம், ஒழுக்கம் முதலாய மேலான நற்குணங்களைக்கொண்டு ஒழுகிவந்த எழில்வாய்ந்த அர்ச்சுனன், தெய்வ பக்தியும், ஆசிரியரிடத்து வணக்கமும், சகோதரரிடத்து வாஞ்சையும் பெற்ருேரிடத்துப் பணிவும், உற்ருேரிடத்து உறவும், மற்ருேரிடத்து அன்பும் கொண்டிருந்த மதிகுலச் சிகாமணி.

## (தாயிடம் பணிவு)

**சி**று வயதினின்றும் பற்குனன் தந்தை தாயரை அன்புடன் நேசித்துப் 'பெற்ருேரைப் பேணு' முத்தமப்

புதல்வனாக வைகலும் வளர்ந்து வந்தவன். மங்கல முழக்கமும் சங்கின முழக்கமும், எங்கணும் முழங்கா நிற்க, 'தூங்க வேற்று ருபதன்றன் றொல்லைமாநகரிற்' புக்குப் பார்த்தோர் பலரும் நடுங்கிச் சென்றவில்லை, அனைவருங் கண்டு அதிசயித்துக் களி கூறத் 'தன் மரபுக் கணி திலகமான வீரன்' இலகுவேயெடுத்து நாண்பூட்டிவிட்டு, யாகபலனைகத் தீயினின்றும் தோன்றிய திரௌபதையை மணந்தவன். மணக்கோலத்தோடு திரும்பிவந்து, அன்னையிடங் கன்னிகையைக் கொணர்ந்த செய்தியைக் கூறுவான் கருதி, "அன்னாய்! அருங்கனியொன்று கொணர்ந்துளோ" மெனலும், உள்ளிருந்த அன்னை மைந்தரின் மொழியைக் கேட்டு மனமகிழ்ந்து, "தேவர், தெள்ளமுதென்ன மக்காள்! சேர நீரருந்து மென்ன," அன்னவாறே தாய் சொற்றுறவாது சம்மதித்த, உடன் பிறந்தோர் ஐவர் தம்மிலொருவனாய ஆர்ச்சுனனின் மேன்மையும் நற்குணனு மெச்சத்தக்கவை.

## (கல்வி)

**சோ**ம்பித் திரியாப் பார்த்திபன், இளம்பிராயத்திற்றானே அரசிளங் குமரனுக்கு வேண்டிய பற்பல வித்தைகளையும், எளிதில் கற்றுணர்ந்து கொண்டனன். யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை, சாரத்தியம், யுத்த முறையாதிய பல துறைகளிலும் நன்கு தேர்ச்சிபெற்றனன். வாள், கதை, தோமரம், சூலம் முதலிய ஆயுத வித்தைகளில் கைதேர்ந்த சூரனாயினன். அஸ்திரப் பிரயோகத்தில் ஒப்பற்றவனாயினன். 'தாளினுஞ் சமரமண்டலங்களி

னுந் தாழ்விரல் தடக்கை முட்டியினுந்—தோளினுஞ் சென்னித் தலத்தினும் மற்போர் சொன்ன போர் விதமெல்லாம்' நன்குணர்ந்தனன். குருவுக்கு மிஞ்சிய சீடனென்பதற்கோருதாரணமாக, அர்ச்சுனன், ஆசிரியர் கற்பித்து வருங்காலை, தன் வல்லமையாலும், மனோசக்தியின் பான்மையாலும், அவரினும் பதின்மடங்கு அதிகமாக ஊகித்து உணர்ந்துகொள்வான். ஒரே கையிலுள்ள விரல்கள் ஒன்றற்கொன்று பேத முறுதல் போலவும், ஒரே குடியிற் பிறந்தவர்கள் குணத்தில் மாறுபடுதலைப் போலவும், ஒரே ஆசிரியரிடத்துப் பயின்றும் பல்லோரிலும், வில்வித்தையில் பற்குனன் முதன்மை பெற்று வானுறுமதியம் போலத்திகழ்ந்து விளங்கினன். தன்னையும் தன் வில்லையும் இகழ்ந்துரைப்போரை நமனுலகனுப்புவே னென்பதற் கறிகுறியாகச் சிட்டிய நாமம் சிறக்கக் கொண்ட ஆறிரு திருநாமத்தோன் அருச்சுனன், தன்னினும் வில்வித்தையிற் சிறந்த ஏகலைவன் தன் குக்கலைப் பாண மொன்றெய்து கொன்றதைக்கண்டு, சீற்றங்கொண்டானாயினும், அன்னானைக் கண்டு அவனின் குரு பக்தியையும், விற்றிறனையும் கண்ணுற்று, யாதுஞ் செய்ய மனமெழாது போய், பொறுமை மேற்கொண்டு, அவனைமெச்சி வாழ்த்திச் சென்றனன். அவனின் பெருமைதான் என்னே! குணமென்னே!!

## (குருபக்தி)

**கல்வி** கேள்விகளை அறிவுறுத்திய ஆசிரியரிடத்து மிகுந்த பக்தியும் வினயமுங் கொண்டொழுகிய அருச்சுனன்

ஆசிரியரின் கட்டளைகளை மீறாது கீழ்ப்படிந்து அவற்றினை முட்டின்றி முடிக்க வல்லவன். பெரியோரிடத்து வணக்கமாக நடப்பவன். ஆசிரியரின் குறிப்பறிந்து அதன்படி நடக்கும் நல்லொழுக்கங்கொண்ட நன்மாணவன். தினைத்துணை நன்றிசெய்தோரையும் மறவாதவன். பிறரை இடுக்கணினின்றுங் காக்கும் கருத்தினன். கங்கைக்கரையில் முதலைவாயிலகப்பட்ட தன் குருவாகிய துரோணரை முதலையைத் துண்டித்துக் காத்த செய் நன்றி மறவாதவன். அவரிட்ட கட்டளையைச் சிரசிற்றாங்கி அதன்படி, நகுலன் தேரோட்ட இரதமேறிப் பாஞ்சாலனைக் கட்டிவந்து ஆசிரியர் முன்னிலையில் விட்டவன். பேடி உருக்கொண்டிருந்து அஞ்ஞாத வாசம் முற்றுப்பெற்ற பின்னர் வெளிக்கிளம்பிய அருச்சுனன், தன் விற்றிறன் விளங்கச் சிலைக் குருவாகிய துரோணாச்சாரியர், வீடுமர், கிருபர் இம்மூவருக்கும் வந்தனைக் கணைகளேவி நமஸ்கரித்தனன்.

ஒருகால் துரோணர், சிந்தைபிற் கடிய தேரோடிய அருச்சுனனைச் சமருக்குக்கூவ, குரு பக்தி மிகுதியும் கொண்ட தனஞ்சயன், அன்புகூர்ந்து, தேரினின்றும் கீழிறங்கி, அவரது திருவடிகளைப் பணிந்து, கரங்குவித்துத் துதித்து, "எண்ணிலா அருந்தவத்தோய்! தங்கள் சொற்படி ஒன்றொழி ஏழிரண்டாண்டு, கடும்பூழிவெம் மின்னொளிர் கானகத்துக் கழித்திட்டோம். இனியேனும், தர்மாதர் மங்களையுணர்ந்து கருமங்களைச் செய்திடின், அது வன்றோ தம்மைப்போன்ற கற்றறிந்த பெரியோர்களின் கடமை? யாது மறியாச் சிறியோனென்னை நிகரற்ற வீர

னென, மண்டல மெண்டிசையிலும் பலரும் கொண்டாடு மாறு செய்வித்த தங்களின் காருண்யத்திற்கு அடியனேன் கைம்மாறு செய்யக்கிடப்பது யாதுளது? குருவாகிய நீர் மற்போருக்கு என்னை அழைத்திடல் முறையன்று. குருவோடு போர்புரிதல் எனக்கும் அழகன்று. அங்ஙனம் செய்திடின் அடியேன் பஞ்சமா பாதகங்களிலொன்றான ஆசிரியத் துரோகத்திற்குப் பாத்திரனாவேன்" என்று தன் அன்பும் பக்தியும் தோன்றக் கூறினன்.

தன் மொழிகளைச் செவிசாய்த்துக் கேளாது ஆசிரியர் எதிர்த்து நின்று நாணிட்டு அணவுதலுற்ற செயலைக்கண்டு திகைத்து, செய்வது யாதென்பது விளங்காதுபோக, "மனன சீல! தருமத்திற்கு விரோதமான கருமத்தைச் செய்யத் தருமோபதேசம் செய்த ஆசிரியர் தாங்களே என்னைத் தூண்டுகின்றீர்களே. இடருற்றகாலை தன்னைத்தான் காத்துக் கொள்வது தருமமாகலின், மனச்சோர்வுற்று, யான் என் எண்ணங்களுக்கு மாறாகத் தங்களுடன் சண்டையிடு கின்றனன். வேறு வழியொன்றும் புலப்படவில்லை. தப்பிதம் என்னதல்ல. வலுவிலழைத்து வாதுசெய்யும் தங்களதே" என்று பீடிகையிட்டுச் சண்டையிடலாயினன்.

மற்றும், பதினான்காம் நாட் போரன்று, வேதியர் கோவை (துரோணரை)க்கண்டு அருச்சுனன் "எங்கட்கிறையாம் திங்கட்பிறைபோன்ற உத்தம தேசிகனே! அன்பாக என்னைப்பேதமின்றித் தங்கள் மைந்தனைப்போன்று பாவித்து வந்தவரே! அன்பில்லாத வாழ்க்கையின் பயன் யாது? பற்றி நடக்கவேண்டிய வழிகளைப் புறக்கணித்துப் பற்று

தற்கு உதவாத துறைகளை நாடி நிற்றல் நல்லோருக்கு அழகன்று. நன்றி மறந்தவர் வாழ்க்கையும் ஒரு வாழ்வா? தங்களை எதிர்த்துச் சண்டையிட என் மனம் விதலையுற்றிரங்குகிறது" என்று இரங்கித்தன் மேன்மை தோன்றக் கூறியுங்கேளாது மறுத்துச் சண்டையிட எதிர்த்து அண்டின அவருடன், 'தாரமும் குருவும் தலைவிதிப்படி' யென்றுணர்ந்து போர் புரிந்திட்ட அவனின் மேலான நற்குணங்கள் வியத்தற்குரியன.

தெய்வீகத் தன்மையும் மாயா சக்தியும் கொண்ட அருச்சுனன், ஆசிரியருக்கு எண்ணெய் கொண்டேகுகையில், அவரிட்ட கட்டளைப்படி எண்ணெயைக் கீழே வைத்திடாது மாயா சக்தியாலதனை அந்தரத்திருத்தி, அருகாமையிலிருந்த மரத்தின் இலைகளை, விற்கொண்டு ஜலத்திலுள்ள அவற்றின் நிழலை நோக்கித் துளை செய்த விசித்திர சக்தியினன். பிறிதோரமயத்துக் கண்ணனின் கருத்திற்கிசையப் போர்க்களத்தில் பரிதிகள் களைதீர நீர்குடித்தற்கு, வருண மந்திர முச்சரித்து நன்னீர்ப்புளின மொன்றை நொடிப்பொழுதில் உண்டாக்கினன். தெய்வ சகாயமும், மனோதிடமும் உள்ள நற்புருடர்களுக்குக் கிட்டுதற்கரிய பொருள் யாதுளது?

# II

## (சகோதர வாஞ்சை)

அருச்சுனன் உதர பாசமிக்க உடன்பிறந்தோரை நேசிக்குஞ் சகோதர வாஞ்சை பெரிதுங் கொண்டவன்.

இளமை தொட்டு, சகோதாருடன் ஒருமனப்பட்டு வேற்று மையின்றி ஒற்றுமையாக ஓடியாடி விளையாடியவன். உலகில் 'தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல் வன்மையு ளெல்லாந்தலை' யாதலால், அருச்சுனன் மூத்தோரை வணங்கி, அவரின் சொற்படி நடந்துவந்தான். இளமையில் கங்கையின் புத்திரனாகிய காங்கேயனின் (பீமனின்) பிரிவால் பெரிதும் நலிந்துருகி ஏக்கங்கொண்ட புனிதன். முரசகேதனனின் (தருமனின்) சொற்றவறாது, சென்றவர் மீளாத் துயரம் வாட்ட நீர் கொணரச்சென்று, நச்சுப்பொய்கையில் முன் சென்ற சகோதரர் இருவரும் இறந்திருப்பதைக்கண்டு, உடல் பதற, உயிர் துடித்து உள் நின்று ஊசலாடக் கண்களிருளக் கைகால்கள் நடுக்க முற்றுப் பதைக்க வாடிவருத்த முற்றுப் பொய்கை நீரைத்தானும் பருகித் தன்னுயிரையும் விடுத்து, மண்ணை நீத்து விண்ணுக்கேகி உலகிற் கோருதாரண மாய் நின்ற உத்தமச் சகோதரன்.

'சூதும் வாதும் வேதனை செய்யும்' என்பதைக் கண்டும், 'சூது மற்றெய்து நல்குர வினுக்கியைந்த தூது' என்பதறிந்தும், 'கவறுடல், செம்மை நினையாமை பூண்டார்நெறி' என்பது உணர்ந்தும், தக்கோர்க்குத் தகாத பொய்ச்சூது—அறத்தை அகற்றி, அருளைத் தேய்த்து, விரோதஞ் செய்து, உருவையழித்து, உயர்வைக் குலைத்துத் திருவை யொழித்து, மானத்தைச் சிதைத்து, அன்பை யோட்டி, மறத்தையே பெருக்கு மென்பதை முற்றுமுணர்ந்தும், விதிவசத்தால் 'சிறுமை பல செய்து சீரழிக்குஞ்

சூதா' டச் சம்மதித்த அறன்றருகாளை (தருமன்) யின் எண்ணத்திற்கு மாருகச் செல்லுவதற்குச் சற்று நாணி, பின் வாங்கி வாளா இருந்தவன்.

கற்புக் கருங்கலமான திரௌபதையைத் துகிலுரிகையில் சீறிச் சினங்கொண்டு, “முன்னம் பொறுத்தீ ரின்னம் பொறுமின்” என்ற உதிட்டிரனைத் தூற்றிய பீமனைநோக்கி, அருச்சுனன், “சதகோடி இபமதுகைச் சதாகதி தன் சேயே! நின் பெருமைக்குங் குணத்திற்குஞ் சற்றுமேலாத இத்தகைய கொடிய சொற்பொழிவைத் தருமசீலராகிய நம் மூத்தோருக் குரைப்பது பெரிதும் இழுக்குடையதாகும். ‘இனிய வுளவாக இன்னுத கூறல், கனியிருப்பக்காய் கவர்ந் தற்று’ அல்லவா? நடப்பது நடந்தே தீரும். எல்லாம் தெய்வத்தின் செயலன்றோ? ‘வகுத்தான் வகுத்தவகை யல்லாற்கோடி, தொகுத்தார்க்குந் துய்த்தலரிது’ அல்லவா? கோபம் பொல்லாத குணமுடையது. தீயினுற்சுட்ட புண் ஆறினும் நாவினுற்சுட்ட வடு எக்காலு மாருது. இவை யனைத்தும் நீ அறியாதனவா? கெடுமதி கண்ணுக்குத் தெரியா வஞ்சக நெஞ்சம்படைத்த நம் பகைவர்கள், மோசக் கருத்துடன் சத்திய சந்தராகிய தருமனை, பழிபாவங்களுள் ஆழ்த்தும் கொடிய சூதாட்டத்திற்கு வலுவிலழைத்து, நமதென உள்ள அனைத்தையும் கவர்ந்துகொண்டனர். கண் குத்திற்றென்று தம் கைகளைக் களைவாருண்டோ? தருமமே பூஷணமாகக் கொண்ட நம் மூத்தோர், ஊழின் செயலால், தடுத்தற்கியலாது, தரும நோக்கோடும் கவருடியதற்காக, அவர் தமது நடக்கைக்கு மீறல் இழுக்குடைத்தாம்” என்று

தன் உலக ஞானமும், சகித்தற்றன்மையும் புலப்படுமாறு கலக்கங்கொண்ட கடுஞ் சிங்கமென்ன இடித்துரைத்தனன்.

கண்ணன் தூதுச் சருக்கில், பாகசாதனன் (அருச்சுனன்) பாவத் தொழில்களையே இயற்றிவரும் பங்காளிகளின் செயலைக் கண்டு வெகுளியுற்று, தொடர்ந்து வருமல்லல்களைச் சகித்தற்கு இயலாதவனாகித் தன் குணத்திற்கு மாறாக, "நாடு வேண்டும், நாடொன்றும் நல்காணுகில் ஐந்தூர்வேண்டும், அது மறுக்கின் ஐந்தில்லம் வேண்டும், அதுவுமில்லை யென் பாராகில் அடுபோர்வேண்டும்," எனத் தூதரிடம் தருமன் கூறிய மொழிகளைக் கேட்டு, அங்கிபொங்கிய நயனத்தினனாய், முக்காலங்களு முணரு முகுந்தனையும், முதல்வனையும் பணிந்து, "'பொறுத்துப் பூமியாண்'டது போதும். அக்காலத்தில் கூறியாங்கு, எக்காலத்திலும் தருமத்தையே கூறின், நம் பகையை முடித்துத் தலையெடுப்பது எக் காலத்தில்? வேந்தர் வேந்தே!

'தீண்டாத கற்புடைய செழுந்திருவைத் துகிலுரியச் செய [லொன்றின்றி
நீண்டானே! சரியானே!! நிமலா!!! வென் றரற்றினளாய் [நின்றுசோர
மாண்டார் போலது கண்டுமென்னவையில் யாமிருந்த மாசுதீர
வேண்டுவது மேம்படு நல்லறந்தானே?' [வேண்டாவோ?

ஆமாயின் தான் விரித்த கூந்தலைத் திரௌபதை முடிப்பது என்று? விரோசனன் சுதனை (கர்ணன்) நான் மாய்த்து என் சபதத்தை நிறைவேற்றுவது எப்பொழுது? 'இரப்பது இகழ்ச்சி' என்பது நீவிர் உணராததா? விஜயனிறந்த பின்னரன்றோ நாட்டை நீங்கள் இரந்து பெறல்வேண்டும்.

இலையை இன்று அறுத்தவன் தலையை நாளை அறுப்பானன்றோ? வஞ்சகலோப மூடர் செல்வம் மிகப்படைத்திடின், வல்வினையின் விளைவையும், வெம்பகையின் வலிவையும் பாரார். தெய்வத்தை வழிபடார். கூறுவன அறிந்து கூறார். சுற்றமென்றும் துணையென்றும் நோக்கார். அத்தகைய தீயோரை, எவ்வாற்றானும் நல்லோராக்குதலன்றோ சான்றோரின் கடன்? குருட்டுக் கண்ணுக்கு குறுணிமை யிட்டுமென்ன பயன்? திருந்தாத வைரங்கொண்ட புல்லரிடத்து இரக்கமேன், தாமதேன், வாதேன், தாமதமேன். சடிதியில் சமர் செய்யச் செல்லுதலே உத்தமம். பூசலில் அவர்களைப் புறங்கொண்டு ஓடச் செய்து, மறத்தை யழித்து, அறத்தை ஊன்றுதலே புண்ணியம்" என்று வீராவேசஞ் சொட்டத் தன் மனத்துதித்த அறக்கருத்தை வெளியிட்டான்.

அஞ்சா நெஞ்சு படைத்த அதிவீரனாகலின், தன்னைப் பலருடைய முன்னிலையில் ஏளனஞ் செய்த கர்ணனின் செயற்குத் தாளானாகி, அவனின் சிரத்தைக் கொய்வதாக வெஞ் சபதஞ் செய்துகொண்ட குற்றந் தாளாதவன். கனற்பிறந்த கொடி, உலைவாய் அழல்போல் நெடிதுயிர்த்து உடல் நடுங்கி, உள்ளந் தளர்ந்து, அல்லலுழந்து, வேடன் வலையில் பட்ட மானெனப் பரிதவித்துத் துடி துடிக்க, அதுகண்டு மனங் கொதித்து, 'வானுறு இரவி ஒளிமயங்கி மழுங்கினும், களங்கமில்லாத தூவெண்மதி தன் தண்மையி னின்றும் குன்றினும், விண்ணளாவி நிற்கும் இமயகிரி நிலை குலைந்து அசைந்தாடினும், பகலவன்றன் மைந்தன் கர்ணனை

யும், அவனுக்குரியோரையும், பகைப் புலத்துச் சங்கரியாமலும், பகைமைகொண்ட அந்தன் மதலை துரியோதனனுக்கு உபபலமாய் வருவோரைமுதுகு கொண்டோடுமாறு செய்யாமலுமிரேன்' என்று சீற்றங்கொண்ட கோளரியென்னக் கடுஞ் சபதஞ் செய்துகொண்டு, பழிக்குப் பழிவாங்க முற்படுவானாயினன்.

தன் சபதப்படியே பதினேழாம் நாள் போரில் விஜயன் கர்ணனைக் கொல்ல முன்வந்தனன். அவனைக் கண்டவுடன் தன்னையறியாது மனமிரங்குதலைக் கண்டு பயந்துதைக் கொண்ட கருமத்தைச் செய்தலே நல்லொழுக்கமுடையோரின் செயலெனத் தேர்ந்து, மலையிரண்டு எதிர்த்து மலைந்ததென இருவரும் யுத்தமியற்றினர். முடிவில் கர்ணனை நிராபாரதியாக்கி, அம்பெறிந்து கொன்றனன். அவன் இறந்த பின்னர், உயிர் நீத்த அவ்வுத்தமன், தன்னுடன் பிறந்த மூத்தோனென்பதறிந்து, கரிய மாமுகில் கண்ணனைத் தூற்றிப் பிரேதத்தைக் கண்டு நெடுமூச்செறிந்து, சகோதரனைக் கொன்ற துக்கம் வாட்ட, ஏக்கமுற்று ஓலமிட்டுக் கண்ணீர் சொரிந்தனன். பாவலர் போற்றும் பார்த்திபன் கொண்ட துக்கத்திற்கு அளவும் வகையுமுண்டோ ?

## (விற்றிறன்)

**அ**ருச்சுனன் வில்வித்தையிலும் போர்த்திறத்திலும் வல்ல கைதேர்ந்தவீரனாகலின், சென்ற சென்ற இடமெல்லாம் ஜெயமேகொண்டு, அதனால் விஜயன் என்ற நாமமும் படைக்கப் பெற்றனன். மணிமகுட தாரிகளான மண்ணுளோரும், விண்ணுறைவானவரும் நெருங்க, அருமறைச்

சடங்கான இராசசூய யாகமியற்றத் திறைகொள்ள விஜயன், நால்வகைச் சேனைகளும், அறுவகைப் படைகளும், பலவகை வாத்தியங்களும் தொடர, ஜெயபேரி முழங்க, வடபாற் சென்றனன். ஆங்குள்ள மத்திகைப் புரவி மண்டலேசரும், முரணிய பாரினுள்ள நரபாலரும், பலகிரியிலும் வாழுமந்தரா திபர் பலரும் நடுங்குமாறு, யுக முடிந்தகாலை யெழும்புணரி யென்ன, ஆண்மையுடன் பொருது, அவர்களை வென்று, பேரறக்குலமும் வேரறச்செய்து, 'எத்திசையிலும் இவனுக்கு நிகரான வீரனில்லை' என்று தேவருமியம்புமாறு, சமரவிசயகம்பம் நிறுத்தினன். 'நவகோடி மாமணிகள் பல்வகைப்படு பசும்பொன்னின் கிரிகள் கோடியெனவே கவர்ந்து' திறையாகக்கொண்டு, சோலை சூழ்ந்த தனது செல்வமாநகரை யடைந்த விஜயனின் போர்த்திறன் வியப்பையும், அச்சத்தையும் ஊட்டும். பாரத யுத்தத்தில் பார்த்திபன் வெஞ்சரத்திற் கிரையாகிச் சின்னபின்னப்பட்டுச் சிதைவுற்ற சேனைகள் பல. பூதலம் நடுங்க, எழுகிரிகளும் நடுங்க, போதகத்தொடு திசையெட்டும் நடுங்க, மீதலம் நடுங்க, கண்ட கண்டவர் தம்மெய்களு மெய்யுற நடுங்க, பாதலம் நடுங்கத் தாணிமன்னர் பலரும் அபயம் வேண்டி அடிதொழ, ஆறுபோலுதிரம் அலைபுரண்டோட, அமர்க்களத்துச் சமர்செய்த அருச்சுனனின் வல்லமையும், திடகாத்திரமும் அனைவரும் பெறலரும் பேறுகளன்றோ?

(தவநிலை)

**வே**தவியாசரின் விதிப்படி அருச்சுனன் அப்பெரியாரின் ஆசிகளைப் பெற்றுத் திரிபுரமெரித்த விரிசடைக்

கடவுளை நோக்கித் தவஞ் செய்து பாசுபதாஸ்திரம் பெற்று வரத் துன்பத்தைப் பாராது, மணிமுடி விலக்கிச் சடைமுடி தரித்துப் பட்டாடை களைந்து மாவுரி போர்த்துத் திரு நீறணிந்து, காண்டீவ வில்லைக் கரத்திலேந்திப் பெரியோரைப் பணிந்து, அண்ணனை வணங்கி, விடைபெற்றுக் காமிய வனத்தை நீத்துக் கொடிய கல்லும் மலையும், புல்லும் புதரும், காடும் மேடும், நதியும் மடுவும் கடந்து, சக்தி சமே தராய்ச் சர்வேசன் வீற்றிருக்கும் புண்ணிய சொரூபமாகிய கைலையங்கிரியைச் சேர்ந்தனன்.

ஆங்கே, நாற்புறமுந்தீ யெழ நடுவேயமர்ந்து, மனத்தை யடக்கிப் புலன்களை யொடுக்கிக் களங்கமற்ற தூய்மையோடு, ஈசனின் இணையடி நிழலைத் தியானித்தவண்ணமாய் ஆனந் தக் கண்ணீர் அருவியென ஓட, சதமற்ற உடலைத் துரும் பென மதித்து, மெய்ம்மறந்து, பஞ்சாக்கினியின் மத்தியிலி ருந்து, கொடுந்தவம் புரிந்தனன். தவத்தைக் கெடுக்கவந்த நிருதர்களும் அவன்பக்கலிற் செல்ல அஞ்சியவர்களாகி நடுங் கிச் சென்றனர். பங்கமிழைக்கத் துரியோதனனு லேவப் பட்டு ஏனமாய் வந்த மூகாசூரனைக் கொன்ற உரிமைக்காக வேடரூபங்கொண்டுவந்த 'கங்கைவார் சடைக்கரந்த' ஐய னோடு வாது செய்து, வில்லாலடித்து, பின்னரவனது காக்ஷி பெற்றுத் துதித்து வில்லைப்பெற்றேகினன். அருச்சுனனின் தெய்வ பக்தியும், மனோசக்தியும், வேள்வித்திறனும் இங்கும் விளங்குதல் காண்க.

# III

## (அறமுரைத்தல்)

**பா**ரத யுத்தாரம்ப காலத்தில் புண்ணிய பூமியாகிய குரு நிலத்திலே யுத்த முனையில் போர் கருதி, அணிவகுத்து ஆயத்தமாக ஆயுதபாணிகளாக நின்ற இணையற்ற வீரர் களைக்கொண்ட மகத்தான இருதிறத்துச் சேனைகளும்; படைத்தலைவர் வீடுமரும்; ஆண்மையிலும் ஆண்டிலும், அறிவிலும் ஆற்றலிலும் முதியரான துரோணரும்; வெற்றிக் கழலுக்குரிய கிருபர் முதலிய ஆசிரியர்களும்; கொடையிற் சிறந்த கர்ணனும்; வெற்றியே பூஷணமாகக் கொண்ட அசுவத்தாமனும்; தருமசிந்தனையுள்ள விகர்ணனும், துரியோதனுதியாகிய கிளைஞர்களும், புஜபல பராக்கிரம சாலிகளான யுயுதானனும், விராடனும், துருபதனும், திருஷ்டகேதுவும், சேகித்தானனும், காசிராஜனும், புருஜித்தும், குந்திபோஜனும், சைப்பியனும், வெற்றிமாலை சூடும் யுதாமந்யுவும், எதற்கும் சலியாத திடநெஞ்சுடைய உத்தமமௌஜனும், சுபத்திரையின் செல்வச் சிறுவன் அபிமன்யுவும், திரௌபதையின் புதல்வர்களான உப பாண்டவர்களும்; யுத்த சகாயத்திற்கு வந்த பிறநாட்டு மன்னர்களும்; மாதுலரும், மாமன் மார்களும், நேயமுற்ற நண்பர்களும், கூலிக்குச் சண்டையிடவந்த எளியோர்களும், ஆசிரியப் புதல்வர்களும், பலபல கோடி ரதகஜ துரக பதாதிகளும் இருக்கக்கண்டு 'மணித்தார் புய வாசவன் மைந்தன்' (தனஞ்சயன்) மனமுருகித் துக்கமுற்று, செய்வது யாதெனத் தோன்றாது

திகைப்புடன், கண்ணபிரானை நோக்கி, "மணி வண்ணா! யுத்த சின்னங்களோடு போருக்குச் சித்தமாக நிற்கும் என் முன்னுள்ள உறவினர்களைக் காணவும், எனதங்கம் தளர்ந்து நாவுலர்ந்து, மெய்ந்நடுங்கி, மயிர்சிலிர்த்து, உடல் அனலுற்று வாடக் காண்டீவமும் கையினின்றும் கீழே நழுவி வேரற்ற மரமே போன்று விழுகின்றதே. ஐயனே! நிலைத்து நிற்கவும் இயலாது என் மெய் பதறுகின்றது. பற்பல எண்ணி என் மனமும் ஏங்குகின்றது. எங்கும் துன்னிமித்தங்களே எனது கண்ணுக்குத் தோற்றுகின்றன.

"கேசவா! உற்றோர் உறவினரையும், பெற்றோர் பெரியோரையும், மற்றுமுள்ள பல ஜீவன்களையும் கொன்று நமனுலகனுப்பி, அப்பால் பிணக்காட்டை-யாண்டு உதிரச் சேற்றில் உன்னதமாயிருத்தல், நன் மன்னனின் குணமல்ல. இவர்களை அழிப்பதால் எனக்குறும் பயன்கள் யாவை? கண்ணா! மனமும் சொல்லும் தொழிலும் வெவ்வேறாக உள்ள நம் பகைவர்கள் இன்னல் பல விழைக்கினும், 'இன்னா செய்தாரை அவர் நாண நன்னயஞ் செய்துவிட' லன்றோ சன்மார்க்கம். 'சாந்தனையும் தீயனவே செய்திடினும்' அவரைத் தம்மா லாந்தனையும் காப்பதன்றோ அறிவுடையோர் அறிவைப் பெற்ற பலனாகும்? நல்லவை நாடி-இனிய சொலினன்றோ அல்லவை தேய அறம்பெருகும்? அவருக்கன்றோ 'துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும்?' இக்கொடுமையாலுறும் வெற்றியும், ஆட்சியும், அநித்திய மான சுகபோகங்களும், கோவிந்தா! யான் பெறுவதால் பயன் என்ன? நிலையற்ற அவ்வாழ்வும், சீர்குலையும் இச்

சைகளும், எனக்கு எதற்கு? மதுசூதன! தீவினை யகற்றுதல் தருமமாயினும், உற்றோரெல்லாம் உறவினரல்லராயினுங் குற்றமே பார்க்கில் சுற்றமேது? கூர்த்து நாய் கௌவிக் கொளக் கண்டும், தம் வாயால் பேர்த்து நாய் கௌவினார் ஈங்குண்டோ? கேட்டைக் கெடுபவனன்றோ நினைப்பான்? புத்தி ஆத்திரக் காரனுக்கு மட்டன்றோ? நுண்ணிய கருமத்தை எண்ணித் துணியாவிடில், 'பண்ணிய பாவத்தைப் பட்டுத் தொலைக்க' வன்றோ நேரிடும்?

(மன்னுயிரோம்பலின் உயர்வு)

"ஜனார்த்தன! இப்புவியில், நீடித்து இருப்பது பொய்யும், என்றும் இறப்பது மெய்யுமாகலின், உள்ளளவும் நன்மையைக் கடைப்பிடித்து, 'உள்ளதைக் கொண்டன்றோ ஊராள வேண்டும்!' 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்தா'கலின், தான் கெடினும் தக்கார் கேடெண்ணுவது தகாதே. பரந்தாமா! இம்மண்ணில், மானிடர் அறிந்து தமக்குத் தாமே துன்பஞ் செய்து கொள்வதில்லை ஆகலின், தானல்லாத பிறவற்றின் துன்பத்திற்குத் தான் ஏதுவாயிருத்தலும், இம்சையின்பாற் படுமன்றோ! உடலை வாட்டி வருத்தி வேதனையுறுத்த வேண்டுமா? நரவேதனையினும் கொடிய மனவேதனைக்குக் காரணமாயிருப்பின், அதுவும் கொடிய இம்சையே யன்றோ? உடலின் பிணி மருந்தால் நீங்குமாயினும், மனப்பிணிக்கு மருந்தேது? உயிர்ச்சேதமின்றி மனப்பிணிக்கு ஏதுவாயினும், அவர் பாவம் பெருக, எரிவாய் நிரயத்தினன்றோ உழலவேண்டும்?

அங்ஙனம் இயற்றாதிருப்பதை வற்புறுத்திக் கூறி, திரிகரண சுத்தியோடிருந்து, பற்றுக்களைக் கடந்துநிற்கும் கடவுளின் சிருஷ்டிக் குட்பட்ட பிற ஜீவனின் துன்பந் தன் துன்பமெனத் துணிந்து, 'தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான் பிறி—தின்னுயிர் நீக்கும் வினை' என்பதுணர்ந்து, அறிந்தோ அறியாமலோ பிறவற்றிற்கு இன்னல் விளைவியாதிருந்து, உலகம் உள்ளளவும் கருணைவள்ளலென்ற நாமம் படைத்தவான்றோ, மோக்ஷ சாம்ராஜ்யத்தையடைந்து, வீட்டின்பமெய்தி, நித்தியானந்த சுக ஜீவிகளாக இருப்பார்கள்.

"நாராயணா! அங்ஙனமின்றிச் சுய நலங்கருதிப் பிறர் துன்பந்தனைக் கனவிலுங் கருதாது, பழிபாவங்களுக்கு ஆளாகி, உஜ்ஜீவித்திருப்போர், கேவலம் மரணவேதனையினுங் கொடிய நரகவேதனைக் குட்பட்டன்றோ உழலவேண்டும்? மாதவா! இவ்வுண்மை மகத்துவங்களை இடித்துரைக்கும் வேதாகமத்தின் தத்துவங்களை உணர்ந்தும், அறியாதவர்களைப்போன்று, யுத்தமியற்றி, உறவினர்களைக் கொன்று, நாடாளுமவர்க்கு இன்பம் எவ்வாறு இருக்கும்? தீக்குணத்தோராயினும், பிறரை அடித்துக் கொள்ளுவதிலும், அன்பாற் கொடுக்கக் கொள்ளுவது பதின்மடங்கு மேலானதன்றோ? 'அஞ்சுவ தஞ்சாமை பேதைமை' யாகவின், ஏ பத்மநாபா! "குரவரையுங் கிளைஞரையுங் குலத்துரிய துணைவரையுங் கொன்று போர்வென்—றரவ நெடுங் கடலாடை யவனியெலாந்தனியாளு" மிச்சையினும், பிச்சையெடுத்துண்பதே சாலவும் சிறந்த பெருவாழ்வென்று அடியனேன் கருத்திற்குத் தோற்றுகின்றது.

## (யுத்தத்தின் கொடுமைகள்)

" **தா**மோதரா! ஆராதிக்கவேண்டிய பெரியோர் பலரையும், அழிக்கக் கூடாத ஆசிரியர்களையும், நெருங்கிய பந்துக்களையும், நிரபராதிகள் பலரையும், கொன்று நாசஞ் செய்து அரசாண்டிருப்பது தருமமாகுமா? அதிக ஆசையால் அதிக நஷ்டமே விளையும். நாட்டைக்கருதி நல்லவை துறந்து அவரென்னை நமனுலகனுப்புவார்களாயின் அதனைச் சர்வ சம்மதமாகவே ஏற்றுக்கொள்ளுவேன். பரம மாஞான யோகப் பதியுறையும் ஞானநாயகா! 'ஓவியத் தெழுத வொண்ணு உருவத்தாய்!' நீ அறியாத பொருளுமுண்டோ! சண்டையால் உண்டாகும் இழிவுகள் பலப்பலவே. தேசஞ் சீர்குலைந்து நாசமாகும். குலமுங் குடியும் வேராறும். தொன்று தொட்டு வந்த பழக்க வழக்கங்கள் பாழடையும். தருமந் தலையோங்காது. அறம் குன்ற மறம் பெருகும். நேசமும் பாசமும் விலகிப்போம். உயிர்ச் சேதங்கள் உளவாகும். இன்பம் நீங்கத் துன்பம் எங்கும் நிறையும். ஆடவரும் பெண்டிரும் குணபேதங் கொள்வர். அதனுல் அனுசாரங்கள் ஓங்கும். வருணபேதங்கள் அழிந்திடும். பிதுருக்களுக்கு உரிய கடன்களைச் செய்யார்.

" தேவர்சிகாமணியே! இத்தீங்கு களனைத்திற்கும் காரணமாய் உள்ளவன் ஈடேறுவது எக்காலத்தில்? தீயவற்றைத் தீயினும் அதிகமாக அஞ்சவேண்டியிருக்க, அவற்றைச் செய்ய யான் சம்மதிப்பேனு? அருட் செல்வமன்றோ செல்வங்களனைத்திலும் மேலான செல்வம். அருளில்லார்க்கு

அவ்வுலகம் எங்ஙனம் கிட்டும்? ஆதலின், மூன்றுலோகமும் பெறுவதாயினும் கொடிய இக்கோர யுத்தமியற்ற யான் இசையேன். ஆயுதமற்ற என்னை அவர்களே கொன்று வீழ்த்தட்டும்," என்று இவ்வாறாக இரங்கக்கூறி மனங் குழைந்து, அனலென எரியும் சிவந்த கண்களில் நீர் ததும்ப, வில்லை அப்பாலெறிந்து, தேரின் மீது சோகமுற்று மூர்ச் சித்துத் தியங்கி மயங்கி விழுந்தனன். கருணைக் களஞ்சிய மான இவனது கோதில்லாக் குணமும், ஜீவகாருண்யமும், மெய்யன்பும் யாவர் மாட்டும் உளவாதல் மிகவும் அரிய தாகும்!

## (தேறுதலும் தெளிதலும்)

இங்ஙனமாகத் திகைத்து நின்ற பாண்டு மைந்தனை மதுசூதனன் நோக்கி, "ஐயிரு நாமத்தோனே! சுவர்க் கப்பேற்றை அடைதற்கும், அழியாப்புகழுக்குப் பாத்திர னுவதற்கும், உன்னைவிடாது தடைசெய்யும்படி வீரர்களுக்கு ஒவ்வாத, இவ்வித இரக்கமும் தளர்ச்சியும் உன்பக்கல் அண் டியதற்குக் காரணம் யாது? பகைவர்களைப் பழிவாங்கும் பார்த்தா! தைரியத்தைக் கைக்கொண்டு முன்னுக்கு வா. மனமழுங்கி உன் நிலைக்குச் சற்றும் ஏலாதவாறு பின் செல் லற்க. தளர்ச்சி உன்னை அணுகாவாறு அகற்றி, ஆண்மை யோடும் எழுந்திரு" என்றனன்.

என்றலும் அருச்சுனன், "முரணியோரை முதுகு கொண்டோடச் செய்யும் முகுந்தா! இத்தீயபோரில் அடிய னேன் எனது அருமை ஆசிரியர்களை, மனம் நாணுது, கையில்

வில்லெடுத்து நாணேற்றி எங்ஙனம் தாக்கி வதைத்திடுவேன்? தூய மகான்களாகிய இப்பெரியோர்களைக் கொன்று, அவர் தமது உதிரத்தில் உலாவி, இப்புவியில் இருப்பதினும் இரந்துண்டு வாழ்வதன்றோ நல்வழி? யுத்தத்தில் வெற்றி எவருக்கு உளவாகும் என்பதைத் துணிந்து எவ்வாறு உரைத்திட இயலும்? எவரைக்கொல்ல என் மனம் பின்வாங்குமோ, அவர்களின் முன்னிலையில் நின்று, மனம் துணிந்து எவ்வாறு அவர்களை மண்ணுக்கு இரையாக்குவேன். எனது இன்பங்களைப் பகுத்து நுகருதற்கு உரிமையாளரான அவர்களை நமனுலகனுப்பிய பின்பு அரசாளின், இன்பந்தான் பின்னர் எவ்வாறிருக்கும்? செய்வது யாதெனத் தெரியாது எனது இயற்கைக்கு மாறாகத் திகைத்து நிற்கும் என்னை ஈடேற்றுவது உன் பொறுப்பு.

"மெய்யனே! உன்னையே தஞ்சமெனச் சரணடைந்தேன். அடியேன் பற்றவேண்டிய நன்னெறி யாதென்பதை உறுதியாக எனக்கு நவிலுவாய். என் சிந்தையைக் கலக்கி வாட்டும் வருத்தத்தைப் போக்கும் வகையறியாது உழலுகின்றேன். இப்பகையை முடித்தலால், கிடைத்தற்கரிய ஆட்சிச் செல்வமும் தேவலோக வாழ்க்கையும் எனக்குக் கிட்டுமாயினும், என் மெய்யை எரித்து மனத்தை மயக்கும், இத்தீய செயலுக்கு யான் இசைந்திடேன். போரும் புரிந்திடேன்" என்றிவ்வாறாகக் கூறித் தனது வீரங்குன்றப் பின்வாங்கி நின்றனன்.

நின்ற அருச்சுனனை நோக்கிக் கோவிந்தன், இருப்பன இறந்து, இறந்தன பிறக்கும், கரும சம்பந்தமான பிறவியின்

இழிவையும், மனிதரின் மேலான கடமைகளையும், உலக நன்மையைக் கோரிச் செய்யும் நற்கருமங்களின் மேன்மையையும், அதனாலடையலாகும் ஊதியங்களையும், ஞானிகளின் தன்மையையும், என்றும் அழிந்திடாத பரமாத்மா ஜீவாத்மாக்களின் தாரதம்மியங்களையும், முக்குணங்களின் பேதத்தையும் கூறி, க்ஷத்திரியனாகிய தனஞ்சயன், உலகத்தில் தருமம் தழைத்தோங்குமாறு செய்ய, வில்லெடுத்துப் போர் புரிதலே உத்தம மார்க்கமெனக் கீதா உபதேச மொழிகளைக் கூறினன். அது கேட்டு அருச்சுனன் உண்மைப் புருஷார்த்தங்களை உணர்ந்து,—திகைத்து எழுந்து,

"மாதுலனாகியும் மேதிலனாகியும் வஞ்சன் கஞ்சன் வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலை பொழி பாலொடு போதரவுண்ட புயல்
மாதவ யாதவ வாசவ கேசவ மாயாவாயா மதுசூதா [வண்ணா !
ஆதியு மந்தமுமாகிய நின்புக ழல்லா துரையேனடி யேனே"

என்று கைகூப்பித் துதித்து, 'மறையுங் காணக் கரியவனை'ப் 'பாண்டவர்கள் புரிந்த தவப்பயனாகி யவதரித்துப் பகைத்து மேல்மேல், மூண்ட வினை முழுவதுவு முனைதோறு முரண் முருக்கி'க் காத்தருளிய மெய்யனைப் பல்காலும் போற்றி, வில்லுங் கையுமாக எழுந்து, யுத்த மியற்ற லாயினன்.

## (புத்திரவாஞ்சை)

**ப**தின்மூன்றும் நாட் போரில், தன் மைந்தன் அபிமன்யு இறந்த செய்தியைக் கேட்டுப் புத்திரசோகங்கொண்டு இடிவிழுந்த பனையென்ன நிலத்திற் சாய்ந்து, "அருமை மைந்தா ! விண்ணாட்டின் ஆடம்பரங்களைக்காண உலகை விட்டுச் சென்றனையோ ? தாதையை நினையாது அளகைக்

கோனது இந்திரலோகம் பெரிதெனக்கருதி உடலை நீத்திட்டனையோ? யாது மறிகின்றிலேனே! உன்னை இனிக் காண்பது எக்காலத்தோ? உன் சொற்கேட்டல் இனி எப் பிறவியிலோ! துயரத்தில் என்னை ஆழ்த்தி உன் உயிரைக் கவர்ந்திட்ட எதிலனாகிய சயித்திரதனைக் கொல்லாது இனி விடேன்" என்று கூவியழுத நற்றந்தை. பெற்றவர்களுக்கன்றோ பிள்ளைகளைப் பிரிந்திடுவதின் வருத்தம் தெரியும்!

## (செயல்களின் சிறப்பு)

முடிவாகக் கூறுமிடத்து, புசித்தோரை உய்விக்கும் நெல்லுக்கு உமியும், தண்மையான நீருக்கு நுரையும், புல்லிதழ் பூவிற்குமிருத்தலை நிகர்க்க, நற்குண நற்செய்கைகளைக் கொண்டிருந்தும், அரசகுமாரனாகலானும், வீரனாகலானும், அருச்சுனனிடத்துப் பாதகரைக் கொலை செய்தல், பழிக்குப்பழி வாங்குதல், தீயோரைக் கண்டித்தல் முதலிய கொடுங் குணங்களும் பொருந்தி யிருந்தன. அவனின் வாளால் வீழ்த்தப்பட்டு மாண்டோர் பலர். வெற்றி முரசு முழங்கச் சித்திராங்கனை யடக்கியவன். பிறருக்கெவ்வமியற்றி வந்த அவுணர்களைக் கண்டதுண்டமாக்கிய கர்ணகடூரன். துன்பத்திற்கு உறைவிடமாயிருந்த பூரிசிரானுடைய புஜத்தைத் துண்டித்த புண்ணியன். மற்றுமவன் தன்னை அண்டிய மயனைக் காத்த அருளாளன். நாரதர் விதித்த நிபந்தனைக்கு மாறாகத் தருமன் திரௌபதையுடனிருந்ததை, பார்ப்பனனின் துயரைக் களையுந் தரும காரியந் தூண்ட வில்லெடுக்க விரைந்து சென்று, பார்த்த பாவம் நீங்கத் தீர்த்தயாத்திரை செய்வதே உத்தமமெனத் தேர்ந்து, அண்

ணன் கூறிய அன்பு மொழிகளைக் கேளாஞகிப் பணிந்து விடைபெற்றுச் சென்ற நற்புருடன். தன்னை இச்சித்துக் காமங்கொண்ட அரிவையர் பலரையும் மணந்த மணவாளன். நாக கன்னிகையான உலூபி யென்பவளின் துயரைப் போக்கிக் கடிமணம் புரிந்துகொண்ட காளை. எழில்வாய்ந்த சித்திராங்கதையை மன்றல் செய்துகொண்ட காமரூபன். வாசுதேவனின் தங்கையாம் சுபத்திரையை விவாகஞ்செய்து கொண்ட தீர்த்தன். இந்திரலோகத்து ஊர்வசியின் கூற்ருல் பேடியுருக்கொண்ட அனங்கன். அஞ்ஞாதவாசத்தில் பிருகந்நளையென்ற பேடியுருவோடும் அந்தப்புரத்துக் கன்னியர்க்குப் பாடல் கற்பித்து வந்த ஏழிசையிலும் வல்ல கானப்பிரியன். அக்கினியின் அருளால் ஒருவராலும் வெல்லுதற்கியலாத ரதத்தையும், காண்டீவமென்ற வில்லையும், அட்சயத் தூணியையும், வானரத் துவசத்தையும், பெற்ற விஜேதச் செயலினன். பசித்தீமூண்ட எழுநாவினன் வேண்டியாங்குக் காண்டவ தகனஞ்செய்யச் சம்மதித்து, அவ்வனத்தினின்றும் விலங்கினங்கள் வெளியெங்கும் செல்லாவாறு, சுற்றிவந்து காவல் புரிந்திட்ட சொற்றிறம்பாதவன். அனலையவிக்க வான் சொரிந்த இந்திரனின் செயலைக்கண்டு சினந்து சரகூடங்கட்டி, மழையைத் தடுத்திட்ட சேயன். அந்திக்காலத்தில் கண்ணன் இறந்த செய்தி கேட்டு, ஆற்ரெணுத் துயரமெய்தி, அழுது அவனின் ஈமக் கடன்களைச் செய்திட்ட செய்ந்நன்றி யறிவோன். தன் பலங் குறைந்த முதுமைப் பருவத்தில், வில்லைக் கடலிலிட்டு மனோசக்தி குன்ற, உடல் ஒசிவுற, உயிரை நீத்திட்ட உத்தமன்.

## 2. கல்வியின் உயர்வும் புத்தகாலய இயக்கமும்.

### I

(சற்றலின் மேன்மை)

கல்வி கற்றலின் பயன்களைக்குறித்து, நாகரீக மேம்பாடுற்ற இக்காலத்தில் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. மக்கள் விருப்பித்தேடும் கல்வி, செல்வம் என்ற பொருள்கள் இரண்டனுள், என்றும் அழியாது நிலைத்து நிற்பது கல்விச் செல்வம் ஒன்றே என்பதும் கூறவேண்டியதில்லை. அக்கல் விச் செல்வத்தால் பெறலாகாத பொருள்கள் ஒன்றுமில்லை. கல்வியின் பயனைக் கொண்டவர்கள் செல்வமிகப்படைத்த சீமான்களாகவும், தேக ஆரோக்கிய முள்ளவர்களாகவும், எவ்விதத்திலும் மேன்மைப்பட்டவர்களாகவும், இருப்பார் களென்பது உண்மை. அறிவு வெள்ளம் பெருக்கெடுத்து அறியாமையாகிய இருளைப் போக்கி, ஞான ஒளியை வீசி, மேன்மையை உண்டாக்குமாயின், நாடு முன்னேற்ற மடைந்து, அதன் மக்களும், க்ஷேமமுற்று நல்வாழ்வை எய்துவார்களென்பதில் ஐயமில்லை! பிணியை விலக்கவும், நல்வழியைப் பற்றவும், வறுமையை அகற்றவும், மனோதிட மும் வல்லமையும் பெறவும், கல்விச் செல்வம் பெரிதும் பயன்படும். ‘கல்விமானே குணவானாவான்’ என்பர், ஆங் கிலக் கலைவாணர் பேகன் என்பவர். மேனாட்டாரேயன்றி நம் நாட்டவரும், நம் நாட்டிலும், எக்காலத்திலும் சீரும் சிறப்பு முற்று விளங்கிய தென்னாட்டவரும், கல்வியின்

உயர்வையும், கற்றலின் மேன்மையையும், வெகு விரிவாகப் புகழ்ந்து கூறியுள்ளவை காண்பதற்குரியன. கலைமகளின் அருளைப்பெற்ற கம்பரும், புகழேந்தி, குமர குருபரர் முதலிய பாவலர் பலரும், கல்வியாகிய செல்வத்தைப் பெற்றதுபற்றியே தங்களின் பூத உடம்பு நீங்கப்பெற்றும் புகழுடம்பை என்றும் அழியாவாறு இட்டுச் சென்றனர். இக்காலத்திலும் கல்வியின் பெருக்கால் மாட்சிமையுற்றோர் கணக்கிலடங்காதவருள்ளனர். சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, மாசறக் கற்றவனே, சகல புவன சராசரங்களையும் ஆண்டு அனுபவிக்கும் மன்னனிலும் சிறந்தவனாவான். தன் தேசத்திலன்றிப் பிறவிடத்தில் நன்கு மதிக்கப்பெறாத மன்னனைப் போலன்றிக் கற்றவனுக்கு எத்தேசத்திலும் எக்காலத்திலும் சிறப்புண்டு. அது பற்றியே, 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்றனர் பாண்டிய நாட்டை யாண்டுவந்த மன்னரும்.

## (கற்றலின் வகை)

கண்ணெனத் தகும் கல்வியே முக்திக்கு முதல் வித்தாகலின், ஆராய்ந்தெடுத்துக் கற்றற்குரிய நூற்களைக் கசடறக் கற்றல் வேண்டும். கற்ற அளவு அறிவும் பெருகும். தான் கற்ற நூலளவே ஒருவனின் நுண்ணறிவு ஆகுமென்பர். கல்விக் கடலுக்கோ கரையென்பதில்லை. பல துறைப் பட்ட கல்வி அனைத்தையும் கற்று வல்லபண்டிதனாதல் சாமானியமான காரியமன்று. ஆராய்ந்தெடுத்துக் கற்றற்குரிய நூற்களைக் கசடறக் கற்றலே உசிதமானது. அக்கற்றற்குரிய நூற்களிலும் 'குணம்நாடிக் குற்றமு நாடியவற்றுள்

மிகைநாடி மிக்க கொளல்' நோக்கமாதல் வேண்டும். அக் குணங்களைக் கைக்கொண்டு, தாம் கற்ற வழி நிற்றலே எவ்விதத்திலும் சர்வ சிலாக்கியமானது. இல்லையேல் கற்றலில், கல்லாமையே நன்றாகும். அதுபற்றியே, அவ் வவர்களுக்கு ஏற்ற நன்னூற்களைப் படித்தல் அவசியமா மென்று கூறுவர். நல்ல நூற்களைக் கற்று, அதன்படி ஒழுகி நற்புத்தியைக் கொண்ட அப்புத்திமானே பலவாறு வான். அவன் செய்வன திருந்தச் செய்வான். பெரி யோரைத் துணைகொண்டு நிற்பான். சினமென்பது அவனைக் காணவும் அஞ்சும். ஈகை, வாய்மை, அடக்கம், அருள் முதலிய நல்லொழுக்கங்களே அவனுக்குப் பூஷணமாக அமைந்திருக்கும். இன்சொல்லு முடையவனவன். பணி வும் பெருமையும் அவனை விட்டு அகலாது நிற்கும். அறிவு கொண்டதன் பயனாகத் தனது வாழ்க்கைநாட்களை இனிதே கழிக்க வழிதேடுவதோடு, புகழுக்குப் பாத்திரனுமாவான். நீதிநெறி விளக்கமென்ற புகழ்மிக்க தமிழ் நூலில்,

'அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங் கில்லை
சிற்றுயிர்க்குற்ற துணை'

என அதன் ஆசிரியர், குமாரகுருபர சுவாமிகள், கற்றலின் சிறப்பையும், கல்வியின் உயர்வையும், சுருங்கக்கூறி விளங்க வைத்துள்ளனர்.

## (செல்வத்திலும் கல்வி சிறத்தல்)

இத்தகைய பெருமைவாய்ந்த கல்விச் செல்வத்தை மக்களாகப் பிறந்த எவரும் அவசியம் பெற்றிருத்தல் உசித

மென்பது கூறவும் வேண்டுமா? செல்வத்தைப் போலன்றிக் கல்வி, மன்னனின் முனிவால் மாய்ந்திடாது. கள்வரால் களவாடப்படாது. பங்காளிகளின் பாகத்திற்கு இலக்காகாது. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க நிறையுமேயன்றிக் குறைவுறாது. சகடக்கால் போன்று, சுழன்றுவரும் செல்வத்தைப் போலல்லாது கல்விதன்னைப் போற்றுவாரைக் கணமும் விட்டிடாது. தன்னை உடையவனைப் பிரபலமாக விளக்கிடும். தீயினால் அதற்குத் தீங்கு யாதும் நேரிடாது. ஒருவனுக்குக் கல்வியழகே நிலைத்துள்ள நல்லழகாகும். கிடைத்தற்கரிய இதன் பெருமையை உணர்ந்தே தமிழ் மூதாட்டியார் (ஔவை) இளமைதொட்டே இதனைப்பெற முயலவேண்டுமென்று "இளமையிற் கல்" என்றனர். மற்றும், ஐந்தில் வாராதது ஐம்பதில் வாராது என்பதுபற்றியுமாம். அறநெறிச் சாரமென்ற நீதி நூலிலும்,

'எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை—அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை—கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்'

என முனைப்பாடியாரும் கூறியுள்ளனர்.

## II

### (புத்தகசாலைகளின் அவசியம்)

கற்றற்குரிய நூற்களை இலகுவாகச் செல்வர்களைப்போல், யாவரும் வாங்குவதென்பது அசாத்தியமான காரியம். செல்வர்களும் நூற்கள் அனைத்தையும் தாமே

வாங்கிவைத்துப் படித்தல் என்பதும் இயலாத விஷயமே. அதுபற்றியே, யாவருக்கும் பயன்படக் கூடியதும், யாவரும் படிக்கக் கூடிய வசதிகளையுடையதுமான பொதுப் புத்தக சாலைகள் இருப்பது மிகவும் அவசியமாகின்றது. இத்துறை யைப்பற்றியே புத்தகசாலை இயக்கங்களும் உழைத்துவரு கின்றன. சாதாரணமாக மனிதர்களை மிருகங்களினும் உயர்த்திக் காண்பிப்பது பகுத்தறிவே. 'மக்கடாமே யாறறிவுயிரே' என்றார் தொல்காப்பியரும். இயற்கையா கக் கொண்டோருக்கன்றிப் பிறருக்கு அத்தகைய நல் லறிவை மேன்மேலும் விருத்திசெய்து கொள்வதற்கு முக் கிய கருவியாக அமைந்துள்ளது கல்வியே என்பது முன் னரே கூறப்பட்டது. அக்கல்வியை யளிப்பவை, உயிர்க்கு உறுதிப்பொருள்களை யுணர்த்திடும் அறநூற்கள் முதலியன வும், அவற்றிற்குச் சாதகமாக நின்று உதவும் இலக்கண நூற்கள் முதலியவையுமாகும்.

கல்வியை விரும்பிக் கற்கும் மாணாக்கர்களுக்கும், கல் வித் துறையில் நற்றேர்ச்சி பெற்றிருக்கும் வித்வான்களுக் கும், இனிக் கற்க முயலும் வித்தியார்த்திகளுக்கும், புத்த கங்களே இன்றியமையாதவை யாகின்றன. புத்தகங் களின்றிக் கற்கப் புகுவோர், கோலின்றி நடக்கக் கருதிய குருடரைப் போலவும், நாடின்றி ஆளத்தொடங்கிய அரசனைப் போலவும், பயன் சிறிதும் அடையாது போவர். தொழில் ஒன்றைச் செய்யப்புகுந்த ஒருவனுக்கு அத்தொழிலுக்குரிய வசதிகளும், கருவிகளும் வேண்டுவனபோல, கல்வி கற்க முயலுபவர்க்குக் கற்றற்குரிய புத்தகங்களும், அப்புத்தகங்

னைச் சற்றேனும் சாந்தமாக அமர்ந்து கற்றற்குரிய வசதி யான இடமும் அவசியமாகின்றன. அறிவைப் பெருக்கும் சிறந்த புத்தகங்களைத் தொகுத்துவைத்துப் பலருக்கும் பயனளிக்கும் வண்ணம் செய்திடின், கல்வி அபிவிர்த்தி யடைய வழி ஏற்படுகின்றது. நற்போதனைகளைப் புகட்டி நல்லறிவையூட்டி, நன்னெறியில் ஒருவனை நடக்குமாறு செய்யவல்ல புத்தகக் கூட்டத்தைத் திரட்டிவைத்துப் படிக் கும் பலருக்கும் நற்பயனளிக்க இருப்பதே புத்தகசாலை யெனப்படும். அத்தகைய புத்தக சாலைகள் நாடெங்கும் பரவிக் கிடக்குமாயின் அதனால் அடையலாகும் பயன்களைக் கூறி முடியாது.

## (மேனாட்டில் புத்தகாலயங்கள்)

தற்காலத்தில் ருஷியா தேசத்தில் அரை லக்ஷம் புத் தகாலயங்கள் உள்ளனவாம். அமெரிக்காத் தேசத்தில் மூன் றுமைலுக்கு ஒரு புத்தகாலயம் இருப்பதாகக் கூறு கின்றனர். ஸெக்கோ (Czecho) என்ற நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சாலை பொருந்தி உள்ளதாம். டென் மார்க்குதேசம் முன்னடைந்ததற்குக் காரணம், அந்நாட்டினர் புத்தகசாலைகளைப் பெருக்கி, அவற்றை நல்லவழியில் உபயோ கித்து, அதனால் மடமையைப் போக்கும் மருந்தாகிய கல்வி யின் பயிற்சி அதிகரிப்பித்து, நற்றேர்ச்சிபெற்றதால் என்பர். இவ்விடங்களிலன்றி, மற்றும் பல்கேரியா, ருமேனியா, போலண்டு, பின்லண்டு, ஸ்வீடன், இடாலி, பெல்ஜியம், ஜப்பான் முதலிய பிறநாடுகளில் ஏராளமான புத்தகசாலை

கள் உள்ளனவென்பது படித்தவர்கள் உணருவர். அந்த நாடுகளில் படிப்படியாக இப்புத்தகாலய இயக்கம் முன்னடைந்த விதமும், அவை முடிவில் பிரபலமாகிச் சீர்பெற்று ஒழுங்காக நடைபெற்றுவரும் பிற விஷயங்களும், சென்னை புத்தகாலயப் பிரசார சங்கத்தில் வெளியிட்டுள்ள புத்தகங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

## (ஆதி இந்திய புத்தக சாலைகள்)

ஆதிகாலத்தில் அறிவென்பது புத்தக ரூபமாக வெளிப்படுத்தப்படவில்லை. புத்தகங்களைக் கற்றே அது பெருக்கடையவுமில்லை. ஆயின், இக்காரணத்தைக் கொண்டு அக்காலம் நாகரீகத்தில் பின்னிட்டு இருந்ததெனக் கூறுதலும் இழுக்குடைத்தேயாகும். கற்றுணர்ந்த பெரியோர் வாயிலாக் கற்றறிய விரும்புவோர் கேட்டுணர்வதே பரம்பரை வழக்கமாக அமைந்திருந்தது. அறிவின் பெருக்கும் ஒருவருக்கொருவர் காதாற்கேட்டு வளர்ந்து வந்தது. இக் காரணம் பற்றியே கல்வி, கேள்வி என்பதாயிற்று. திருவள்ளுவரும் அதனையே 'செல்வத்துளெல்லாந்தலை' என்று கூறியுள்ளனர். வேதம் முதலியவற்றைக் களங்கமற உணர்ந்த, பரிசுத்தரான பிரம்மரிஷிகளும் ராஜரிஷிகளுமே, அக்காலத்திலிருந்த அறிவூட்டும் நடைச்சாலை யென்பதற்குரியோராயிருந்தனர். அவர்களே அறிவென்பதன் வடிவமாய் அமைந்திருந்தனர். அவர் உணராததும் அறியாததும் ஒன்றுமில்லையென்றே கூறலாம். புத்தி சம்பந்தமானதோ, நன்னெறி புகட்டுவதானதோ, அன்றித் தத்துவ ஞானத்

ளைதப் போதிப்பதானதோ, அன்றி, வேறு எத்தன்மையதான கல்வியோ, அவை யனைத்தையும் அத்தபோதனர்களே தங்களுள் கொண்டுள்ளவராயினர். அதுபற்றியே, அக்காலத்துக் கிரந்தங்களின் ஏட்டுப்பிரதிகளும் கிடைப்பது மிகவும் அரிதாயிற்று. வெகு நாட்களுக்குப் பின்பே அதி ஜாக்கிரதையோடு தயாரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் துறவோர் வசத்தில் சேமித்து வைக்கப்படலாயின. அவை நாளடைவில் கோயிற் சாலைகளிலும், இராஜாங்கத்தில் அதற்கெனவே ஏற்படுத்தப் பட்டுள்ள கட்டடங்களிலும் திரட்டி வைக்கப்பெற்றன. கற்றறிந்தோர் பலர், அக்காலத்திலும் இருந்தனரென்பது இதிகாச புராணங்களினாலும், அவர் தாமியற்றிய நூற்களினாலும் விளங்கும். அயோத்தி நகரத்திலே, கல்லாதாரே எவருமில்லை என வால்மீகியும், கவிச் சக்ரவர்த்தி யெனப் புகழப்படும் கம்பரும், கூறுவனவற்றைக் காண்க. போஜராஜனின் ஆட்சியிலும் அறிவாளிகள் அநேகர் ஆதரிக்கப்பட்டு வந்தனரென்பது கதைகளில் கூறப்பட்டுள்ளது.

## III

### (புத்தகாலப் புத்தகசாலை)

**பு**த்தகாலத் துவக்கமே, புத்தகசாலையின் அபிவிருத்திக்கு உற்ற காலம் என்னலாம். கையெழுத்துப் பிரதிகளைப் பெயர்த்து எழுதுவதும், அவைகளைச் சரிவரப் பாதுகாத்து வருவதுமான தொழிலும், புத்த சந்நியாசிகளுக்கு ஏற்பட்ட முக்கிய செய்கடனாக இருந்ததென்பர். பாகியன்

என்ற சீனதேசத்துப் பௌத்தன் எழுதிய புத்தகத்தினின்றும், பாடலீபுரத்திலுள்ளதோர் மடத்தில் புத்தகசாலையொன்றிருந்த தென்றும், அச்சாலையினின்றும் மஹாயன வென்னும் பௌத்த மத வியாக்கியானமொன்றை அவன் பெற்றதாகவும் தெரியவருகின்றது. ஒவ்வொரு புத்த விகாரத்திலும் மனோவிருத்திக்குக் காரணமான பலவகைப் பட்ட புத்தகங்கள் சேமித்து வைக்கப்பட்டனவென்று சரித்திரம் கூறுகிற்கின்றது.

## (சங்ககாலமும் பிற்காலமும்)

**பு**த்த காலத்திற்கு முன்பும், முதலிடை கடையென்ற முச்சங்கங்கள் இருந்துவந்தன. அகத்தியர், தொல்காப்பியர், ஔவை, வள்ளுவர் முதலிய கற்றறிந்த பண்டிதர்கள் வெகுபலர் அச்சங்கங்களிலிருந்தனர். அவர்களியற்றிய இலக்கியம், தத்துவம் முதலிய பல நூற்களும் இருந்தன. இவற்றோடன்றிப் பிற்காலத்தும், அனேக அரிய பெரிய புலவர்கள் தோன்றி நூற்களியற்றியும், பிரசங்கங்கள் செய்தும், கல்வியைப் பெருக்கிவந்தனர். தமிழ் மொழியில் காளமேகப் புலவர், ஒட்டக்கூத்தர், கம்பர், பட்டினத்தார், தாயுமானவர் முதலிய புலவர்களும் அவர்களியற்றிய நூற்களும்; வடமொழியில் அஸ்வகோஷர், பாணினி, வாருசி, வியாசர், பதஞ்சலி, வால்மீகி, காளிதாசர், குமாரதாசர், தண்டி, பவபூதி முதலிய பல புலவர்களும், அவர்களியற்றிய உயர்ந்த நூற்களும், தெலுங்கில் பீமகவி, பொம்மன்ன, போத்து

ராஜு, சிக்கன்ன, நன்னயபட்டு, சோமயாஜி, ஸ்ரீநாதன் முதலியவர்களும் அவர்களியற்றிய நூற்களும், அன்றும் இன்றும் என்றும் இந்நாட்டின் பெருமைக்குக் காரணமாக அமைந்துள்ளன. இங்ஙனமே ஹிந்தி, துளுவம், மலையாளம் முதலிய பிற பாஷைகளிலும், புலவர்களும் அவர்களியற்றிய நூற்களும் இருந்தனவென்பது தெரிய வருகின்றது. அவை விரிக்கிற் பெருகும்.

(நலந்தா புத்தகசாலை)

சரித்திரத்தில் மிகவும் பிரசித்திபெற்ற குப்த காலத்திலும், நலந்தாவிலிருந்ததைப் போன்ற மகத்துவமான கல்விச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. நலந்தா வென்ற இடத்தில், புத்தகங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்ததெனச் சரித்திரம் உணர்த்துகின்றது. ஹர்ஷவர்த்தனர் காலத்தில், சீன தேசத்தினின்றும் யாத்திரையின் நிமித்தமாக வந்த ஹியுந்த சங்கென்ற சீனன், இப்பிரபலமான புத்தகக் களஞ்சியத்தை மிகவும் பெருமைப் படுத்திப் புகழ்ந்து கூறியுள்ளதும் காண்க. கி. பி. 8-ம் நூற்றாண்டின் நிறைவில், நலந்தா என்பது அழிவுற்றதென்பது தெரிய வருகின்றது. பின்னர் நலந்தாவின் வழிப்பற்றாக உடந்த புரியிலும், வச்சிர சீலமென்ற நகரின் கண்ணும், பீகார் இராஜ்யத்தின் இளவரசர்கள் இரண்டு உந்நதமான சாலைகளை ஸ்தாபித்தனர் என்றும் கூறுவர்.

இச்சாலைகளில், புத்தமதத்தைச் சார்ந்த நூல்களேயன்றி, ஏராளமான இந்துமத சம்பந்தமான புத்தகங்கள்

பலவும் தொகுத்து வைக்கப்பட்டிருந்தன என்பர். அவை 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கில்ஜியின் படையெடுப்புக் காலத்தில் அழிவுற்றனவெனத் தெரியவருகின்றது. இருப்பினும், அப்புத்தகசாலையின் பொறுப்பாளிகளாயிருந்த மடாதிபதிகள் சிலர், கையேட்டுப் பிரதிகளில் சிறந்தவற்றைச் சேமித்து, நேபாளத்திற்குச் சென்று தப்பியோடினார்களாம். அதனாலேயே, அனேக சிறந்த பிரதிகள் அழிவுறாது தப்பலாயினவென்பர். இவ்விஷயங்கள் யாவும், சரித்திரக்காரர்களின் ஆராய்ச்சிக் குரியவைகளாகும்.

(இந்துமத புத்தகசாலை)

**பு**த்த மதச்சாலைகள் பரவி விருத்தியடைந்தவாறே ஹிந்து மதத்தவரின் புத்தகங்களும் பரவுதலடைந்தன. இந்து மதம் குப்தகாலத்தில் பரவத் தலைப்படவே, சிவாலயங்கள் கட்டப்பட்டன. அச்சிவாலயங்களில், இந்து மத புத்தகங்கள் பல சேகரித்து வைக்கப்பட்டனவென்று கூறுவர். எனவே, சிவாலயங்களே புத்தகசாலைக்கேற்ற சாதனமாய் அமைந்திருந்தன. இதனாலேயே புராணங்களும், கோவிலுக்குப் புத்தகங்களை நன்கொடையாக அளித்திடுவது புண்ணிய கைங்கரியமாகுமெனப் புகழ்ந்திருக்கின்றன போலும்! பௌத்த மதமும் ஜைன மதமும் இவ்வாறே தங்கள் தங்கள் நூற்களிலும் எடுத்துக் கூறுகின்றன வென்பர். பண்டைப் புத்தகசாலைகளுக்கு ஏற்பட்ட அவகேடு ஜைன சாலைகளுக்குச் சம்பவியாதிருந்தது நல்வசமென்றே கூறவேண்டும்.

(ஜைன புத்தகசாலை)

**ம**த்திய காலத்துவக்கத்தில் சூரத்து, காம்பே, ஆமதாபாத், பௌதான் முதலிய தலை நகரங்களில் ஏற்படுத்தப்பட்ட சாலைகளே அபிவிருத்தியடைந்து, அவையே மூல காரணங்களாகப் பலசாலைகள் அவற்றினருகே பெருகலாயின. இதுபற்றியே மேலிந்தியாவில் விசேஷமாக ஜைனசாலை அதிக்கிரமித்துக் காணப்படுகின்றன. இச்சாலைகள் பதினாயிரம் கையேட்டுப் பிரதிகளுக்கு அதிகமான தொகையைக் கொண்டிருந்தனவாம். அப்பிரதிகள் பன்னுள்வரையில் அட்டைப் பெட்டிகளில், பெட்டிக்குப் பத்து அல்லது பதினைந்து விகிதமாக வைக்கப்பட்டு, வெகு ஜாக்கிரதையோடு பாதுகாக்கப்பட்டு வந்தனவாம். இங்கும் ஜைனத் துறவிகளே அப்பிரதிகளைத் தயாரிப்பதிலும், தயாரித்து வைத்தவைகளைப் போற்றிக் காப்பாற்றுவதிலும் மிக்க உற்சாகமுடையவரா யிருந்தனரென்று ஆராய்ச்சியாளர் கூறுவது காண்க.

(மொகலாய புத்தகசாலை)

**ப**ட்டாணியர் காலத்திலும், மொகலாயர் காலத்திலும், இராஜ சமஸ்தானத்தைச் சார்ந்த பல சாலைகள் ஏற்படுத்தப்பட்டு, அவை பல கற்றறிந்த நிபுணர்களால் பார்வையிடப்பட்டு வந்தனவாம். பிரோஸ்ஷா என்ற மன்னன் கல்வி அபிமான முடையவன். நாகர் கோட்டையை வென்ற காலத்தில், அந்நகரத்திலிருந்த சிவாலயத் தினுள்ளிருந்த புத்தக சாலையை அழித்திடா திருந்ததோடு, பல ஏட்டுப்

பிரதிகளைப் பாரசீக பாஷையிலும் மொழிபெயர்க்கச் செய்த தாகக் கூறுவர். மொகலாய மன்னருள், ஹுமாயூன், அக்பர், ஜிகாங்கீர் என்ற மூவரும் வித்யாபியானம் பெரிதுங் கொண்டவர்கள். தங்கள் அபிமானத்திற் கேற்ப, பெரிய சாலைகள் ஏற்படுத்தி இருப்பதோடு அவற்றுக்கு ஏராளமான திரவிய உதவியுஞ் செய்துள்ளனரென்பது சரித்திரத்தால் அறியப்படுகிறது. மற்றும் பலவாய புதுப் புத்தகங்களைச் சேர்த்தும் வைத்தனர்.

அவர்களுள் முக்கியமாக இருந்த அக்பர், வித்தைகளையும் வித்வான்களையும் அபிமானித்துச் சன்மானித்து வந்ததோடல்லாமல், தனது அரண்மனையில் பலருக்கும் பயன்படுமாறு, புத்தக சாலை யொன்றை ஏற்படுத்தும் விஷயமாக அதிக கவனம் செலுத்திவந்தார். தன்னுடைய அரசாட்சியில் கிடைக்கக் கூடிய புத்தகங்களோடல்லாது, வெளியிடங்களிலிருந்து பெற்றிடக் கூடிய நூற்களையும், ஹிந்துக்களுடைய நூற்களையும், அவற்றைப் பாரசீகத்தில் மொழி பெயர்த்த மொழி பெயர்ப்பு நூற்களையும், சேமித்துவைத்தார். அக்பர் கல்வியில் மிக்க பிரிய முடையவராகலின், தனது அரண்மனையிலிருந்த சிறந்த நூற்களையெல்லாம் தாமே கற்றுமிருந்தனர். சரித்திர விசேஷங்களையும், தத்துவ சாஸ்திரங்களையும், அவர் வெகு விருப்பத்தோடு கற்றும் வந்தார். வைகலும் கற்றறிவாளர்களைக் கொண்டு, ஒவ்வொரு நூலாகப் படிக்கச் செய்து, அவற்றினைத் தான் கேட்டுவருவதும் அக்பரின் வழக்கமாயிருந்தது. கல்வி யபிவிருத்திக்காக வேண்டி அவர் கைக்கொண்ட பெரு

முயற்சிகள் கணக்கிடக் கூடியவல்ல. இவ்விஷயங்களெல்லாம் நூற்களில் விரிவாகக் கூறப்படுதல் காண்க.

## IV

### (சாளுக்கிய புத்தகசாலை)

குப்த ராஜ்யம் சீர்கேடான பின்னர்த் தோன்றலான ஹிந்து ராஜ்யங்கள் பலவும் கல்வித் தேர்ச்சியிலும், வித்தியாபிமானத்திலும் சிறந்தனவாகவே விளங்கின. அவற்றுள் ஆதியில் பிரபலமாக இருந்தது தாரா நகரமென்பதாகும். அந்நகரத் தரசனான போஜ மன்னன், சிறந்த புத்தகாலயமொன்றைத் தனது நகரில் ஏற்படுத்தினன். அது 11-ம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டது. ஆயின் மாளவதேசம்; சாளுக்கிய மன்னர்களால் வெல்லப்பட்ட பின்னர், தாராவிலுள்ள சாலை சாளுக்கிய சமஸ்தான சாலையோடு ஒன்றாக்கப்பட்டது. சாளுக்கிய மன்னருள் விசாலதேவர் என்பவரே இவ்விஷயத்தில் அதிக பிரயாசை எடுத்துக்கொண்டனரென்பர். இற்றைக்கும் ஜர்மானிய தேசத்தில் பான் நகரத்து சர்வகலாசாலைச் சங்கத்தில், விசாலதேவர் தொகுத்து வைத்த ராமாயணப் பிரதியொன்று காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இவ்விஷயம் மிகவும் அற்புதமானதாகும்.

### (குறுநாட்டுப் புத்தகசாலை)

இக்காலத்திலும் நம் நாட்டுக் குறுநில மன்னர்கள், தங்கள் சமஸ்தானத்தை யொட்டிப் புத்தகசாலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். பிக்கனீர், ஆல்வார்,

மைசூர், நேபாளம் முதலிய நாடுகளில் அவை காணக்கிடைக்கும். தஞ்சைமாநகர அரண்மனையைச் சார்ந்த சரஸ்வதி மஹாலில் கல்விப்பொருள் நிரம்பியுள்ள அதியுன்னதமான பல புத்தகங்களையும் சேமித்து வைத்திருக்கின்றனர். அப்புத்தகசாலையைப் பரிசோதிக்கும் வண்ணம் அரசாங்கத்தாரால் நியமனஞ் செய்யப்பட்ட, டாக்டர் பர்னல் என்பவர் தன்னுடைய மதிப்புரையில், அங்குள்ள புத்தகத் தொகுதிகள் மிகவும் பெருமையுடையன வென்றும், பிற புத்தகசாலைகளைக் காட்டிலும் அது பெரியதென்றும் தான் சுலபமாக உணர்ந்து கொண்டதாக வெளியிட்டுள்ளனர். ஆதியில் அது, சாளுவ மன்னர்களால் ஸ்தாபிக்கப்பட்டதென்பதைச் சரித்திர மூலமாக உணரலாம். 16, 17-ம் நூற்றுண்டில், தஞ்சைமா நகரையாண்டு வந்த நாயக்க மன்னர்களால், தெலுங்கு பாஷையில் வடமொழி உச்சாரணங்களைத் தொகுத்தெழுதிய பல ஏட்டுப் பிரதிகள் சேகரஞ் செய்யப்பட்டன வென்பதும், 18-ம் நூற்றுண்டில், மகாராட்டியர் படையெடுத்துவந்த அக்காலத்தில் இச்சாலை முன்னிலும் அதிகமாகச் செழிப்படைந்ததென்பதும், தற்போதைக்கு அப்புத்தகசாலையில் பதினெண்ணாயிரம் புத்தகங்கள் காணக்கிடைக்கு மென்பதும், கூறப்படுகின்றன. அவை சுமார் பதினொரு வகையான அக்ஷர வகையில் எழுதப்பட்டுள்ளனவாம். இப்புத்தகங்களினின்றும், பண்டைக் காலத்திய நாகரீகத்தின் பான்மையும் பழக்க வழக்கங்களும் அறியலாம்.

(தற்கால புத்தக சாலைகள்)

**பு**த்தகாலயம் எங்கும் வெகுவாகப் பரவுவதற்கு வேண்டிய வசதிகள், இக்காலத்தில் நிறைந்து கிடக்கிறதென்பதை யாவருமுணர்வர். இப்பொழுது ஒவ்வொரு ராஜதானி நகரத்திலும், ஒவ்வொரு உன்னத சாலை அமைந்திருக்கின்றது. கல்கத்தாவிலுள்ள ராஜாங்க புத்தகசாலையும், சென்னையிலுள்ள கன்னிமாரா புத்தக சாலையுமே போதிய சான்றாகும். ஒவ்வொரு ராஜதானியிலுமுள்ள சர்வ கலா சாலைச் சங்கமும் ஒவ்வொரு சாலையை உடைத்தாயிருக்கின்றது. பொதுஜனசாலை ஸ்தாபகஞ் செய்ய முக்கிய வழிகாட்டியாக அமைந்துள்ள, தற்காலப் போக்கினை அனுசரித்துப் புத்தகசாலை ஏற்படுத்திய பெருமை, அறிவு தெளிந்த பரோடா நாட்டு மன்னவனைச் சார்ந்ததாகுமென்பர். புதுக்கோட்டை சமஸ்தானத்திலும், திருவாங்கூர் ராஜ்யத்தில், திருவநந்தபுரத்திலும், பொதுஜன சாலைகள் இருப்பதாகக் கூறப்படுகின்றன. அந்நாடுகளில் வேறு பல புத்தக சாலைகளும் உள்ளனவாம். மகாராஷ்டிரத்திலும், மைசூர், இந்தோர் முதலிய ராஜாங்கங்களிலும் புத்தகசாலை இயக்கம் வெகுவாகப் பரவிவருகின்றது.

(புத்தகசாலை இயக்கத்தின் அவசியம்)

**பொ**துஜன நன்மைக்காக இவ்வியக்கம் நாடெங்குப் பரவித் தழைத்துநிற்க வேண்டுவது மிகவும் அவசியமானது. பொதுஜன சாலைகள், தற்காலத்தில் தழைத்து ஓங்குதற்குப் பொதுஜன முயற்சி இன்றியமையாதது. புத்தகாலயங்

களில் புத்தகங்களைத் தொகுத்திட, அங்குப் பலரும் சென்று படித்தலால் உளவாகும் நன்மைகளைத் திரட்டி நோக்கிடின், இவ்வியக்கத்தால் பெறலாகும் நன்மைகள் புலப்படும். கல்விச் செல்வம் மிகவும் சிறந்ததென்று கூறப்படுவதால், அச்செல்வம் நிறைந்துள்ள பெட்டிகளுடைய புத்தகசாலைகளைப் பொருட் செல்வம் நிறைந்த பெட்டியினும் அருமையாகக் காத்தல் அவசியம் என்பது விளங்கும். பல புத்தகங்களை ஒருங்கே சேர்த்து வைப்பதால், பல நூற்றாண்டுகளின் விஷயங்களை எளிதில் அறிய அநுகூலமாகின்றது. இறந்துபட்ட பெரியோர்களின் நூற்களால் அப்பெரியார் தமது எண்ணங்களைக் கண்டறிய முடியும். மற்றும் அவர் வழியைப் பின்பற்றி நன்மைபெற உபாயமேற்படுகின்றது. எங்ஙனம் உடலுறு பிணிகளை அகற்றுதற்கும், பிணியொன்றும் அண்டாது அகல விருக்கச் செய்தற்கும், தேகாப்பியாசங்கள் இன்றியமையாதனவாக இருக்கின்றனவோ, அங்ஙனமே, மனப்பிணியை நீக்குதற்கும், அதற்குப் பிணியொன்றும் நாடாது இருக்கச் செய்தற்கும், படித்தலாகிய மருந்து மிகவும் அவசியமாகின்றது.

## V

### (நன்மை பயக்கும் புத்தகங்கள்)

**பு**த்தக சாலைகளில் பலவிதமான புத்தகங்களிருக்குமாயினும் நன்மை பயக்கும் புத்தகங்களையே வாசித்தறிய முயலுதல் வேண்டும். நற்போதனைகளைப் படிப்பதே நமக்குப் பயனையளிக்கும். ஏதோ பொழுது போக்கிற்கென்று

சத்தற்ற அசம்பாவிதமான புத்தகங்களைப் படிப்பதால், உள்ள அறிவையும் வலுவிலிழந்து, பின்னர் வருத்தப்பட நேரிடுமென்பது நிச்சயம். ஒருவனுடைய ஒழுக்கங்களை, அவனது நடத்தையாலும், அவன் படிக்கும் புத்தகங்களாலும், நேசிக்கும் நண்பர்களாலும், அறியலாமென்று கூறுவ ரான்றோர். 'கண்டது கற்றவன் பண்டிதனுவான்' என்ற மொழியைப் பற்றி நின்று, கையிற்பட்ட புத்தகங்களை யெல்லாம் படித்திடுதல் நலனை ஒரு பொழுதும் தாராது. ஆழ்ந்து நோக்குமிடத்து இவ்வசனமும், ஆன்றோர்களால் படித்தற்கும் படித்துப் பயன் பெறுதற்கும் ஏற்ற புத்தகங் களெனத் தெரிந்து கண்ட புத்தகங்களைக் கற்றவன் பண்டித னுவான் என்றே நவிலுகின்றது. தீய புத்தகங்களை வாசிப்பது நன்னடக்கையை யழித்துப் படிக்குமவனைத் தீய வழிகளை நாடிச் செல்லவுஞ் செய்யும். 'அகல உழுவதினும் ஆழ உழுவது நன்றென'க் கூறுதலைப்போல, எவ்வெவர்க்கு எவ்வெவத் துறைகளில் அபேக்ஷை அதிகமாக உள்ளதோ, அவ்வவத்துறைகளில் பரந்து கிடக்கும் நூற்களை, ஆழ்ந்து படித்து ஆராய்ந்து மேன்மையுறுவதே சிலாக்கியமான மார்க்கம். பயனற்ற பல புத்தகங்களைப் படித்துப் பய னடையாது போவதிலும், ஒரு நல்ல நூலைக் கற்றுச் சொற்ப விஷயமேனும் அறிந்து கொள்வது மேலானது.

## (இடவமைதி)

**ப**ல புத்தகங்களைத் தொகுத்து வைத்துள்ள ஓர் அறையின் கண் வீற்றிருக்கும் ஒருவனுக்குக் கற்க வேண்டு

மென்ற அவா தானுக உதித்திடும். இதனுல் படிப்பதில் விருப்பு உண்டாகின்றது. படித்தற்கு ஏகாந்தமான அறையே மிகவும் சிலாக்கியமானது. ஏகாந்தமெனில், துன்பந் துறந்து பேரின்பத்தை நாடி நிற்கும் துறவிகள் விரும்பிச் சென்றிடும் இடமன்று. மனதை வேறு வழி களில் இழுத்திடாது நிச்சப்தமாக இருக்கும் இடமென்பதே கருத்து. அவ்வகையான இடமிருப்பின், படிப்பவர் படித்த பொருள்களைப் பற்கொடுத்திடவும், படித்தும் படியாத வர்களின் நிலையிலிருக்கவும் மாட்டார்களென்பது கருத்து. சாமானியமான, அறிவு வளர்ச்சிக்கு ஒரு பொழுதும் ஏகாந் தம் துணை புரியாதாயினும், அவ்வறிவின் வித்து வேரூன்று மிடத்து அது வேண்டப்படும். கட்டுக்குட்படாத மனதை, கல்வியென்ற கயிற்றிற்கட்டி, அறிவென்ற வெளியில் அடக் கியாட்டுவிக்கு மிடத்து, அவ்வித ஏகாந்தம் விரும்பப்படும்.

## (வறியோருக்குப் புத்தகம் வழங்கல்)

"கல்வியபிவிருத்தி இந்நாட்டில் குன்றிக் குறைபடு வதற்கு முக்கிய காரணமாக உள்ளது, ஏழைமக்களுக்குப் படிக்க வசதிகள் இல்லாமையும், வசதியாக உள்ள இடங் களில் ஏற்ற புத்தகங்கள் இல்லாமையுமே" எனச் சென் னைக்குத் தலைவராக இருந்த கோஷன் பிரபு கூறுவது மிக வும் கவனித்தற் குரியது. கல்வியில் விருப்பமுடைய வறிய பிள்ளைகளுக்குப் புத்தகம் வாங்கிக் கொடுத்தல் மிகவும் புண்ணியமென்பர் அற நூற்களுக்கு மூலாதாரமாக உள்ள மனு, 'நல்லவை தீயவை இவை இவை, என வகுத்துக் காட்டிப் பகுத்தறிவைப் பெருக்கும் கல்வியைக்

கற்றறியார்மாட்டும் கற்றறிந்த கலைஞர்கள் ஊட்டும், சிறந்த தருமத்தினும் சிலாக்கியமானது வேறொன்றுமில்லை' என்று கூறியுள்ளனர். ஏனெனில் கல்வியால் அறிவைப்பெறலாம். அதனால் பகுத்தறியும் குணத்தைக் கொள்ளலாம். புறக் கண்ணுக்குப் புலனாகும் பொய்த் தோற்றங்களைப் புறத்திட லாம். அகக் கண்ணின் ஆநந்தத்தை அடைந்து, அதன் பயன்களையும் அனுபவித்திடலாம். சேதன அசேதன பதார்த் தங்களின் தன்மையையும், நித்யா நித்தியப் பொருள்களின் பேதங்களையும் நன்குணர்ந்து, மேன்மையுறலாம். உறுதி யாக இவை யாவற்றையும் பயக்கக் கூடிய கல்விக்குக் காரண மாக உள்ள புத்தகங்களைத் தனித் தனியாக, ஒவ்வொருவரு க்கும் வாங்கிக் கொடுப்பது, இயலாத காரியமாகத் தோன் றும். ஆகலின், பலரும் கண்டு கற்கும்வண்ணம் பொதுப் புத்தகசாலையொன்றை ஏற்படுத்தி வைப்பது மிகவும் விரும் பப்படும் காரியம். எளியோருக்கு மாத்திரமன்று, செல்வ வந்தர்களுக்கும் அத்தகைய புத்தக சாலைகள் பயன்படு மென்பது உண்மை. அவர்களும் தமக்கு வேண்டிய நூல் களைப் பெற்றுப் படிக்கவும் இயலும். ஆராய்ச்சியாளர் களுக்கும் அது வெகு பயனளிக்கும்.

## (பலருக்கும் பயன்படும் புத்தகசாலை)

**க**ல்வி கற்கின்றவர்கள் தங்கள் ஆயுள்தோறும் உபாத் திமாரிடத்திலேயே பாடங்கேட்டுத் தெளிவதில்லை. நூற் களின் கருத்துக்களை ஊகித்து அறியும், அறிவு உண்டான பிறகு, கல்விக் கழகம் விடுத்து, ஆங்குக் கற்ற கல்வியை

மேலும் அபிவிருத்தி செய்துகொள்ள முயன்று வருவதுண்டு. பல கருவி நூற்களின் பேருதவிகொண்டும், தெரியாத பொருள்களைத் தெரிந்தவர்களிடத்துக் கேட்டு அறிந்து கொண்டும், மேலும் மேலும் கற்றலே பெருமையுடையது. அவ்வாறு கற்றுப் பாண்டித்தியம் பெற்றவரே பேருக்கும் புகழுக்கும் பாத்திராவர். அற்பப் பொருள்களின் காரண காரியங்களையும் ஊன்றி அறிந்துகொள்வதால் அறிவு அபிவிர்த்தி யாகுமென்பது திண்ணம். தற்பயிற்சியால் அபிவிர்த்தி செய்துகொள்வதற்கு நூல்களைப்போல் வேறு சாதனங்கள் இல்லையென்றே கூறவேண்டும். கல்வி என்பதை யடைந்த யாவரும் செல்வம் என்பதை யடைந்திருப்பதில்லை. உலகத்தில் எவரும் நிறைவென்பதைப் பெற்று ஒரு குறைவுமின்றி இருப்பதுமில்லை. அங்ஙனமிருப்பவர்கள் ஆயிரத்தில் ஒருவரே யாவர். கல்வி, செல்வமாகிய பொருள்க ளிரண்டினையும் பெற்றிருப்பினும், பிணி பல பீடிக்க அவர்கள் மனச்சாந்தியின்றி இருக்கவேணும் நேரிடுகின்றது. இதுவே உலக இலக்கணம்.

கல்வி யபிமான மிகுந்த கற்றறி நிபுணர் பலர், தங்களது ஏழ்மையால் கற்ற கல்வியை மேலும் விருத்தி செய்துகொள்ள இயலாதவர்களாகிப் போவதிப்பட்டு உழல்கின்றனர். இத்தகைய கல்விமான்களுக்குப் புத்தக சாலைகளால் உளவாகும் பயன்களைச் சொல்லவும் வேண்டுமோ? தழைத்து ஓங்கி விசாலமாக வளரக்கூடிய நெடிய மரம், தண்ணீரின்றாயின் எவ்வாறு நீடித்து வளரமுடியாது தவித்திடுமோ, அங்ஙனமே படித்துப் படித்து அறிவைப்

பெருக்கி மேன்மையுறும் அறிவாளர்கள், வேண்டிய வசதிகள் இல்லாமைபற்றித் தமக்கு உள்ள அறிவின் பெருக்கையும் மழுங்கடித்துக்கொள்கின்றனர். பலருக்கும் பயன்படும் எண்ணங்கொண்டு எழும் புத்தகசாலைகளால் இவர் தமக்கு எத்துணையோ நலம் பிறக்குமென்பது முற்று முண்மை.

## VI

### (காலம் கழிக்க ஏற்ற நூற்கள்)

ஆராய்ச்சிக்காக வேண்டிப் படிப்பதேயல்லாமல், வேறு விநோதமாய்க் காலங் கழிக்கப் படிப்பதுமுண்டு. பிற வேலைகள் இல்லாத காலத்தில், பொழுதை நல்ல வகையில் போக்கும் பொருட்டு, சிறந்த கதை முதலிய நவீனங்களைப் படித்தலுமுண்டு. பொழுது போக்குக் காலங்களில் படிக்கும் புத்தகங்களைச் சாதாரணமாக மூன்று வகையின்பாற் படுத்தலாம். ஆங்கில நூல்களிலும் இம்முறைப்படியாகவே அமைக்கப்பட்டுள்ளன. அவை, சரித்திர சம்பந்தமான நூற்கள், பிரயாணங்களைக் குறித்திடும் நூற்கள், நீதியைப் போதிக்கும் கதைப் புத்தகங்கள் என்பன. இத்தகைய நூற்களைப் படித்தலால் பல நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த சம்பவங்களை எளிதில் உணரக்கூடும். மற்றும், நாம் நேரிற் கண்டிராத பல தேசங்களைப்பற்றியும், அவற்றின் பெருமைகளைக் குறித்தும், பலவகையான ஜன சமூகங்களைக் குறித்தும், அவ்வத் தேசத்திய இயற்கை விநோதங்கள், செயற்கைச் சிங்காரங்கள் ஆகிய இவற்றையும், எளிதில் அறிவது சாத்தியமாகும். மேலும் பல காலங்களுக்கு

முன்பு இறந்துபட்ட பேரறிவாளரோடு நேரிட்டுச் சம்பாஷிக்கும் பயனை அவர்களின் நூற்களைக் கற்றவர்கள் அடைய இயலும்.

(சரித்திர நூற்கள்)

சரித்திர சம்பந்தமான புத்தகங்களை வாசிப்பதால், நம் வாழ் நாட்களில் நடக்கவேண்டிய சீரிய வழிகளை அநுசரித்து நடக்கலாம். தேச சரித்திரங்களோடன்றி அத்தேசத்திலுறைந்திருந்த பெரியோர்களது சரித்திரங்களையும் படிப்பதால், அவர்கள் பெருமையடைந்து மேன்மையுற்ற விதங்களையும், அவர்கள் துன்பமடைந்த காலத்து மனந்தளராமல் அவற்றைத் தாங்கி நின்று, பின்னர் இன்பமடையவேண்டிக் கையாண்ட முறைகளையும், இன்னும் இவைபோன்ற அநுகூலங்களையும், அவரது திவ்விய சரித்திரவாயிலாகக் கண்டறியலாம். கவிவாணர்களின் சரித்திரத்தால் இயற்கையின் திவ்விய வனப்பையும், யாக்கையின் நிலைமையையும், உலகத் தோற்றத்தின் தன்மையையும், மற்றும் இவைபோன்ற உலக சம்பந்தமான பற்பல விஷயங்களையும் தெளிவாக உணர்ந்திடலாம்.

பல தேசங்களின் சரித்திரங்களை உணர்வதால், நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டிய உபாயங்களையும், இராஜாங்க விஷயங்களின் அறிவையும், ஆட்சிக்குரிய புதிய புதிய மார்க்கங்களையும், பல ஜாதியார்களின் நடையுடை பாவனைகளையும், எளிதிலுணர முடியும். சரித்திரப் படிப்பால் இவற்றோடன்றி ஞாபகசக்தி விருத்தியடையவும், விவகார ஞானமடையவும், ஆராயுஞ் சக்தியைப் பெறவும்,

நல்லன தீயன நிரலே அறிந்து முடிவிலொரு தீர்மானத்திற்கு வந்திடவும் வழி ஏற்படும். கற்றுத்தேர்ந்த பெரியோர்களின் திவ்விய சரிதைகளை உணர்ந்தால் அவர்களது அடிச்சுவடுகளைப்பற்றி நின்று மேன்மையுற இயலும்.

(பிற நூற்கள்)

**பி**ரயாண சம்பந்தமான நூற்களைப் படிப்பதால் அயல்நாட்டுப் பழக்க வழக்கங்களையும், அத்தேசத்தினரின் நாகரீக ஒழுக்கங்களையும், போக்குவரவு சாதகங்களையும் கற்றுணரலாம். பிறநாட்டினர் காணும் மேன்மையான முறைகளை நம் நாட்டிலும் கைப்பற்றலாம். கதைப் புத்தகங்களை வாசிப்பதால், உலக நடக்கையையும், குண விசேஷங்களையும் உணருதல் எளிதாகும். ஆபாசமாக உள்ள கட்டுக் கதைகளை விலக்கி, விசேஷமாக நல்லறிவைப் புகட்டக்கூடிய கதைப் புத்தகங்களை அதுபற்றியே படித்தல் வேண்டுமென்பது.

(முடிவுரை)

**மு**டிவாகக் கூறுமிடத்துப் புத்தகங்களைப் படிப்பதால் விளையும் நன்மைகளை அளவிட்டு அறியமுடியாது. மனச் சோர்வடைந்த காலத்து, அதனைப் போக்கி உற்சாக மூட்டுவதில் நண்பனைப்போல நல்ல புத்தகங்கள் உதவும். மனிதர்கள் செய்யவேண்டிய கடமைகளைப் புகட்டுவதிலும், பற்றி ஒழுகவேண்டிய துறையினைக் கூறுவதிலும், அஞ்சி விலக்கவேண்டிய விஷயங்களைக் காட்டுவதிலும், புத்தகங்

களைப்போல் உதவக்கூடிய பொருள் வேறொன்றுமில்லை. உற்றவிடத்தில் உயிரையும் கொடுக்கச் சித்தமாக உள்ள நண்பரினும், எற்றவிடத்து உதவி புரியும் புத்தகங்களே மேலானதென்னலாம். அத்தகைய நண்பர்கள் நன்றி மறந்து, சூதும் வாதும் செய்து வேதனையிலாழ்த்தினும் ஆழ்த்தலாம். ஆயின் நன்னூற்களோ நம்பிக்கைத் துரோகத்தை ஒரு பொழுதும் செய்யாது. எக்காலத்திலும் உடனிருந்து களிப்பூட்டும்.

கற்றறிந்தவர்களுக்குப் புத்தகங்களிலும் சிறந்த உயிர்த் தோழர் வாய்த்தலரிது. மன உற்சாகத்திற்காக வேண்டியும், தேக சவுக்கியத்திற்காக வேண்டியும், நல்ல காற்று உட்கொள்வதற்காக வேண்டியும், மனோரம்மியமான சிங்காரத்தோட்டங்களை ஏற்படுத்துவதைப் போலவே, மனோ உற்சாகத்திற்காக வேண்டியும், அறிவு வளர்ச்சிக்காக வேண்டியும், உலகஞானத்தை உணருதற்காகவேண்டியும், இவ்வையகத்தில் உள்ளளவும் பலரும் உவக்க இருந்து மேன்மையடைதற்காக வேண்டியும், புத்தகசாலைகள் பல எழுதல் மிகவும் அவசியமானது. நாடெங்கும் புத்தக சாலைகளை ஏற்படுத்தி, உண்மை உழைப்பாளிகள் முன் வந்து, மக்களை கல்வியில் பிரியமுண்டாக்கச் செய்வார்களாயின், அறியாமை யென்னும் பிணி அகன்று ஓடுதற்கு எவ்வளவு காலம் வேண்டும்? புத்தகசாலை யென்றால் புத்தகங்கள் மட்டும் இருக்கவேண்டுமென்பதல்ல. அறிவை வளர்க்கும் பல நூதனமான படங்களும், தினசரி மாதப் பத்திரிகைகளும், இருத்தலும் நற்பயனையே அளித்திடும்.

## 3. ஆந்திக்கால அறமொழிகள்.

### I

(கலைவாணனின் நற்குணம்)

கருமபூமி என்ற பட்டணத்தில் கலைவாணன் என்ற சீமான் ஒருவன் இருந்தான். முந்தையோர் செய்த புண்ணிய வசத்தால், கலைவாணனுக்குச் சகல செல்வங்களும் நிறைந்திருந்தன. பொருட் செல்வமும், மக்கட் செல்வமும் கல்விச் செல்வமும், இன்னோன்ன பிறவும் திரண்டு ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்தனன். நன்னெறியினின்றும் நழுவாது, இம்மகிபன் உள்ளதைக் கொண்டு உவந்திருந்தான். பொறுமையும், மேன்மைக் குணமும் இவனிடத்தில் குடிகொண்டிருந்தன. எக்காலத்தும் தான தருமங்களைச் செய்யும் நோக்கமுடையவன். இவன் கட்டிய ஆலயங்கள் கணக்கற்றன. இவன் வெட்டிய குளங்கள் கொஞ்சமல்ல. ஏழைக்கிரங்கும் ஈகையாளன். பிறரது துயரைத் தனது துன்பமாகப் பாவித்து ஏற்ற உதவியைச் செய்பவன். இல்லையென்போர்க்கு இட்டு நிரப்பும் எண்ணமுடைய இவனுக்கே, 'தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன்' என்பது பொருந்தும். கலை ஞானம் பூரணமாகப் பெற்றவனாகலின், இவன் கற்றோரைப்பெரிதும் ஆதரித்து வந்தனன். பலரும் கற்பதற்கேற்ற வசதிகளையும் செய்தனன்.

இங்ஙனமாக வாழ்நாட்கள் பல கழிந்திட, 'வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்'' என்ற உண்

மைப்படி, நற்குணமும் நற்செய்கைகளும் கொண்ட கலைவாணனுக்கும், அந்திப்பருவம் நெருங்கி வருவதாயிற்று. அங்கம் தளர்ந்து, நாக்குழறி, விழி சொருகி, நாளுக்கு நாள் பலம் குறைந்து கொண்டே வந்தது. வாயுமேலிட, ஐயுந்தொடர்ந்து, அறிவுமழிந்து, இறுதிக் காலம் சமீபித்து விட்டதை அவன் உணர்ந்தான். தனது மக்களின் மேலிருந்த காதல் தூண்ட, பாசம் பற்றிவாட்ட, தாயற்ற அவர்களுக்குச் சில நற்போதனைகளைப் புகட்டிச்செல்ல வேண்டுமென்ற இச்சை கொண்டான். நற்குணன், சிற்பன்னன் என்னும் தனது மைந்தரிருவரையும், குணநிதி என்ற தன்னருமைப் பெண்ணையும், அருகாமையிற் கூப்பிட்டு அண்டையில் உட்காரச் செய்து அவர்களுக்குத் தன் மனத்தே உதித்த எண்ணங்களைக் கூறுவானாயினன்.

(தனயரிடத்துத் தன் மனமுரைத்தல்)

கலைவாணன் :—“என்னருமை மைந்தர்காள்! இனி உங்களை விட்டுப் போகும் காலம் எனக்கு வந்துற்றது. உங்களை ஆசையோடு எடுத்தணைத்து, அன்போடு உங்களிடம் பேசி, உங்கள் இனிய சொற்களைக் கேட்டு மனமகிழ்ந்து நின்றகாலமும், உங்களைப் போலவே இளம்பிராயத்தினனாக நானும் இருந்த காலமும், கழிந்து சென்று விட்டன. சுழலும் கால சக்கரத்தில் எனது வாழ்க்கை நாள் கழிந்து சென்றிட, இனி உங்களின் காலம் வருவதாயிற்று. மக்காள்! பரிபக்குவமடைந்தவர்களுக்கும் பாசம் பற்றி வாட்டுமென்றால், மக்களைப் பெற்றெடுத்து மகிழ்ந்திருந்த எனக்கு அந்த வாஞ்சை இல்லாதிருந்திடுமோ?

'இருப்பது பொய், இறப்பது மெய்' என்பது நான் உணராததன்று. எனினும் உங்களைப் பிரிந்து கண்மூடிப் போவதன் முன், உங்களுக்குச் சில நற்போதனைகளைப் புகட்டி, என் நாட்களுக்குப் பின்னும், உங்களைத் துன்பமின்றி இன்பமாக இருக்கச் செய்ய வேண்டுமென்னும் இச்சையுடையோனாயிருக்கிறேன். ஏதோ வீடுபோ எனக் காடு வா என்றழைக்கும் நிலையிலுள்ள முதியோன் அந்திக்காலத்தில் பிதற்றிச் சென்றான் என்று, உதாசீனமாக இருக்காதீர்கள். எனது வாழ் நாட்களில் நான் கண்டும், கேட்டும், எனது முதிர்ந்த அனுபோகத்தில் அறிந்ததுமான உண்மைப் பொருள்களையே, உங்களுக்கு வெகு சுருக்கமாகக் கூறுகின்றேன். அவற்றை மனத்துட் கொண்டு இருப்பீர்களாயின், உங்களனைவருக்கும் சர்வேசனின் கிருபையால் யாதொரு இன்னலும் சம்பவியாது, மேன்மேலும் சாந்தியும் சகல மங்களங்களும் உண்டாகும் என்று துணிவாக நினைக்கின்றேன்."

## (தந்தை மொழி தட்டாத தனயர்)

நற்குணன்:—"தந்தாய்! இளம்பிராயத்திலேயே அன்னையை இழந்த எங்களை ஆதரித்து, அன்போடு அந்தி பகலாக உடனிருந்து முன்னுக்குக் கொண்டுவந்த உங்களின் மொழிகளைச் செவியுட் கொள்ளாமல், இறுமாப்பெய்தி அசட்டை செய்து இருப்போமா? தக்க பிராயத்தில் எங்களைப் பள்ளியிலிட்டு, அறிவைப் பெருக்கி, நல்வழியில் எங்களைப் புகுத்திய உங்களது நன்றியை மறப்போமா?

" மகன்றந்தைக்காற்று முதவியிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" —குறள்

என்னும் வேதமொழியை நாங்கள் மனத்துட்கொள்ளாது புறக்கணித்து அறியாதாரைப்போல இருந்திடுவோமா?

சிற்பன்னன் :—" பிதாவே! தங்களை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய முடைய எங்களது விதியை நொந்து வருந்துவோமே யன்றி, யாது பற்றியும் தங்களின் அருமை மொழிகளைத் தட்டி நிற்கமாட்டோம். 'மகனறிவு தந்தையறிவு' என ஆன்றோர் கூறும் மொழி நாங்கள் அறிந்ததே. தங்கள் குலத்தினது பெருமையையும், குணத்தினது நலனையும் மக்களாகிய யாங்கள் எங்களது ஒழுக்கத்தாலும், நடத்தையாலும் காக்கவேண்டியிருக்க, அதற்குப் பங்க மேற்படுதற்குக் காரணமாக இருப்போமா?"

## II

### (இறுதிக்காலத்து உறுதிமொழி)

கலைவாணன் :—"சகல குணங்களும் திரண்டு உருவெடுத்தாற் போன்ற பேரறிவு வாய்ந்த புதல்வர்காள்! உங்களைப் பெற்ற எனக்கென்ன குறையுண்டு? யாக்கை, இளமை, செல்வம், இவை ஒரு தன்மைத்தாக இந்நிலவுலகத்து நிற்காவென்பதை நீங்கள் அறிவீர்கள். யாக்கை நீரில் எழுதிய எழுத்தைப் போன்றது. இளமையோ நீரிற் காணும் குமிழியை ஒப்பது. இங்குறும் செல்வமோ நீரினது சுழலை நிகர்த்தது. ஆகலின் உள்ளளவும் யாவரும் உவந்திடப் பழி பாவங்களுக்கு அஞ்சி, நல்ல வழியில் காலத்தைக் கழித்

திடல் வேண்டும். அடக்கமுடைமை, அன்புடைமை, நடுவு நிலைதவறுமை முதலியவற்றை அணிகலன்களாகக் கொண்டு மன்னுயிரைத் தன்னுயிர் போலக் கருதி நிற்கவேண்டும். கொல்லா விரதத்தினும் மேம்பட்ட விரதமில்லை யென்பர். ஜீவகாருண்ய முள்ளவரே மேலோராவர்.''

நற்குணன் :—'' ஆம், உண்மையே. கங்கையாதிய புண்ணியத்துறைகளில் நீராடினாலும், ஜபதபங்களைச் செய்திட்டாலும், வைகலும் தவறாது அகண்டாகார சொரூபனாகிய கடவுளைப் பக்திமிகக்கொண்டு பூசித்தாலும், மகத்தான தான தருமங்களைச் செய்தாலும், தத்துவங்களைத் தெளிவு பெற உணர்ந்திட்டாலும், செல்வம் நிறைந்த தனபதியானாலும், கலைகளெல்லாம் கற்ற நிபுணனே யாயிடினும், உலகமெங்கும் புகழப்படுபவனாகிலும், பிற உயிர்களிடத்தில் கொஞ்ச மேனும் இரக்கமென்பது இல்லாமலிருப்பானாகில், அவனது புகழும் உயர்குணங்களும் எவ்வாறு மேம்பாடுறும்? இதுபற்றியன்றோ, மூதறிவாளர்களும், 'மொழியில்லாதவருக்கு முதுநூலும், விழியில்லாதவருக்கு விளக்கும் கடுகளவும் பயன் படாவாறு போல் இரக்கமென்பது இல்லாதவருக்கு—இடம், பொருள், ஏவல், மற்றும் பிற எல்லாம் இருந்தும்—பயன் ஒன்றையு மளிக்காது' என்கின்றனர். இவை நாங்கள் நன்கு அறிந்தனவே.''

கலைவாணன் :—'' நல்லது. 'தெய்வமிகமேல்' என்பது உங்கள் ஞாபகத்தில் எப்பொழுது மிருக்கட்டும். அப்பரிபூரணானந்தத்தின் அருளுடையவர்க்குச் சித்தியாதது யாது

மில்லை. சிறுவர்களே! சாந்தமுடையவனைத் தவசி என்பர். அவா அற்றோனைத் துறவி யென்பர். சஞ்சலக் களஞ்சியமாகிய மனதை அடக்கியவனை யோகி என்பர். சச்சிதானந்தனை யுணர்ந்தவனைச் சிவயோகி என்று நூற்கள் கூறும். நம்மைப் படைத்துக் காத்து, அழிக்கும் அப்பெரியானை மறந்திட்டால், பின்னர் நாம் உய்யும் வழிதானெப்படி? இந்தப் பிறவிப் பெருங்கடலைக் கடத்தற்கு, இறைவனாகிய அவனது அடிகளைத் தொழுதலே ஏற்ற சாதகமாகும். வாழ்நாளை வீணாளாக்காது, இம்மையிலும் மறுமையிலும் இடாற இன்பமெய்துதற்குச் சாதகமாகப் புண்ணிய வழிகளைப் பற்றி நின்று நாட்களைக் கழித்திடுங்கள்.

" சோம்பித்திரியாது, கைக்கொண்ட நல்ல கருமங்களை ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செய்து முடித்திடுங்கள். ஆனால் ஒரு கருமத்தைச் செய்தற்கு முன்பு, ஒரு முறைக்கு இரு முறையாக எண்ணித் துணியுங்கள். மனமொழி மெய்களால் பிறர் எவருக்கும் இன்னலிழைத்திடும் சொறகளையும் காரியங்களையும், யாதுபற்றியும், எப்பொழுதும், எதற்காகவும் செய்திடாதீர்கள். "செல்வரைப் பின் சென்று உபசாரம் பேசித் தினமும் பல்லினைக் காட்டிப் பரிதவியாமல்' சற்குருவின் பாதத்தை நம்பி, நமக்கு எத்தறுவாயிலும் ஈசன் துணை யுண்டென்பதை உறுதியாகக் கொண்டு, பொம்மலாட்டமாகிய இப் பிரபஞ்சப் பொய் வாழ்க்கையில் அதிகமான பற்றை வையாது, நல்லோர் இணக்கத்தையும் ஈசனது பூசையில் நேசத்தையும் கொண்டிருந்திடினன்றோ ஞான வாழ்வை எய்த வியலும்? இதனாலன்றோ உண்மை

யான பெருமையையும், அழியாத கீர்த்தியையும், அடைய வேண்டும்?"

மைந்தர் :—" தந்தையே! நீங்கள் உரைத்த யாவும் மனமுகந்து கேட்டோம். 'சுற்றி நின்ற சூழ்வினைகள் வீழுதற்கும், பற்றிநின்ற பாவங்கள் பறந்தோடுதற்கும், பரகதிக்குச் செல்லும் பரிசலை அடைதற்கும்,' தாங்கள் காட்டிய வழியை விடாது பற்றிக்கொண்டோம். சுற்றத் தவர்களும், மைந்தரும், இப்பொய்யுடம்பும், நிலையாத மானிட வாழ்க்கையும், 'என' தெனக் கூறும் பிற எவை யும், கடை வழிக்கு வாரா வென்பதை நன்குணர்ந்தோம். செய்த புண்ணிய பாவங்களின் பலனே உடன் வருமா கலின், தூய மனதுடையாரயிருந்து, பெரியோர்கள் பற்றும் நேரிய வழியிலேயே நாங்களும் சென்றிடுவோம்."

(பற்றற்குரிய பல பொருள்கள்)

கலைவாணன் :—" உத்தமப் புத்திரர்களே! இது மட்டு மன்று. ஒருவர் உங்களுக்குச் செய்த நன்றியை ஒரு பொழு தும் மறந்திடாதீர்கள். பெரியோர்களை வணங்கவேண்டும். இன் சொல்லுடையராயிருத்தல் வேண்டும். புறங் கூறுமத லும், பழிப்பன பகராமலும், ஓரமுரையாமலும், இருப்பவர் பால் கூடிச்சுகமாக இருங்கள். ஒற்றுமையால் எதையும் சாதிக்கலாம். தம்மாலியன்ற உதவியைச் செய்ய என்றும் பின் வாங்குதல் தகாது. எண்ணரிய பிறவிகளை எடுத்தா லும், வரவுக்கு அதிகமாகச் செலவு செய்தலும், கடன்பட்டு வாழ்தலும் கூடாது. எவருக்கும் பாதகம் நினைக்க வேண்

டாம். உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கவேண்டும். பழகப் பழக நெருங்கிய பந்துக்களும் பரிகசித்து உதாசீனயாக இருப்பார்களாயினும், அவர்களை நீங்களும் அன்னவாறே தாழநினையற்க. உங்களை வைதோரைக்கூட நீங்கள் வையாமலிருங்கள். இந்த வையகம் முழுதும் பொய்த்தாலும் வாய்மையினின்றும் நீங்கள் கொஞ்சமும் வழுவாமல் இருக்கவேண்டும். எப்பொழுதும் கோபத்திற்கு இடங்கொடாதீர்கள். மேலெழும் சினத்தைக காக்கும் குணமே நற்குணமென்பர். சினம் அடக்காமையால் விளையும் விபத்துக் கொஞ்சமல்ல. கௌசிகன் நலங்கெட்டதும், இந்திரன் குலிசம் போக்கினதும், நகுலன் கோலமழிந்ததும், கேவலம் இக்கோபத்தினுலேயே என்பதை நீங்கள் கேட்டதில்லையா?

"இதற்குமேல் இன்னும் உங்களுக்கு என்ன சொல்லப் போகிறேன்? கற்றுக்கொடுத்த புத்தியும் கட்டிக்கொடுத்த சோறும் வெகு நாளைக்கு நில்லாதென்பார்களன்றோ? நீங்களே இவற்றையும் இவைபோன்ற பிறவற்றையும் சிந்தித்து அறியவேண்டும். கேட்பதால் மட்டும் பயனில்லை."

மக்கள் :—"தந்தையே! தங்கள் அருமைப் போதனைகளை ஒருகாலும் நாங்கள் தட்டி நடக்கமாட்டோமென்பதை உறுதியாகக் கூறுகின்றோம். எங்களது அந்திக்காலம் வரையில் அம்முறைப்படியே இருந்திடுவோம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. எங்களுடன் பிறந்த சகோதரி குணநிதியோடும், நாங்கள் இருவரும் ஒற்றுமையாக இருந்திடுவோம். எல்லாம் வல்ல பரமபிதாவாகிய அக்கருணாநிதியின் அருள் எங்களுக்கு இருந்திடில் பின்னர்க் கிட்டுதற்கு அரியது யாதுளது?"

# III

## (மகளுக்குகந்த மாற்றம்)

கலைவாணன் :—“ கண்ணே ! குணநிதி ! உன் உடன் பிறந்தோருக்குக் கூறியவற்றைக் கேட்டிருந்தாய். அவ்வற மொழிகளோடு உனக்கு மற்றும் சில மொழிகளும் கூற வேண்டியுள்ளன. பெண்கள், இளம் பிராயத்தில் தமது தந்தையின் இல்லத்திலும், மணமுடிந்த பின்னர், கணவரின் அகத்திலும், அதன் பின்னர் மக்களின் மனையிலும், மக்களில்லாதவர் உடன் பிறந்தோர் வீடுகளிலும் இருத்தல் வேண்டுமென முதியோர் கூறுகின்றனர். நீ உனது கணவன் வீடு சென்றதும், அங்குள்ள பெரியோர்களுக்குத் தாழ்ந்து மரியாதையாக இருப்பதுடன், அங்குள்ள யாவரோடும் அன்பு பூண்டு ஒழுகி வருவது மிகவும் அவசியமானது. துறந்த பெரியோர்களைப் பேணுதலும், தம்மில்லந் தேடி வந்த விருந்தினர்களைத் தக்கபடி உபசரித்தலும், வறியாருக்கிரங்கி முடிந்த மட்டில் அவர்களுக்கு உதவி புரிதலுமாகிய இத்தகைய நற்குணங்கள், இல்லறத்தாரிடத்தில் பொருந்தியிருத்தல் வேண்டும்.

“ பாழே மடக்கொடியில்லாமனை ’ என்றும், இல்லாள் இல்லாத இல்லம், மற்றெல்லா வளங்களும் பொருந்தப் பெற்றிருந்தாலும், மாட்சிமைப் பட்டிருந்தாலும், அஃது சிறந்ததாகாதென்றும், கூறப்பட்டிருப்பதை நீ நன்கு உணர்ந்திருப்பாய். கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமா ? கனிந்த பழமெல்லாம் புசித்தற்கேற்ற மதுரமான பழமாமா? அங்ஙனமே, இல்லாள் என்பதற்கு இலக்காகும் பெண்ணிட

த்தில், குணங்கள் பல அமைந்திருத்தல் மிகவும் அவசிய மானது. அவள் மனத்தாலும், மொழியாலும், மெய்யாலும், மாசுமறுவற்றவளாயிருந்து, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நாற்குணங்களையும் கொண்டு, கற்பென்பதே அணியாகப் பூண்டு ஒழுகுபவளாய் இருத்தல் வேண்டும். இதனையே 'கற்பினின்றும் வழுவாமற்றன்னைக் காத்துத் தன்னைக் கொண்டானுக்கு வேண்டிய உபசாரணைகளைச் செய்து வந்து, இருவர் மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற்காத்து, நன்னெறியினின்றும் வழுவாதிருப்பவளே பெண்ணாவாள்' என்பர். பெண்பாவாய்! பிறனைக் கனவி லும் கருதாது, தன்னைக் கொண்ட மணாளனையே தெய்வ மென நினைந்து, அவனது சொற்றிறம்பாதுநின்று, தொழுது எழும் பத்தினிப் பெண்டிர்களுக்கு வேண்டுவன பிறயாவை யுள?"

குணநிதி:—"எனதன்பார்ந்த பிதாவே! நீங்கள் கூறி வந்தன வற்றைக் கண்ணும் கருத்துமாகக் கேட்டுவந்தேன். உங்களது தள்ளாமையிலும், பலஹீனத்திலும் பல விஷயங் களின் கருத்தையும், சுருங்கச் சொல்லி அவற்றின் பொருளை விளங்குமாறு வைத்துள்ள உங்களது பேறறிவையும், ஆற் றலையும் அபிமானத்தையும் எங்கள் உயிருள்ளளவும் மறந் திடோம். கற்புக்கரசிகளான அருந்ததி, கண்ணகி, சாவித் திரி, தமயந்தி, நளாயனி, அநசூயை, சந்திரமதி முதலிய சிறந்தவர்களின் சரிதைகளை நான் படித்தும் கேட்டும் உள்ளேன். தந்தையே, தமது கணவரே தெய்வமெனக் கொண்ட கற்புடைய மங்கையர் அனுசரித்து நடக்க வேண்

டிய சன்மார்க்கத்தைப் பற்றிச் சற்றே தாங்கள் கூறக்கேட்க வேண்டுமென்ற விருப்பமுடையவளாய் இருக்கின்றேன், தயவுசெய்து கூறுவீர்களாக."

கலைவாணன்:—"அம்மா! கற்பின் இலக்கணத்தைப் பெரியோர், காசி காண்டத்தில் விவரித்துக் கூறியுள்ளனர். இவற்றை நல்லறிவு கொண்டதன் பயனாகப் பெண்கள் தாமாகவே அறியவேண்டும்.

"முன்பு நான் கூறிய யாவும் கற்பரசிகளின் குணமேயாம். கற்புடைய பாவையர்கள் தமது கொழுநர் உண்ட பின்னர், தாம் உண்பர். அவர் துயின்ற பின்னர்த் துயிலச் செல்லுவர்; அதிகாலையில் அவருக்கு முன்பாக எழுந்து இல்லத்தின் காரியங்களைக் கவனித்திடுவர். எதிர் பேசாதிருத்தல் பெண்டிர்க்கு அழகு. தமது கேள்வர் முனிந்துரையாடினும், முன்னின்று துணிந்த நெஞ்சோடு அவரிடத்து எதிர்மொழி கூற நாணுவர். அவரிடத்தில் எப்பொழுதும் மெய்யன்பும், பக்தியும் பூண்டு நிற்பர்.

"இவை மட்டுமன்று. மற்றுங் கேள், 'நிறைமாண்பில்லாத பெண்டிரை நீக்கலினிதே' என்றும், 'ஆர்த்த மனைவியடங்காமை நன்கின்னா' என்றும், உள்ளன அவர் உணருவர். அவர் தமது அகமுடையானின் சொற்களைக் கடவார். அவனது குறிப்பை அறிந்து அதன்படி நடப்பர். அவன் வெறுப்பனவற்றை விரும்பார். இன்ப துன்பங்கள் யாவற்றையும் அவனோடு உடனிருந்து தாமும் அனுபவித்திடுவர். இவை கற்புடைய பெண்டிரது கடனாம். தமது காதலரைக் கண்டோ

ரனைவரும் இகழ்ந்து, 'பாவி' யெனக் கூறித்தூற்றினும் தாம் கொண்ட பக்தியிற் சிறிதும் குறையாதிருக்கும் மாதர் தெய்வமென்றே பல்லோராலும் புகழப்படுவர்.

"கணவரிடத்துக் களங்கமற்ற பக்திபூண்ட அத்தகையோரைக் காணத் தெய்வங்களும், கூற்றுவனும் அஞ்சுவர். அவர்கள் பெய்யென, மழையும் தட்டாது பெய்திடும். அவர்களிட்ட சாபம் பலியாதிருந்திடாது. அவர்களின் ஏவலைச் செய்ய எவரும் பின் வாங்கார். அத்தகைய கற்புடைய நங்கையர்களின் சீரடிபட்ட மண்ணிட மெல்லாம் நீடூழி காலம் செழித்துப் புண்ணிய பூமியென்று அழைக்கப்படும்.

"குழந்தாய் குணநிதி! உன்னை என் கண்ணே போல் வளர்த்து வந்தேன். குலமும் குணமும் நாடி அறிந்து, உத்தமனைத்தேடி உன்னை மணம் செய்தும் கொடுத்தேன். ஈசனது அருளால், நீ சுக வாழ்வை அடைந்திட வேண்டும். ஒழிந்த நேரங்களில் நல்ல புத்தகங்களைப் படித்துவா. உடல் நலத்தையும் கவனித்துக்கொள். நமது முந்தையோர்களின் நேரிய வழிகளினின்றும், சற்றும் வழுவிச் சென்றிடாதே. ஆடம்பர வாழ்க்கையில் இச்சை வைய்யாதே. நவநாகரிகப் பழக்கங்களால் பற்றப்பட்டுப் பரிதவித்திடாதே. குழந்தைகளே! க்ஷேமமாக இருங்கள்."

இவ்வாறாகக் கூறி முடியு முன்னர்க் கலைவாணனுக்கு மிக்கக் களைப்பு வந்துற்றது. நாவும் பேசமுடியாது தடுமாற்றமுற்றது. தந்தையின் பரிதாப நிலையைக் கண்டு தாளாத மைந்தர்கள் மெய்ம்மறந்து அலற லாயினர். பின்னர் அங்கு நிகழ்ந்த செய்திகள் கூறாமலே விளங்கும்.

# 4. மன்னுயிரும் தன்னுயிரும்.

## I

### (அறவழியின் உயர்வு)

‘ தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர்வைகலு மோம்பி யெழுமின்,’

—திருத்தக்கதேவர்.

**மா**னிடப் பிறவி யெடுத்தோர் யாவரும் அடைதற்பாலனவாகவுள்ள பெரும் பேறுகள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. மோக்ஷப் பேறெனப்படும் கடைநின்ற வீட்டின்பம் மறுமையிலடையக்கூடிய நற்பயனாகும். அது எல்லோருக்கும் எளிதில் கிடைக்காதது. அப்பயனை அடைவதற்கு ஏதுவாக நிற்பன எஞ்சிய பிற மூன்று பொருள்களுமாகும். அம்மூன்றும் இம்மையில் பெறக்கூடியன. அவற்றுள் அறமாவது, சான்றோர்களாக்கிய நூற்களில் கூறியன கொண்டு ஒழுகி வழிபட்டு நிற்றலும், அவர் தாம் தீதென விலக்கியன கனவிலும் கருதாது ஒழித்தலுமாம். ‘அறம் செய்’ என்று கூறாது, ‘அறஞ் செய விரும்பு’ என்றார், அருங்கலை யுணர்ந்த ஔவையாரும். அறவிருப்பமே அத்துணை மேலானதாயின் அறஞ் செய்தலின் உயர்வைக் கூறவும்வேண்டுமோ?

அறமே மற்றைப் பொருளின்பங்களிலும் அதிகமான உறுதியுடையது. மக்களுயிரை மேன்மையுட்படுத்த இவ்வறமே துணையாகின்றது. அறத்தினது உயர்வை அளவிட

முடியாது. அது கொடுத்துதவும் பயன்களைக் குறித்தும் முடியாது. மேலான அறத்தின் தன்மையை நன்கு விளக்குவான் வேண்டியே அறமொழிப் புலவரும்,

> 'அறத்தினூங் காக்கமு மில்லை யதனை
> மறத்தலி னூங்கில்லை கேடு'

என்று சிறிய பாவிலே பெரிய கருத்தைப் பொதிய வைத்துள்ளனர்.

இத்துணைச் சிறப்புள்ள அறமென்ற நல்லொளியின் கண்ணே திகழும் 'கருணை' யென்ற கட்டழகு வாய்ந்த திவ்விய ஒளி, இணையற்ற ஒன்றாக விளங்குகின்றது. கருணை யென்ப தொன்றிருக்குமாயின், தருமங்கள் யாவற்றிலும், அது வொன்றே மேம்பட்டு நிற்றற்குரியது. வடமொழி யாளரும் 'அஹிம்சா பரமோதர்ம:' என்றார். துன்பம், ஹிம்சை, இன்னல், இடுக்கண், வருத்தம், துக்கம் என்ற பலவற்றிற்கும் எதிரிடையாக உள்ளன அன்பு, கருணை, இன்பம், பிரியம், நேசம் என்பவை. பிற ஜீவாசிகளுக்கு, மனம் வாக்குக் காயங்களால் எவ்விதத்திலும் தீங்குகள் செய்யாதிருப்பது கருணையொளியின் கருத்து. அன்பெனினும் கருணையெனினும் குறிப்பது பொருளாகிய அருளொன்றையேயாம்.

## (அன்பின் வகை)

அன்பே இடத்திற்கேற்றவாறு வெவ்வேறு பெயர்களைக் கொண்டு வருவது. பொதுவாகத் தண்ணொளியோடு கூடிய தயாள குணத்தைக் கருணையென்பர். ஜீவ ஜந்துக்களிடம் கொள்ளும் அன்பை 'ஜீவகாருண்ய'மெனப் புகலுவர்.

தெய்வமிடத்துக் கொள்ளும் அன்பைப் 'பக்தி'யெனச் செப்புவர். பெற்றோரிடத்துக் கொள்ளும் அன்பை 'மாதரு பிதுரு பக்தி' யென மொழிவர். உடன் தோன்றியவரோடு கொண்டிடும் அன்பை 'வாஞ்சை' யென வுரைப்பர். மனைவிபால் கொள்ளும் அன்பைக் 'காத' லென்பர். கணவனிடம் கொள்ளும் நேசத்தைப் 'பதிபக்தி' யென நவிலுவர். மைந்தரிடம் கொள்ளும் அன்பு 'பிரியம்' என்றும், பெரியோரிடத்தில் கொள்ளும் அன்பு 'பணிவு' என்றும், தோழனிடத்தில் கொள்ளும் அன்பு 'நட்பு' என்றும், பொதுவாக எப்பொருளிடத்தும் கொளளும் அன்பு 'பாச' மென்றும், இவ்வாருகப் பலவகையாகக் கூறுவர். உலக வாழ்க்கையை இன்ப வாழ்க்கையாக்குவது எங்கும் நிறைந்துள்ள அன்பேயாம். அன்புடையோர் தம்முயிரைப்போல் மன்னுயிரையும் கருதும் கருணை வழி நிற்பவராதல் வேண்டும்.

கருணை யென்றதால், அதனோடு இணைந்துள்ள அருளுடைமை, இன்னு செய்யாமை, கொல்லாமை, அடக்கம், இன் சொலுடைமை, ஒழுக்கம், கொடை, பொறை முதலிய பிற நல்வினைகளும் அதனுள்ளடங்கும். எங்ஙனம், தமக்கு நேரிடுந் துன்பத்தைத் தாங்கொணுது மனிதர் அஞ்சுகின்றனரோ, அங்ஙனமே அத்துன்பத்தைப் பிறவுயிரும் ஏற்றுக் கொள்ள அஞ்சுமென்பதில் ஐயமென்ன? இன்னவை மனிதருக்குத் துன்பந் தருமென அறிந்தவற்றைப் பிற உயிரிடத்தும் செய்யாதிருத்தல் வேண்டுமென்பது தெற்றெனத் தெளிவுறும். தனக்கு வந்தால் துன்பம் பிறருக்கு வந்தால்

அது துன்பமாகாதா? பின்னர் மன்னுயிருக்கு ஏன் இன்னு செய்யவேண்டும்?

'பிறர்க் கின்னு செய்தலிற் பேதைமையில்லை'

யென்றார் பெரியோர். ஜீவகாருண்யங் கொண்டோருக்கு, அப்புண்ணியத்தால், மிளிரும் கதிரவன் வரவால் கலங்கியக லும் பனியெனப் பிறதீவினைகள் யாவும் அழிந்திடுமென்பர்.

## II

### (தன்னுயிரும் மன்னுயிரும்)

**பு**ழுவும் பூச்சியும் புற்றுவைத்து உண்டிடும் இப் புன் புலால் யாக்கையைப் போற்றி மனிதர் போஷித்து வளர்க் கின்றனர். காற்று வீசி மோதித் தாக்கினும் உடலுக்குத் துன்பம் நேரிடுமென்று அச்சங்கொண்டு, உடலைக் கம்பளி களாற் போர்த்து, அடக்கமான தோரறையிற் பாவையைப் போலப் பதுங்குகின்றனர். சிறிய முள்ளொன்று காலிற் றைப்பினும், போரபத்து வந்து மூண்டதெனக் கலங்கிக் கண்ணீருகுத்துத் தாம் பேரவதிப் பட்டுழலுவர். மற்றும் தம்மை ஈ, எறும்பு அணுகாவண்ணம் பஞ்சுபடாத பாடும் படுவர். ஒவ்வொருவரும் தமக்காகப் படும் பாடு கொஞ் சமா!

மனிதரைப்போலவே ஒவ்வோருடலோடு கூடிய உயி ரும் தத்தஞ் சுகங் கருதித் தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்ள விரும்புமன்றோ? விலங்கினங்களுக்குத் தமது

மனதில் நினைத்திடும் எண்ணங்களை விளங்குமாறு வெளியிடு தற்குரிய பேசுந்திறனும்; செய்யத்தகுவன இவை, தகாதன இவை, இவ்விக்காரியங்களில் இவ்விவ்வாறாகப் பயனைப் பெறுவோமென்று, நன்கு தெரிந்துகொள்வதற்கு வேண்டிய பகுத்தறிவும், இயற்கையிலேயே இல்லையாயினும், மனிதரைப்போலவே அவற்றிற்கும் உயிரும், இளமையும், இறப்பும், பிறப்பும் உண்டு. அவையும் ஓடியாடித் திரிகின்றன. துன்பம் வந்த காலத்து அவை தாமும், துடிதுடித்துப் பதைக்கின்றன. இன்பமுற்றகாலையில் முகமலர்ச்சியோடு மகிழ்ந்து கூத்தாடுகின்றன. இளங் குழவியைப் பறிகொடுத்திடின் அவை படும் அவதி, அந்நிலையிலுள்ள ஆறறிவினங்கள் படுமாறே உள்ளன. மக்களுக்கு உண்டாகும் ஒவ்வொரு நிலையும், செயலும், அவற்றிற்கும் செவ்வனே பொருந்தியுள்ளன.

## (குறிக்கோண்டு காத்தல்)

**த**ம்முயிரைப் போற்றி நிற்போர், பிற உயிர்களை வருத்தி அவமதித்து அவைகளை இம்சித்தல் தகுதியாகாது. மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதி, அதற்குற்ற துன்பங்களைத் தனக்குற்ற அல்லல்களாக எண்ணிக் 'குறிக்கொண்டு' காத்தல் வேண்டுமென்று உயர்ந்தோர் கூறுவர். குறிக்கொண்டு காத்தலாவது, உரையாசிரியர் பரிமேலழகர் கூறியாங்கு, நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தமது தொழில்களாலும் மற்றை வழிகளாலும் பிற உயிர்களுக்கு வரும் இன்னல்களைத் தமது அறிவின் பயனால் முன்னதாக அறிந்திட்டு, அவைகள் வாராமற் காத்தலாம்.

(பழக்க மேனப் பாவஞ் செய்தல்)

மன்னுயிரைத் தன்னுயிர்போல் கருதாதிருத்தலுக்குப் பழக்கமும், செருக்கும், கோபமும் சில காரணங்களாகும். மனிதர்களின் பழக்கத்தில் கையாளப்பட்டு வரும் விஷயங்கள், நாளடைவில் சாமானியமாக வைகலும் அநுசரிக்கப்பட்டு வரும் வழக்கமான செய்தியாகி, வேரூன்றிவிடப் பின்னர் நீக்குதற்கியலாது போகின்றன. ஆயின் பழக்கமென்று பாவச்செயல்களைப் புரிந்திடுதல் நீதியாகாது. பகுத்தறிவுக்கு அது அழகாகாது. கடவுளுக்குச் சம்மதமாகாது. இம்மேதினியி னியல்பையும், யாக்கையின் தன்மையையும் பரமாத்துமாவின் செயலையும், ஆன்றோர்களின் கருத்தையும், நீதி நூற்களின் அறமொழிகளையும், ஜீவாத்துமாக்கள் பற்ற வேண்டிய பேற்றையும் உள்ளபடி யுணர்ந்து, நல்லன கொண்டு அல்லன கடிந்திடும் உத்தமர்களின் செயலாயின் அதனைக் குற்றமென்பதற்கில்லை. அவர்கள் சகல சாஸ்திரங்களையும் கற்றறிந்த கலைஞர். உண்மையை உணர்ந்திட்ட உத்தமர். பலரின் நன்மையையும் நாடும் நல்லோர். செய்வன செய்யத் தகுவனவே செய்யும் செம்மையோர். குற்றமென்பனவற்றைக் குனித்தும் பாராத குணநிதிகள். இத்தகையோரிடம் காணப்படும் பழக்க வழக்கங்கள், சாஸ்திர சம்மதமும், அவர் தமது களங்கமற்ற மனத்தின் பூரண அநுமதியும் பெற்றே இருக்கவேண்டுமென்பது சாதம். ஆயின் கண்மூடித் தனமாகத் தம்மைத்தாமே யுயர்த்திக்கொண்டு, தாறுமாருகச் செய்யும் பிறரின் தீய செயல்கள், பழக்கமென்ருலும்

வழக்கமென்றாலும் பாவச் செயலென்றே கொள்ளப்படும். கொடிய அப்பழக்கத்தைப் பாழுடையவிட்டு விலக்குவதே மேலான குணத்தினது அழகாகும்.

(சினத்தின் சிறுமை)

'தன்னைத் தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்'

என்றார் பெரியாரும். கோபம் மன்னுயிரைத் தன்னுயிரைப் போல் பாவிக்க விடாது. கோபம் கொடிய குணமுடையது. கோபத்தால் உலைந்தலைந்தோர் கொஞ்சமல்ல. அது பழி பாவத்தை யூட்டும். நரகத்திலாழ்த்தும். மதியைக் கெடுக்கும். மனதைக் கலைக்கும். நிம்மதியை யொழிக்கும். நகையை அழிக்கும். ஆத்திரத்தை அதிகரிக்கும். மனதைச் சஞ்சலிக்கச் செய்யும். தனது குணத்திற்கு மாறான செயல்களைச் செய்யத் தூண்டும். யோசியாது கொடிய காரியங்களைச் செய்வதற்குத் துணைவனாகும். நல்லவரின் நேசத்தைச் சுடும். உறவினரைப் பகையினராக்கும். உடன் பிறந்தவரை மாறுபடச் செய்யும். இதுபற்றி யன்றோ 'உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்குசினங் காத்துக் கொள்ளும் குணமே குணமென்க' என்றார் கற்றறிந்த மூதறிவாளரும். சுருங்கக் கூறி விளங்கவைக்கும் தமிழ் மூதாட்டியாரும், 'ஆறுவது சின' மென்றார்.

தம்மிடத்து அடங்காக் கோபங்கொண்டு, கொடிய தீங்குகளைச் செய்தவர்களைத் தண்டிக்க வேண்டுமாயின், அதற்கு மோருபாயமுண்டெனப் பகர்வ ரான்றோர்.

அதுவே அவ்வின்னு செய்தாரது பிழைகளைப் பொறுத்து நின்று, அவர் தாமே நாணும்படியாக அவர் தமக்குத் தாம் நன்மைகளைச் செய்தலேயாகும். இதுவே குற்றமிகச் செய்தவர்களைக் கொல்லாமற் கொல்லும் ஏற்ற சிற்றறிவாளாகு மென்பர். பிழைகளிருக்குமாயினும், மன்னுயிர்களின் பிழைகளைப் பொறுத்திட்டவரே புகழும் மேன்மையுமுடையவராவர். 'பொறுத்தார்க்கன்றே பொன்றுந் தனையும் புகழ்!' ஒறுத்தார்க்கு ஒரு நாளைக்குத்தானே இன்பம் வந்தெய்தும்!

> 'சாந்தனையுந் தீயனவே செய்திடினும் தாமவரை
> யாந்தனையுங் காப்ப ரறிவுடையோர்'

என்பதுவும், அறிவாளரது குணத்தை நன்கு தெளிவுறுத்தா நிற்கும். பொறுமையின் பெருமையை என்னென்பது!

## III

### (விலங்கினங்களின் அன்பு)

**அ**ன்பு என்பது மனிதருக்கே உரித்தாயதோர் தனிக் குணமன்று. விலங்கினங்களிடமும், புள்ளினங்களிடமும் விளங்கிடும் தூய இக்குணத்தையும், அன்பென்றே குறித்திடல் வேண்டும். தன்னை வளர்ப்பவனைக் கண்டு, அன்பினால் கொஞ்சிக் குலாவித் துள்ளிக் குதித்து வாலைக்குழைக்கும் நாயும்; அசைந்து அசைந்து ஆடி. வந்து, தனது உரியோனை நக்கிக் கொடுக்கும் மாடும்; தோளிலும் மார்பிலும் கையிலும் தாவித் தாவி ஓடியாடுகின்ற கிள்ளையுமே போதிய சான்றுகளாகும். பல பிராணிகள் மனிதர்களை அண்டியே

அன்பாகிய தளைக்குட்பட்டுப் பிழைக்கின்றன. கொடிய மிருகங்களெனக் கருதப்படும் வன விலங்குகளும், தம்மை வளர்ப்பவனிடத்துக் கொண்டுள்ள ஆர்வத்தைப் பலவிடங்களிலும் காணலாம். அன்போடு பிராணிகளை நேசிப்பவனை அவைகளும் பிரியத்துடன் நேசிக்கின்றன. உலகமே இயற்கையில் அன்பால் பிணிக்கப்பட்டுள்ளது. ஆயின் வஞ்சக லோப மூடப் பற்றுக்களாலும், தானென்ற தாழ்ந்த கருமமற்ற சிந்தனையாலும், அன்பென்னும் அதியுன்னதமான அழகிய அரும் பெரும்பேறு, அகங்காரமென்ற அந்தகார இருளில் இடந்தெரியாது இழுக்கப்பட்டு மறைவுற்றுச் செல்லுகின்றது. எப்படி மனிதர் மனிதரிடம் நடக்கின்றார்களோ, அப்படியே மனிதர் மற்றைப் பிராணிகளிடத்தும் அன்பு காட்டவேண்டுமென்பது பிறர் கூறித் தெரிய வேண்டிய விஷயமா?

## (அளவற்ற ஆசை)

குபேர சம்பத்திலிருக்கும் தனவானுக்கும், செல்வமென்பதைக் கனவிலும் கண்டிராத வறியருக்கும், பிறருக்கும் ஆசை ஒரு நிகராகவே இருக்கும். தீய வழிகளிலே முன்னவர், பொருள் தேடி மனக்கோட்டை கட்டி மதிமோசம் போதலுண்டு. பின்னவர் எட்டாத பொருளுக்குக் கிட்டாத முயற்சிகளைச் செய்து வருந்துவர். சாதாரணமாகத் தங்கும் வீட்டிற்கும், உடுத்தும் உடைகளுக்கும், மனைவி மைந்தரின் சுக வாழ்க்கைக்கும், தமது தேக நிலைக்கும் மனிதர் கொள்ளும் ஆசைகளோ அளவிலடங்காதன. அவை சித்தியாத

விடத்துப் படும் பாடு கொஞ்சமல்ல. மன்னுயிர்களும் தமது வாழ்க்கையில் பற்றுவைத்து, அளவற்ற ஆசைகளைக் கொண்டிருக்கு மென்பதில் ஐயமென்ன?

## (மன்னுயிருக்குத் துன்ப மிழைத்தல்)

**மா**டுபோலுழைத்த பின்னும் மனமிரங்காது கூலிகளிடம் வாது செய்து வருத்தமுறுத்தும் வம்பர் கொஞ்சமா? நாள் முழுவதும் பாடுபட்டும் பயனற்றுப் போகும்படி எசியிடித்திடும் மதியீனர் கொஞ்சமா? செருக்குற்றுத் தாம் செல்வாக்காக இருக்கையில், சமமற்ற ஒருவர் உதவி வேண்டிக் கூறக் கூசி வாய்புதைத்து, மெய்பதைத்து, வணங்கி எதிர் நிற்பதைக் கண்டும் காணுதாரைப்போலிருக்கும் ஈகையற்ற கசடர் கொஞ்சமா? உலக மேடையில் செல்வர்களும், செல்வமற்றோரும், வைகலும் நடித்துக் காட்டித் தோன்றி மறைந்து நிற்கும் கூத்தைக் காண்போர் யாவருக்கும், ஊன்றி நோக்கி, ஆழ்ந்து யோசித்து நிற்குங்கால், மன்னுயிரும் தன்னுயிராவதின் ஒற்றுமை வேற்றுமைகள் நலமுடன் நன்கு விளங்கிடும். தாமுறும் இன்னல்களிவை என்று எடுத்துரைக்க இயலாத பேதை—மூங்கைபோலுள்ள உயிர்களை, நிற்க நிழலும் படுக்க இடமுமற்ற மிகச் சிறிய பட்டியிலோ தொழுவத்திலோ அடைத்து வைக்கின்றனர். இழுக்க முடியாத பெரும் பாரத்தை வண்டிகளிலிட்டு, மாடுகளையும் குதிரைகளையும், நையப்புடைத்து நலிய வருத்தி, அவற்றின் கண்ணீர் வடிவதும் காணுது, உடல் விதிர்த்துப் பதைப்பதும் நோக்காது குத்தி ஓட்டுகின்றனர். மாட்டின் வாலைக் கயிறுபோல் முறுக்கி, முதுகெலும்பு முறியும்படி

அடித்து ஓட்டுகின்றனர். இவை பார்க்கத்தான் படுமோ? அன்றிச் சொல்லத்தான் படுமோ? பேசும் திறனும் எதிர்த்துத் தாக்கக் கூடிய ஆற்றலும் பெற்றிருப்பின், அவையும் தம்மைக் காத்துக்கொள்ளாவா?

மற்றும், பறவைகளைக் கூண்டுகளிலடைத்து வேடிக்கைப் பார்ப்பதும், சிறுவர் தும்பி முதலியவற்றைப் பிடித்துக் கயிறு கட்டி விளையாடுவதும், அவற்றின்மேல் கல்லெறிவதும், அவை துடிதுடித்துப் பரிதவிப்பதைக் கண்டு பேரானந்தப்படுவதும், கருணையென்பதைக் கடுகளவாகிலும் பெற்றிருப்போர் பார்த்திடில் சகித்திடுவாரா? சிறியவர்களை இளவயதில் நல்வழிப்படுத்துவது அவர் பெற்றோர்களின் கடமையன்றோ? 'ஐந்தில் பழகாதது ஐம்பதிலா பழகும்?' சிறுவர்களைத் திருத்தித் தீயவழிகளினின்றும் விலகச் செய்யாத பெற்றோர்களுக்கன்றோ அப்பாவம் சாரும்? பிறவுயிர்களுக்கு இன்னல்களிழைத்து, அளவற்ற தானதருமங்களைச் செய்தாலும் அதனால் பயனென்ன? அவை சந்திரனில்லாத இரவையும், பக்தியில்லாத பூஜையையும், மணமில்லாத மலரையும், மதுரமில்லாத கவியையும், தலைவனற்ற திரண்ட சேனையையும், சேயில்லாத செல்வத்தையும், அறிஞரில்லாத சபையையும் நிகர்த்து நின்று, ஒருவிதமான நற்பயனையும் பயந்திடாது. இழிய வீணடம்பரச் செயலொன்றாகவன்றோ ஆய்விடும். அன்பில்லாத வாழ்க்கையு மொரு வாழ்க்கையா? முற்பகல் தான் மன்னுயிருக்குச் செய்த இன்னல்களைப் பிற்பகலில் தன்னுயிருக்கே ஒருவன் வந்து சேரப்பெறுவனன்றோ?

## IV

### (தன்வினை தன்னைச்சுடல்)

முற்பிறப்பில் ஜீவன்களை வருத்தியவர், மறுபிறப்பில் தாம் பேரவதிப்பட்டு வருந்தி யலைந்த விருத்தாந்தங்கள், பலப் பலவாக நன்னூற்களில் கூறப்பட்டுள்ளன. தசகுமார சரித்திரத்துள், அன்னப்புள்ளை நூலிட்டுக் காலைக் கட்டிய பாவத்தால், பின்பு வெள்ளி விலங்கு கிடைத்ததென்று குறிக்கப் பட்டுள்ளது. சீவகன் தனது சுற்றத்தாரிடமிருந்து பிரிந்து சென்று சிறைப்பட்டது, முற்பிறப்பில் அன்னப்புள்ளொன்றை அவன், அதன் சுற்றத்தினின்றும் பிரித்துச் சிறை வைத்ததாலாமென்று சாரணர் கூறியுள்ளார்.

*

### (கொல்லா விரதம்)

ஆயிரம் யாகங்களைச் செய்து அடைந்திடும் பயன் உயிரொன்றைக் கொன்று அதன் ஊனையுண்ணாதிருத்தலின் பயனுக்கு நிகராகுமெனப் பெரியோர்கள் கூறுவர். கொல்லா விரதங்கொண்ட நல்லோரை எல்லா உயிரும் கைகூப்பித் தொழுதிடும். தமது உடம்புகளை வளர்த்தற் பொருட்டு, மற்றொன்றின் உடம்பைத் தின்போர் கடவுளின் அருளை யெங்ஙனம் பெற்றிடுவர்? மன்னுயிரின் ஊனைத்தின்று தன்னுயிரின் ஊனைப் பெருக்கி, இறுதியில் அதனை மண்ணுக்கு இரையாக்கிச் செல்லுவோர், கொலைப் பாவத்திற்காளாகிக் கொடிய நரகமடைந்து, அவதிப்படுவரென்பது பாவலரின் கிளவியன்றோ? முற்பிறப்பிற் கொலை செய்தவர்

இப்பிறப்பில் இழிய வறுமையாலும், கொடியபிணியினாலும் வலுவிலே பற்றப்பட்டு வருந்துவரெனக் கூறப்பட்டுள்ளது. கொல்லாமையே அறவினையெனப்பட்டது. தன்னுயிரைப் போல் மன்னுயிரையும் நினைத்தலே தருமத்திலெல்லாந் தலை நிற்கும் தருமமாகக் கருதப்படுவது! அதுபற்றியே

'நன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும்வினை'

என்றார் குறளிலும்.

## (அருளுடைமை)

எவ்வுயிரையும் தம்முயிரைப் போலக் கருதி அன்போடிருப்பவரே எங்கும் பெருமைக்குப் பாத்திராவர். அன்பே அருளாகும். அருட்செல்வமே செல்வத்துளெல்லாந்தலை. அதுவே இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் ஏதுவாக நிற்பது. அருள் சேர்ந்த நெஞ்சினரே இம்மையில் சிறந்து நிற்பதோடு மறுமையிலும் முக்திப் பேற்றினை யடைகின்றனர். இவ்வுலகத்தியற்கையோ, முன்னுக்கு வரவிடாது பின்னுக்கு இழுத்திடும் இருள் மயமானது. கற்றுக் கற்ற வழி நிற்கும் அறிவுடைமையே, அவ்விருளைப் போக்கவல்ல கைவிளக்கு. அக் கைவிளக்கிலிட்டு விளங்கச் செய்யும் நெய்யே அருளுடைமை.

அருளகத்திலில்லாதவன் செய்யுந் தான தருமத்தை ஆராய்ந்திடின், அது மெஞ்ஞானமில்லாதவ னுண்மைப் பொருளைக் காட்டுதலைப் போலவும், பிறவிக்குருடன்

இயற்கை வனப்பை யெடுத்துரைப்பதைப் போலவும், மூட ரில் தலையாகும் முழுமூடன் நல்லற உபதேசங்களைக் கூறு தலைப்போலவும், கற்றறியாத கசடன் கவியாராய்ந்து கல்வி யின் உயர்வைப் புகலுதலைப் போலவும் மேன்மையுறாது கீழ்மைப்படும்.

கருணையென்ப தில்லையாயின் இவ்வுலகத் தின்பமு மில்லையாகும். பொருளற்றவருக்கு இவ்வுலகமில்லை. அரு ளற்றவருக்கு அவ்வுலகமில்லை. பொருளற்றாரேனும் அப் பொருளை மீண்டுமோர் முறை பெற்று உயரினுமுயருவர். அருளற்றாரோவெனின் அவர் அற்றாரே எதுவுமற்றாரேயா வர். அற்ற அருளை மீண்டும் பற்றுவாராயினும் அவருக்கு, உற்றபாவம் அவரினின்றும் நீங்காது நிலைத்தே நிற்கும்.

‘ கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத்தெளிந்தா னேனு
மலையென வுயர்ந்தா னேனு மனமய லகன்றா னேனு
முலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கையனேனு
மிலகிய விரக்க மின்றே லெழுநர கடைவ னன்றே’

எனப் பதிபசு பாச விளக்கமும்,

‘ துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலன் கெட்ட
புல்லறி வாளர் வயிறு’

எனப் பதினென்கீழ்க் கணக்கு நூற்களில் ஒன்றான நாலடி யாரும், தெளிவாகக் கூறுவன காண்க.

# 5. ஆங்கில நாடகக் கலையபிவிருத்தி.

## I

### (நாடகத்தின் நோக்கம்)

**ம**க்களது வாழ்க்கையில் அனுதினமும் நிகழ்ந்திடும் செய்திகளையே நாடகங்கள் எழுத்துருவாக்கிக் கூறுகின்றன. வாழ்க்கைச் சம்பவங்களை ஒட்டி, நாடக நூல்களிலும் நாடக பாத்திரங்களாக வந்திடும் மக்களுக்கு, இன்பமும் துன்பமும் ஒன்ருெடொன்று மாறி மாறி வருமாறு அமைக்கப்பட்டிருக்கும். கண் பிசைந்து அலறி அழுது செல்வோர் ஒரு புறமாக வருந்திச் செல்ல, ஆனந்தப் பரவசராகி மகிழ்ந்து செல்லுவோர் மற்ருெரு புறமாகக் களித்து ஏகுவர்.

நாடகமேடையிலும் நாடக நூற்களிலும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயமொன்றுண்டு. இயற்கையாக உலகில் நடந்திடும் முறைகளில், அவை சற்றும் பிறழாதபடி அமைந்திடல் வேண்டும். அழகிய சித்திரங்களின் காட்சி, கண்ணைக் கவர்ந்து நயனத்திற்கு நல்ல விருந்தை அளித்திடுமாறுபோல், சிறந்த நாடகங்கள் காட்சி இன்பத்தோடு மட்டும் நின்றிடாது, கருத்திற்கும் நல்ல உணவையும் பெரும் மகிழ்ச்சியையும் அளித்திடும். நாடகங்களின் தலைசிறந்த நோக்கம், காட்சிக்கும் கருத்திற்கும் இனிமை பயப்பதாகவும், பார்ப்போருக்குப் பற்றிடச் சிறந்த பயனை அளிப்பதாகவும், இருந்திடல் வேண்டுமென்பர் நாடகக்கலை நன்குணர்ந்த நாவலர்கள். நாடகங்களைக் கண்டு செல்லுவோர் தாம் கண்ட காட்சிகளைச் சிந்தித்து, நல்லன இவை, தீயன இவை

என்று ஆராய்ந்து, அவற்றை நன்கு அறிந்து, தீயனவற்றை நீத்து, நல்லனவற்றைப் பற்றி, அவற்றின் வழிப்படி ஒழுகி, அறிவைப் பெருக்கி, அறவழிப்பட முயலுமாறு செய்விக்கக் கூடிய, அத்தகையதான கதைப் போக்கினைக் கொண்டதாக வே நாடகங்கள் அமைந்திட வேண்டியது மிகவும் அவசிய மானது.

சமூக வாழ்க்கைச் சீர்திருத்தங்களை உணர்த்தவும், நவீன வழக்குகளைக் கண்டித்து நல்ல வழக்குகளைப் புகட்டவும், முன்னேற்றத்திற்குச் சாதகமான பல பொருள்களையும் விளக்கிக்காட்டவும், நாடக மேடையே சிறந்த இடமாகலின் அத்தகைய மேடைகளில் நிகழ்ந்திடும் நாடகங்கள் ஒவ் வொன்றும், அறம், பொருள், இன்பம் வீடாகிய நான்கினில் ஒன்றையோ, அன்றிப் பலவற்றையோ அடிப்படையாகக் கொண்டு, நடத்தப்படல் சாலவும் சிறந்ததென்பது விளங் கும். வேறுவேறான குணங்களைக்கொண்ட, ஆடவரும் பெண்டிருமாக வேடம் தரித்து, மேடையில் நடித்திடுவார் களாகலின், நாடகம் காண வந்தோருக்கு அது, உலகில் இயற்கையாக உள்ள விஷயங்களை விளக்கிக் காட்டுவதாக நின்று நற்பயனை அளித்திடும். சுருங்கக் கூறுமிடத்து நாட கம், பாடலால் செவினிக்கினிமையையும், ஆடலால் காட்சி யின்பத்தையும் பயத்தலோடு நின்றிடாது, கருத்திற்கும் அறவழி காட்டியாக நின்று நற்பயனளித்திடுவதாக அமைந் திடல் வேண்டுமெனக் கூறலாம். பலர் கூடிய ஓரிடத்தில் சொற்ப நேரத்தில், ஒரே சமயத்தில், இத்தகைய மூன்றுவித மான பயன்களையும் அளித்திடக்கூடிய பெருமை, நாடகத்

தைப் போன்று பிற எவற்றிற்கும் அமைந்திடாது. வாழ்க்கையின் பிரதி பிம்பமாக அமைக்கப்பட்டிருக்கும் நாடகங்களைக் காண்பதால் மக்களின் அறிவு திரிந்து விசாலமாகு மென்பதில் ஐயமில்லை.

## II

### (நாடகத்தின் பிரிவு.)

நாடகங்கள் முக்கியமாக மூன்று பிரிவினைக்கொண்டுள்ளன. ஒன்று, உயர்ந்த நிலையிலுள்ள நாடக பாத்திரங்கள் விதிவசத்தாலோ, அன்றி வஞ்சனை, கோபம், பொறாமை யாகிய இவை போன்ற தீய குணங்களின் வசப்பட்டதாலோ தமது நன்னிலையினின்றும் வழுவி, பாடு பலபட்டுக் கொடிய கொலைகளின் இடையில் தம்முயிரை ஈந்திடுவதாக உள்ளது. இத்தகைய நாடகங்கள், துக்ககரமான செய்திகளைப் படிப் படியாகக் கூறிவந்து, முடிவில் முக்கியமான நாடகபாத்திரங்களின் இறப்பைக் கூறும். இங்ஙனம், துக்ககரமாக முடியும் சோக நாடகங்களை ஆங்கிலத்தில் 'டிரேஜடி' என்பார்கள். இவ்வகுப்பு நாடகங்கள் படிப்பவர் மனதைக் கலக்கும். துயரத்தை உண்டு பண்ணும். பரிதாபத்தை ஆக்கும்.

இரண்டாவதாக, இன்ப முடிவுடைய, 'காமடி' என்பதைக் கூறலாம். இந்நாடகத்தில், நல்ல பதவியிலுள்ள ஆடவரும் பெண்டிரும், தொடக்கத்தில் இன்னல் பல அநுபவித்து, ஒருவரையொருவர் பிரிந்து சென்று, இறுதியில் சந்தித்தும், மணங்கொண்டும் சுகமுற்றதாக முடிவமைந்திருக்

கும். ஆங்கிலத்திலுள்ள இவ்வகுப்புட்பட்ட நாடகங்கள், மேற்குறித்த அம்சங்களோடன்றி வேறு பல விதிகளுக்குட் பட்டதாகவும் உள்ளன.

மூன்றாவதாக உள்ளது, சரித்திர சம்பந்தமான நாடகங் களாகும். அவற்றில் சரித்திரமறிந்த அரசனோ, அன்றி உயர்ந்த செல்வாக்கு வாய்ந்த ஒரு சீமானோ, நாடகபாத்திர மாக அமைந்திட, அவனது வீரம் வெற்றி முதலியவை தோன்றுமாறு எழுதப் பட்டிருக்கும். இத்தகைய நாடகங் கள் பெரும்பாலும் தேச நேசத்தையும் ஒற்றுமையையும் ஊட்டுவதாக உள்ளன. சரித்திர நாடகங்கள், இக்காலத் திலும் மக்களது மனதில், தம் நாட்டுப் பழம் பெருமைகளை யும், அரசர்களின் சிறப்புகளையும், பழக்க வழக்கத்தின் போக்கையும் பசுமரத்தறைந்த ஆணிபோன்று பதியச் செய் திடுமென்பதில் சந்தேகமில்லையென்றே கூறலாம்.

மேற்கூறிய மூன்று வகைப்பட்ட நாடகங்களையன்றி முதல் இரண்டு வகைப்பட்ட நாடகக் கருத்துக்களும் ஒன்று சேர்ந்து, துன்பமுதலும் இன்ப முடிவுமாகக் கொண்ட "டிரேஜயோ காமடி" என்ற நாடகங்களும் எழுதப்படுத லுண்டு. இவ்வகைப்பட்ட நாடகங்கள், தொடக்கத்தில் ஒன்றன்பின் ஒன்றாகத் துயரமான விஷயங்களையே கூறி வரும். பார்ப்பவர் மனம் துக்கத்திலாழ்ந்து சோகமுற்றி டும் தருணத்தில், துயரங்கள் நீங்கி, நாடகப் பாத்திரர்களு க்கு மேன்மேலும் இன்பகரமான செய்திகள் நிகழுவதாகக் கூறும், பரிதவித்து நின்று நாடகம் பார்த்திட்டோர் மனமும் பின் பெருமகிழ்ச்சியை யடைவதாகும்.

(நாடகத்தின் அமைப்பு)

இத்தகைய நாடகங்கள் பல அங்கங்களையும், அங்கந் தோறும் பல காட்சிகளையும் கொண்டிருக்கும். ஆங்கில நாடகங்களில் பெரும்பாலன ஐந்து அங்கமே கொண்டுள் ளன. அவை ஒவ்வொன்றிலும் பல காட்சிகளிருக்கின்றன. முக்கியமாக ஆங்கில நாடகங்களில் கவனிக்கவேண்டிய விஷ யம் மற்றுஞ்சில உண்டு. அவை கால அளவும், நிகழ்ச்சி இட மும், நாடக பாத்திரமும் என்பவை. பல ஆண்டுகளாக நிகழ்ந்திடக்கூடிய பலபல செய்திகள், நாடகம் நடித்து முடிய வேண்டிய சிறிய கால அளவுக்குள் பொருந்துமாறு அமைக்கப்படும். பல இடங்களில் நடந்திருக்கும் செய்திகள் நாடக மேடையொன்றிலேயே பொருந்துமாறு காட்டப் படும். இயற்கையாக உலகில் உள்ளவாறே நாடக பாத்திரங் களின் குணங்களும் மேடையில் இருந்திடும். இம்மூன்று விசேஷ அம்சங்களும் ஒன்றுபட்டுச் சேர்ந்து இருக்குமாறே நூலியற்றுவர், இவற்றினையே ஆங்கிலத்தில் நாடக ஒற் றுமை களென்று குறித்திடுவர். ஆங்கில நாடக ஆசிரியர் கள் இவ்வொற்றுமைகளை நன்கு கவனித்து, அவை முரணு வாறு அமைத்துத் தமது நாடகங்களில் பெரும் பகுதியான வைகளை எழுதியுள்ளனர் சில ஆன்றோர்.

## III
(கோவில் நாடகங்கள்)

உலக சரித்திரத்தில், ஆதியில் நாடகமென்பது கிரேக் கர்களாலேயே எழுதப்பட்டது. பல வகைப்பட்ட நாடகங்

கள் எழுதுவதிலும் அவர்கள் வல்லவர்களாக இருந்தனர். நாடகங்கள், இந்திய நாட்டில் முதல் முதலாகத் திருவிழாக் காலங்களில் நடத்தப்பட்டு வந்தபடியே, ஆங்கில நாடகங்களும் தொடக்கத்தில் ஆங்கிலேயர்களின் கோயில்களிலேயே ஆரம்பமாயின. அதன்பின்னரே, ஆங்கில நாடகக் கலை, படிப்படியாக மேலான நிலைக்கு வருவதாயிற்று. ஆங்கில மொழியின் அதிர்ஷ்ட வசத்தால், ஆங்கில நாடகக் கலையை முன்னணிக்குக் கொணர்ந்து நிறுத்தப் பல் கலையின் பயிற்சியும், நாடகக் கலையில் சிறப்புற்ற தேர்ச்சியும் பெற்றிருந்த புலவர்கள் பலர் ஒருவர் பின் ஒருவராகத் தோன்றி, ஆங்கில நாடக உலகில், தமது அருமையான நூற்களைப் புகுத்தி அலங்காரம் செய்வார்களாயினர்.

முதலாக அவை, மக்களை வாழ்க்கையில் நல் வழிப்படுத்துவதிலும், காட்சியின்பமளித்துச் செவியின்பம் பயந்திடுவதிலும், தமது நோக்கத்தைச் செலுத்தி இருந்தன. அக் காலத்தில், மத சம்பந்தமான சரித்திரங்களும், மத வைராக்கியங்களைக் கொண்ட முனிவர்களின் கதைகளும், வேறுபல செய்திகளோடும் ஒன்று கூட்டிக் காட்டப்படும். நாடகங்களைக்கண்டு செல்லுவோர்கள், (பற்றிடின் பயன்படக் கூடிய நல்ல கருத்துக்களையும், யுத்திமதிகளையும், கொண்டுள்ள விஷயங்கள் நிறைந்த கதைப் போக்கினையுடைய தொடர்ச்சியான நல்ல சம்பவங்களே, நாடகங்களாக நடிக்கப்பட்டன.)

(அவற்றின் குறைபாடுகள்)

ஆயின், இவையாவும் பல விஷயங்களில் குறை பாடுடையனவாகவே இருந்தன. பெரும்பாலும் ஒரே விதமாக, மத சம்பந்தமான நாடகங்களே எங்கும் நடிக்கப் பட்டுவந்தன. அவை மிகவும் பெரிய கதைகளாக இருந் ததோடன்றிப் பலரும் அறிந்திருந்த சாமானியமான கதை களாகவும் இருந்தன. மற்றும் அந்நாடகங்கள், கோயில்கள் உள்ள இடங்களிலேயே நிகழ்ந்து வருவவாயின. அவை யாவும் 'லேடின்' பாஷையில் எழுதப்பட்டதாகவும், 'பைபிளி' லிருந்து எடுக்கப்பட்ட கதைகளாகவும் அமைந்திருந்தன. அவற்றை நடித்துவந்த நாடக பாத்திரர்கள், கதையினை விசாலமாக மேடையில் வந்து கூறிச் செல்லுவர். நாடகங் களில் இன்றியமையாத அம்சமொன்றாக அமைந்திருக்க வேண்டிய அபிநயம் முதலிய அருமையான பல விஷயங்கள் இவைகளில் கொஞ்சமும் காணப்படவில்லை.

நாடக ஒற்றுமைகளென்று முற்கூறப்பட்ட மூன்று சிறந்த அம்சங்களும், ஆங்கிலத்தில் முதலாக எழுந்த கோயில் நாடகங்களில் எங்கும் காணப்படவில்லை. அவற்றில் நாடக பாத்திரங்களாக வெகு சிலரே மேடையில் வந்திடுவர். வந்த வர்களே பலவேறு வேடங்களையும் தரித்து அடுத்தடுத்தும் வந்து ஆடுவர். தேவதைகளும், பேயினங்களும், அரங்கத் தில் வந்து ஆரவாரம் செய்திடும். இவை இயற்கையில் நிகழ்ந்திடாத செயற்கையான கற்பனைகளாகுமென்று அக் காலத்தவர்களும் உணர்ந்தே இருப்பர். காலம் கழிந்து செல்லச்செல்ல, மக்களுக்கு இத்தகைய நாடகங்களில் பற்று

அற்றுப் போவதாயிற்று புதியனவாகிய முறைகளையும், வேறுவிதமான அம்சங்களைக் கொண்ட நாடகங்களையும் கண்டு களித்திட, அவர்கள் மனம் நாடுவதாயிற்று.

(விநோத நாடகங்கள்)

அதன் பின்னர், நாடகங்களை அந்த அந்த நகரத்திலுள்ள நகர வியாபார சபையோர்கள் ஆதரித்து வருவாராயினர். நாடகத்திற்குத் திரள் திரளாக ஜனங்கள் வந்து கூடுவது அவர் தமது வியாபாரத்திற்கும் மிகவும் அனுகூலமாக இருந்தது. 'பைபிள்' கதைகள் வீழ்ந்த பின்னர், சன்மார்க்கத்தைப் போதிக்கும் நீதிக்கதைகளும், விகட விநோத நாடகங்களும் எழுவவாயின. இவற்றில், சாமானியமாக மனிதர்களிடையில் வைகலும் நிகழ்ந்திடும் சம்பவங்களே கூறப்பட்டன. நாடக பாத்திரங்களின் குணமும், கதையின் போக்கும், பலரும் கண்டு களித்து நற்பயனடையுமாறு அமைக்கப்பட்டுமிருந்தன. விகட நாடகங்களில், ஒழுங்கான கதைப் போக்கு கவனிக்கப்படாமலிருந்தாலும், விநோதச் செயல்களும், நகைச்சுவை ததும்பும் விஷயங்களும், அளவுகடந்து குவிந்து கிடந்தன.

## IV

(ஆங்கில நாடக ஆசிரியர்கள்)

தமிழ் நாட்டில் கவித்திலகராக கம்பர் விளங்கியிருந்தவாறு, ஆங்கில நாடக உலகம் கவி ஷேக்ஸ்பியரை நாடகத் திலகராகக் கொண்டிருந்தது. ஷேக்ஸ்பியர் சிறந்த நாடக

ஆசிரியராகத் தோன்றிய காலத்திற்கு முன்பு இங்கிலாந்தில் பல நாடக ஆசிரியர்கள் இருந்தனர். ஷேக்ஸ்பியர் தமது நாடக நூற்களை இயற்றத் தொடங்கிய காலத்தில், ஆங்கில நாடகம் சாமானியமான நிலையிலேயே இருந்தது. உவமை முகத்தாலும், உதாரணங்களாலும், விஷயங்களை விரித்துக் கூறும் நாடகங்கள் பல உதிப்பவாயின. அவை முன்பிருந்த நாடகங்களைப்போல் 'பைபிள்' கதைகளைக் கூருமல், பிற பழங்கதைகளைக் கூறுவனவாக இருந்தன. மாற்றுமுகத் தால், இங்கிலாந்தை ஆண்டுவந்த, எலிசபெத் மகாராணியை அவையாவும் புகழ்ந்தன.

சோக நாடகங்கள் தெளிவான உன்னத நிலையை அடைந்திராது, அத்தகைய நாடகங்களுக்கு அமைந்திட வேண்டிய சில உறுப்புக்களையே பெற்றிருந்தன. கொடுமை யும், பயங்கரமுமான செயல்களும், ரத்தச் சிதைவும், அதிக மாகக் கூறப்பட்டு வந்தன. இனிய முடிவையுடைய நாட கங்கள் முற்றும் விநோதச் செய்திகளைக் கூறுவனவாகவே இருந்தன. சரித்திர நாடகங்களோ, சம்பந்தம் நன்கு விளங் காத செய்திகளைக் கொண்டனவாகவும், ஒன்றற்கொன்று பொருத்தமில்லாத காட்சிகளைக் கொண்டனவாகவும் இருந்தன.

ஷேக்ஸ்பியரின் காலத்திற்கு முன்பு, ஆங்கில நாடகங் கள் எழுதியோரில் முக்கியமாக இருந்தவர்கள், ஜான் லில்லி, ஜார்ஜ் பீல், ராபர்ட்டு கிரீன், கிரஸ்டபர் மார்லோ, முதலியவர் களாவர். இவர்கள் நாடகக்கலை முன்னேற்றத்தில், ஒவ் வொரு விதத்தில் ஈடுபட்டவர்களாக இருந்தனர். ஆயின்,

தனித்தனியாக ஒருவராவது, நாடகத்தை மாசுமறுவற்ற உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரவில்லை.

(ஜான் லில்லி)

ஜான் லில்லி என்பவர் எட்டு நாடக நூற்களை எழுதினர். அவை யாவும், இன்ப முடிவைக்கொண்ட விநோத நாடகங்கள். அவற்றுள் ஏழு வசனரூபமாக எழுதியவை. தொடை விடை வாயிலாக எப்பொருளையும் நன்கு விளங்கிடுமாறு வசன நூற்களில் இயற்றிடலாம் என்பதை இவரே நன்கு எழுதிக் காட்டினர். ஜார்ஜ் பீல் தாம் எழுதிய நாடகங்களைச் செய்யுள் வடிவமாக அமைத்திட்டார். இவர் எழுதியவை ஆறு நாடகங்களாகும்.

(ராபர்ட்டு கிரீன்)

கிரீனென்பவர், விசித்திரமான சம்பவங்கள் நிறைந்துள்ள, இனிய முடிவுடைய நாடகங்கள் எழுதுவதில் சமர்த்தராக இருந்தார். அத்தகைய சம்பவங்களை நாடக நூற்களில் முதலாகப் புகுத்தியவரும் இவரே யாவர். இவர் எட்டு நாடகங்கள் எழுதியுள்ளார். நீடித்த பேச்சுகளைச் சுருக்கி, செய்கைகளை இவர் தமது நாடகங்களில் அதிகரித்தார். இவரது நூற்களில் பல நாடக பாத்திரர்களுண்டு. தாமதம் செய்திடாமல், எல்லாச் செய்திகளும் வேகமாகத் தொடர்ந்து இவரது நாடகங்களில் செல்லுவதாக இருந்தன. எனினும் இவரது நாடகங்களில் விஷய—ஒற்றுமை சரியாகக் கவனிக்கப்படவில்லையென்றே சொல்லவேண்டும்.

(கிரிஸ்டபர் மார்லோ)

மார்லோ என்பவரே, சோக நாடகங்களைச் சோக ரசம் இனிமையாக அமைந்திடுமாறு எழுதியவர். தமது மனத்தில் தோன்றிய எண்ணங்களை, வெகு உருக்கமாகவும் தெளிவாகவும் படித்திடுவோர்களுக்குத் தமக்குள்ளவாறே அவை மனதில் படுமாறு எழுதிடும் வன்மையுடையவர். தமது கருத்துக்களையே நாடக பாத்திரர்களின் வாயிலாகப் பெறப்படவைக்கும் சுபாவத்தினர்.

## V

(நாடகத்திற்கு ஆதரவும் எதிர்ப்பும்)

முதல் முதலாக, இங்கிலாந்தில் சரியானபடி நடத்தப் பட்ட நாடகம், கி. பி. 1110-ம் வருடம், டன்ஸ் டேபில் என்ற இடத்தில் நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது. முதலாக, 1576-ம் வருஷத்தில் தான் நாடக சாலையொன்று கட்டப் பட்டது. அதற்கு 'நாடகசாலை' யென்றே பெயரிட்டனர். அதன் பின்னர்ச் சில காலத்திற்குள் 'கர்ட்டன்' என்ற மற்றொரு சாலையும், அதனருகில் கட்டப்பட்டது. எலிசபத் ராணியாரும், ஆட்சிப் பெரியோர்களும், செல்வச் சீமான் களும், சீமாட்டிகளும், அரங்க மேடையை வெகு ஆர்வத் தோடு ஆதரித்து வந்தனர். ஆனால் 'பியூரிடன்' என்ற மதப் பகுப்பினரும், நகர பரிபாலன அதிகாரிகளும், லார்டு மேயரென்பாரும், நாடகங்களைப் போற்ருது தூற்றி வந்தனர். அவர்கள், சண்டை சச்சரவுகளின் பெருக்கும்,

சமூக நல்லொழுக்கச் சிதைவும், கற்பு நிலை பங்கமும், நோய்களின் பரவலும், உவமை முகத்தால் நாட்டிலுள்ள பெரியோர்களை ஏசும் சுபாவமும், ஞாயிற்றுக் கிழமைகளில் கோயில்களுக்குச் செல்லும் வழக்கத்தின் கழிவும், இவை போன்ற பலவும் நாடகத்திற்குச் செல்லுதலால் உண்டாகின்றன என்பதைக்காட்டிக் கண்டித்தனர்.

## (நாடக தினம்.)

நாடகம் நடந்திடும் தினங்களில் பல மக்களும் கொட்டகையில் குழுமியிருப்பார். நாடகங்கள் மாலை மூன்று மணிக்குத் தொடங்கி, இரண்டு மூன்று மணி நேரங்கள் நடந்திடும். மேலே கூரையில்லாத வெட்ட வெளியான இடத்திலேயே நாடகம் நடக்கும். ஆனால் அரங்கமேடையின் மேற்புறத்தில் மட்டும் மூடியிருக்கும். நாடகத்தின் பெயர் வெளியில் எழுதி ஒட்டப்பட்டிருக்கும். உயரமான கொடி யொன்றை நாடகசாலைக்கு அருகில் கட்டிவைத்திடுவர். அதனால் நாடகம் அவ்விடத்தில் அன்று நடந்திடுமென்பதைப் பலரும் அறிந்து செல்லுவர். கனத்த வாத்திய ஒலியால் நாடகம் தொடங்கியதைத் தெரிவிப்பர்.

நாடகம், ஆரம்பமான பின்னர் முதலாக ஒருவன் மேடையில் தோன்றி, பாயிரமாக நாடகத்தின் சுருக்கத்தைக் கூறிச் செல்லுவான். நாடக பாத்திரர்கள் சாமானியமான உடைகளையே அணிந்திருப்பர். சித்திரம் நிறைந்த திரைகள் அக்காலத்தில் இல்லையாம். சோக நாடகமாக இருக்குமாயின், கருமையான காட்சித் திரைகள் தொங்க

விடப்பட்டிருக்கும். வெவ்வேறு காட்சிகளும், அங்கங்களும் மாறி மாறி வருகிறதென்பதைக் காட்ட, மேடையிலுள்ள நாற்காலி மேஜை போன்ற சாமான்களை வெளிப்படுத்தியும், வேறு சாமான்களைக் கொண்டு மேடையில் சேகரித்தும் காட்டி வந்தனர். இடையிடையே ஒருவன் தோன்றி, நாடக நூலில் இல்லாத வேடிக்கை விநோதங்களைச் செய்து, நாடகம் பார்த்திட வந்துள்ளோரைக் களித்திடச்செய்து செல்லுவான்.

ஷேக்ஸ்பியர், இத்தகைய விநோதங்கள் இடையிடையிலிருப்பதை விரும்பாததோடன்றி, இதனைக் கண்டித்தும் தமது நூலில் ஓரோரிடத்தில் எழுதியுள்ளனர். (ஹேம்லெட் அங்கம் 3, காட்சி 2). அவரது நாடகங்களில், அங்கங்களின் இடையில் பயனற்ற விநோதங்களுக்குப் பதிலாக, ஆடலும், பாடலும் அமைக்கப்பட்டுள்ளன. சில நாடகங்களின் இறுதியில், பணிவுடன் அரசியைப்போற்றி வாழ்த்தும் பாகங்களும் புகுத்தப்பட்டன. அக்காலத்தில், நாடகங்களில் வந்திடும் பெண்பாலரின் வேடங்களை, ஆடவச் சிறுவர்களே போட்டுக்கொள்வது வழக்கமாக இருந்து வந்தது.

## (நாடகச் சபைகள்)

**அ**தன் பின்னர், ஆடல் பாடலைத் தமது தொழிலாகக் கொண்டு, பலர் கூடிய நாடக சபைகள் ஏற்படுத்தப்பட்டன. சபைகள் தோறும் பல நடிகர்களும், பெண் வேடம் தரித்திடச் சில சிறுவர்களும் இருந்தனர். ஷேக்ஸ்பியரின் காலத்திற்குப் பிறகே, ஆங்கில நாடகங்களில் பெண் வேடம் தரித்திடப் பெண்பாலர்களே வருவாராயினர்.

இந்த நாடக சபையோர்கள், இங்கிலாந்து தேசம் முழு வதும் சுற்றிவந்து, அங்கங்கே தமது நாடகங்களை நடித்துக் காட்டிப் பொருள் தேடிவந்தனர். அரசாங்க உத்தியோகம் வகித்திருந்த பலருக்கு இந்நாடக சபைகள் பிடித்திடவில்லை. அசம்பாவிதமான நாடகங்களை அவர்கள் கண்டித்தனர். அது பற்றியே, 1572-ம் ஆண்டிற்குப் பிறகு, அரசாங்கத்து அதிகார உத்தரவு பெற்றவர்களே நாடகம் நடித்திடும் உரிமையைப் பெற்றுர்கள். ஆனல் நல்ல பதவியிலுள்ள பெரிய மனிதர்களின் செல்வாக்கைப் பெற்றிருந்த சில சபைகள் உத்தரவின்றியும் நடித்துவந்தன. அத்தகைய சபைகள் நாளடைவில் அவற்றை ஆதரித்த பெரியோர் களின் பெயராலேயே அழைக்கப்பட்டு வருவனவாயிற்று.

இத்தகைய நாடக சபைகளையன்றிப் பல சிறுவர் ஒன்று கூடி, ஆடலிலும் பாடலிலும் பயிற்சிபெற்றுப் பல சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு, ஈடன், வெஸ்டுமினிஸ்டர், செண்டு பால்ஸ் என்ற பள்ளிகளில் ஆடி வந்தனர். ராஜ சபைகளில் நடித்துக்காட்டி, அரசியின் நன்மதிப்பைப்பெற்ற பல சபையினர்களுமிருந்தனர். இப்பள்ளிச் சங்கங்களும், சபைக்கூட்டங்களும் பெருத்த பணச்செலவில் ஆடி வருவன வாகியிருந்தன.

## (நாடக ஆசிரியர்களின் நடிப்பு)

அக்காலத்தில் நடந்தேறிய நாடகங்கள் பலவற்றில், நாடக ஆசிரியர்களே நடிகர்களாகவும் இருந்தனர். இங்ங னம் நடிப்பதால் அவர்களுக்கு, நாடகம் காணவந்தோர்கள் நாடகத்தில் விரும்பும் செம்பாகங்கள் எவை என்பதும்

விரும்பாத விஷயங்கள் எவை என்பதும் அறிய முடிந்தது. அதனால் தமது பிற நாடகங்களில், மக்களின் மனதிற்குப் பிடித்திடும் முறைப்படியினதாக விஷயங்களை அமைத்து எழுதுவதற்கும் முயன்றுவர வழியேற்பட்டது. உசிதமான பாகங்களாகத் தம் மனதிற்குத் தோன்றிய இடங்களெல்லாம் மேடையில் விரும்பப் படாது போனதும், பயனற்றதெனத் தாம் கருதி மேற்போக்காக எழுதிப்போன பகுதிகளெல்லாம், மேடையில் பலராலும் களிப்புடன் கொண்டாடப் பட்டுவந்ததும் அவர்கள் கண்டறிந்தனர்.

(நாடக நூற்களின் விற்பனை)

**நா**டகங்களை எழுதிய ஆசிரியர்கள், தமது நூற்களை நாடக சாலைகளுக்காவது, இடையிலுள்ள தரவுகாரனுக்காவது விற்றுவந்தனர். கி. பி. 1600 வருடத்திற்கு முன்பு, ஆங்கில நாடகமொன்றிற்குக் கொடுத்த அதிகமான விலை எட்டுப் பவுன்களே யென்று தெரியவருகின்றது. அவ்வாண்டிற்குப் பின்னர், நாடகமொன்றிற்கு 20 பவுன்கள் கொடுக்கப்பட்டன. நாடக சாலைக்குச் சொந்தமாக இருந்தவர்கள், சிறந்த நாடகங்களை எழுதும் ஆசிரியர்களது எல்லா நூற்களையும் தாங்களே விலை கொடுத்து வாங்கிக் கொண்டும் வந்தனர்.

## VI

(ஷேக்ஸ்பியரின் நாடகங்கள்)

**ஷே**க்ஸ்பியர் தனது நாடகங்களில் முதல் முதலாக எழுதிய சிலவற்றைச் 'சௌத் தேம்ப்டன் எர்லு' க்குச்

சமர்ப்பித்து எழுதினர். சொற்ப காலத்தில் ஷேக்ஸ்பியரது புகழ் நாடெங்கும் பரவுவதாயிற்று. அவர் பல நாடகங்களை எழுதி 1597-ம் வருடத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தினர். 1599-ம் வருடத்தில் கட்டப்பட்ட பிரசித்தி பெற்ற 'குளோப்' நாடக சாலையில் ஷேக்ஸ்பியரது பல நாடகங்களும் யாவரும் கண்டு களித்திடுமாறு நடிக்கப்பட்டன. ஷேக்ஸ்பியரது நாடகங்களும் ஓரோரிடத்தில் குறைபாடுடையன வென்று நூலாராய்ச்சிக்காரர்கள் கூறியபோதிலும், அவரது நாடகங்கள் உயர்ந்தவையாகவே பல்லாலும் கொண்டாடப்படுகின்றன. அந்தந்த வகுப்பு நாடக நூற்களுக்குப் பொருந்துமாறு அமைந்திருக்க வேண்டிய குணகுணங்கள் ஒரு நிகராக ஷேக்ஸ்பியரது நாடக நூற்களில் காணப்படுகின்றன.

### (அவற்றின் உயர்வு)

**பொ**துவாக நாடக நூற்களை அலங்கரிப்பதும், ஷேக்ஸ்பியரது நூற்களில் காணப்படுவதுமாகிய, சில அம்சங்களைக் குறித்திடுவோம். அவரது இனிய முடிவு நாடகங்களில், எதிர்பாராத சம்பவங்களும், விசித்திரமான செயல்களும், பல காணப்படுகின்றன. காணமற்போனவர்கள் அதிசயமான சந்தர்ப்பங்களில் மீண்டும் கூடுவதும்; முரணிய கொள்கையினர் பேதம் நீக்கி ஒரு மனப்பட்டுச் சென்றன மறந்து சந்தோஷமாகச் சேர்ந்திடுவதும்; காணமற்போன நாடக பாத்திரர்கள் எதிர்பாராத சமயத்தில் எதிர்ப்பட்டு நிற்றலும்; இவைபோன்ற பலவும் அளவு கடந்தனவாகக் கிடக்கின்றன.

ஷேக்ஸ்பியர், முதலாக எழுதிய சில விநோத நாடகங்களில், ஒருவரைப் பிறரொருவராகப் பாவித்துக்கொள்ளுதலும், பொய்யுருக்கொண்டு மெய்போல் நடித்திடுதலும், ஒன்றை வேறொன்றாக நினைத்துக் காரியமியற்றிடும் தவறுகள் பல விருத்தலுமாகிய இத்தகைய விநோதங்கள் சாமானியமாக இருந்தன. இவ்வகை யினவாகிய நாடகங்களைக் காண்போருக்கு, அவை வியப்பையும், விடாநகைப்பையும் அதிகரிப்பித்தன. மனதைக் கவர்ந்திடும் சம்பவங்கள் நிறைந்திருந்த இந்த நாடகங்களைக் காணவேண்டுமென்ற பேராவா பொது ஜனங்களுக்கு ஏற்பட்டது. ஒன்றிலும் ஒன்று சிறந்து இருப்பதைக் கண்ட நகர மக்கள் யாவரும், ஷேக்ஸ்பியரது நாடகமியற்றும் திறனுக்கு மெச்சி, அவரது புலமைக்குப் புகழ்ந்து, அவரை நாடக உலகிற்கே ஒப்பற்ற அணிகலனென்று சிறப்பித்துக் கூறினர். சொற்பக் காலத்தில், ஷேக்ஸ்பியரும் மக்களது நன்மதிப்பையும், நாடக ஆசிரியர்களின் நன்மொழியையும், கற்பனை உலகில் கீர்த்தியையும், பெற்று விளங்குவாராயினர்.

## (நாடக ஆசிரியர்களுக்கு இன்றியமையாதன)

**நா**டகம் எழுத முன்வரும் ஒருவருக்குச் சாதாரணமாக உலகத்தில் நிகழ்ந்திடும் விஷயங்கள் எல்லாவற்றிலும் அனுபோகம் இருந்திடல் அதிக அவசியமானது. அதோடன்றி, வாழ்க்கை வழிகளின் அறிவும், எழுதும் திறனும், சொற்களின் பழக்கமும், கற்பனா சாதுரியங்களும், எளிய நடையும், இவைபோன்ற பலவும் இருந்திடல் வேண்டும். இனிய கதைகளும், விநோதமான விஷயங்களும், தீர யுத்தங்

களும், அழகான பாடல்களும், மதுரமான சொற்கள் நிறைந்த சம்பாஷணைகளும், சந்தோஷமான செய்திகளும், மனதைக் கவர்ந்திடும் சம்பவங்களும், விகடத் துணுக்குகளும், நாடகங்களில் நிறைந்திருந்திடுமாறு, நாடக ஆசிரியர்கள் செய்திடுவார்களாயின் அது நாடகம் கண்டு செல்லுவோருக்கும் படிப்போருக்கும், இனிமையைப் பயந்திடும்.

தீய வழிகளைக் கடிந்துரைத்துத் தரும வழிகளைக் கைப்பற்றுமாறு, யாவருக்கும் போதிப்பதே நூற்களின் சிறந்த நோக்கமாக இருக்கவேண்டியதவசியமாதலின், நாடக நூலிலும் அது அமைந்தே இருத்தல் வேண்டும். ஆசிரியரது மனத்திலுள்ள கருத்துக்களே அவர்களது நூற்களிலும் இருந்திடும். அதுபற்றியே 'நூலாலறிக ஒருவனை' யெனப்படுவதும். முக்கியமாக ஆசிரியர்களது கருத்துக்கள் தீநெறியை அகற்றவேண்டிய நோக்கமுடையதாகவே இருத்தல் அவசியமாகும். சமகாலத்துப் பழக்க வழக்கங்களையும், சரித்திர பாகங்களையும், நாட்டினது நலப்பாடுகளையும், நாடக நூற்களில் அங்கங்கே வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறிப் போவதால், நாடக ஆசிரியர்கள் தமது நூற்களில் பிற்காலத்தவர்கள் முற்காலத்தின் விஷயங்கள் பலவற்றையும் அறிய வைக்கின்றனர். ஷேக்ஸ்பியரது நாடகங்களில் இவையாவும் ஏராளமாகப் பொதிந்து கிடப்பது பற்றியே, அவரது நூற்கள் வெகு பெருமையோடும், எல்லோராலும் எக்காலத்தும் பாராட்டப்படுகின்றன.

(ஷேக்ஸ்பியரின் இறுதி நாடகங்கள்.)

தனது அந்திகாலத்தில் ஷேக்ஸ்பியர் எழுதிய சிறந்த

நாடகங்கள் மிகவும் போற்றுதற்குரியவை. உலக ஞான அறிவின் பெருக்காலும், விசாலமான தமது நோக்கத்தின் முதிர்ந்த வளர்ச்சியாலும், அவர் அனுதினமும் நிகழ்ந்திடுமாறு, பல பொருள்களையும் விளக்கிக் காட்டி உள்ளார். இன்ப துன்பங்கள் இயற்கையிலுள்ள படியாகச் சித்திரித்துக் கூறியிருக்கின்றார். மேன்மையும் தாழ்மையும், தருமமும் அதருமமும், உலகில் நிகழ்ந்திடுமாறு மொழிந்திருக்கின்றார். மற்றுமிவை போன்ற பலவும், அவரது நூற்களில் காணப் படுகின்றன. தெய்வீகத் தன்மை பொருந்திய மக்களும், தேவதைகளும், அடுத்தடுத்தும் தோன்றுமாறு செய்ததாலும், மனிதரது கொடுங் குணங்களைத் தண்டிக்கத் தெய்வங்கள் முன் வந்து நன்னெறியை நிலைநாட்டுமாறு செய்ததாலும், ஷேக்ஸ்பியரது இறுதிக் காலத்து நாடகங்கள், அவரது காலத்திலேயே பெரிதும் பாராட்டப்பட்டு வந்தன.

## (அவரது சோக நாடகங்கள்)

**ஷேக்ஸ்பியரது**, சோக நாடகங்கள் ஒவ்வொன்றும், பார்ப்பவர் மனதையும், படிப்பவர் கருத்தையும், உருக்குவதாக உள்ளன. உயர்ந்த நிலைமையிலுள்ள தலைவன் ஒருவனும், தலைவி ஒருத்தியும், மனவேதனையால் படும் பாடுகள் யாவும் உள்ளபடியாக அவரது நாடகங்கள் விளக்கிக் காட்டுகின்றன. எனினும் துக்ககரமான சம்பவங்கள், ஒரே காலத்தில் எதிர் பாராதவாறு நிகழ்ந்திடுமாறு அவர் எழுதுவதில்லை. முதல் தொடங்கி ஒன்றன்பின் ஒன்றாகச் செய்திகள் பலவும் சேர்ந்து வந்து, முடிவாகக் கொலையிலும், அடியிலும், துயரத்திலும் முடிவு பெறுகின்றன. நாடகம்

காண்போர் எவரும், மனிதனே தனது உயர்வுக்கும் அழி விற்கும் காரணமாக இருக்கிறுனென்பதை, நன்கு அறிந்து கொள்ளுமாறு, இவரது சோக நாடகங்கள் நன்கு காட் டுகின்றன.

ஷேக்ஸ்பியர், தனது நாடகங்களின், கதைத் தொடர்ச் சியில், மூல புஸ்தகங்களிலிருந்து தான் எடுத்துக்கொண்ட செய்திகளைக் கூட்டியும் குறைத்தும் எழுதியுள்ளனர். அவரது நாடகங்களில், மூன்ருவது அங்கம் வரையிலும், வெகு அழகாக விஷயங்கள் மேன்மேலும் கொண்டு செல்லப்படும். பின் இரண்டு அங்கங்களிலும் செய்திகளின் உணர்ச்சி வேகம் குறைபாடுற்றுப் படிப்படியாகக் கீழ்ப்பட்டு வந்திடும்.

(பிற்கால நாடகங்கள்)

**ஷேக்ஸ்பியரது** காலத்திற்குப் பிறகு, சில காலம், நாடக அபிவிருத்தி தடைபட்டு நின்றது. இங்கிலாந்தில் எழுந்து, மக்களை வருத்தி வந்த ‘பிளேக்கும்,’ உள்நாட்டுக் கலகங்களும், அதனது வழியில் குறுக்கிட்டு நின்றன. எனினும், அவரது காலத்திற்குப் பின்பு, பென் ஜான்ஸன் போன்ற பல நாடக ஆசிரியர்கள் தோன்றி, ஆங்கில நாடக நூற்களை அதிகரிப்பித்து, நாடகக் கலையை வளர்த்து வந் தனர். ஆனல், ஷேக்ஸ்பியரது காலத்திலேயே நாடகக்கலை பக்குவ மடைந்திருந்ததால், அதன் பின்னர் அக்கலை அதிக மாக சீர்திருத்தப்படவில்லை யென்றே கூறலாம்.

(தமிழ் நாடக அபிவிருத்தி)

**மூ** வகைப் பாகுபாடுகளை முற்காலத்திலிருந்தே

கொண்டுள்ள செந்தமிழ் மொழியில், சிறந்த நாடக நூற்கள் இன்னும் அதிகமாக எழவில்லை. கற்றறிந்த புலவர்களும், எழுதும் வன்மையுடையோரும், நாடக நூற்களைத் தமிழில் பலவாகப் பெருக்கவேண்டும். தமிழரது வழக்கைப் பின் பற்றித் தமிழிலுள்ள நாடக விதிகளை அனுசரித்துத் தமிழ் நாடக நூற்கள் எழுதுவதோடன்றித் தமிழறிந்த பாவலர், ஆங்கிலம், வடமொழியாகிய பிறபாஷைகளிலுள்ள நாடக நூற்களின் இலக்கணங்களையும் கற்றறிந்து, அவற்றுள் தமிழ் மொழிக்கு ஏற்றனவாக உள்ளனவற்றைக் கொண்டு, நூற் களை இயற்றுதல் வேண்டும். தமிழ்த்தாயின் தண்ணரு ளொளியால், இனிமையும் சிறப்பும் ஒருங்கே வாய்ந்த, தமிழ் நாடகங்கள் பல கோடியாக உதித்திட வேண்டுமென யாவரும் விரும்புவர்.

அவ்வக்காலத்திற்கு வேண்டிய சமூக சீர்திருத்தங்களை விளக்கிக் காட்டுவதற்கும்; காலப்போக்கின் மாறுபாடு களில், மக்களால் புறக்கணிக்கப்பட்டு நிற்கும், நீதி நூற் களின் சிறந்த கருத்துக்களைத் தற்காலத்திய பொது நோக்கின் போக்கிற்குப் பொருந்துமாறு அமைத்துக் கதை வாயிலாகக்காட்டுவதற்கும்; என்றும் மேன்மையுட்படுத்தக் கூடிய தெய்வ பக்தியின் உயர்வை மனதில் படியுமாறு பதியவைத்தற்கும்; நாடகங்களைப் போன்ற சிறந்த கருவி வேறு எதுவும் இல்லை என்றே கூறலாம். மேலான இவ் வம்சங்கள் நிறைந்த நாடக நூற்கள் பலப் பலவாகத் தமிழ் மொழியில் கற்றோரால் எழுதப்படவேண்டும்.

# 6. விதிவழியாடிய மதிவதனன்.

## I

### (காலமும் கடலோரமும்)

குளிர்ந்த நேரம். மாலைக் காலம். கதிரவன் மேற்குக் கடலில் மூழ்கினன். அந்திப்பொழுது வந்துற்றது. இருளில் உலகம் மூடுண்டது. மஞ்சளாவிய வானத்தே, சினங்கொண்ட கோளரியென்ன, இடி விட்டு விட்டு இடிக்கின்றது. மின்னல்கள் அவ்வப்போது ஒளியை வீசிப் பிரகாசிக்கின்றன. அலைகள் கரையை நோக்கிக் கடிந்து தாக்குகின்றன. விம்மியெழும் கடலும், 'ஜோ' வெனப் பெருமுழக்கமிட்டுத் தன்னிடம் வந்தோருக்குச் சோதியின் நினைப்பை இடையறாது ஊட்டுகின்றது. மின்சார வண்டிகள், காற்றினுங் கடிதே வேகமாக அங்குமிங்கும் ஓடுகின்றன. அந்தரத்தமைந்த சுரமீனை நிகர்த்த, ஒளிவிளக்குகள், இருளைப்போக்க எங்கும் பிரகாசிக்கின்றன.

கதிரவனால் கலங்கிய மண்ணுலகை மகிழ்விக்க, இடியோடு மழையும் பொழிகின்றது. காற்றின் இனிய கானமொருபுறம். குளிர்ந்த மழையின் ஒலி ஒருபுறம். இடியோடு கடலொலி ஒருபுறம். கடற்கரைக்கு வந்த ஆடவரும், பெண்டிரும், தத்தமது இல்லம் நோக்கி விரைந்து செல்லும் நடையொலி ஒருபுறம். வானத்தின் கொடுமைக்கு அஞ்சி ஒளிபவரின் பேச்சொலி ஒருபுறம். காற்றால் கலங்கிய மரஞ்செடிகள் அசைந்தாடும் ஒலி ஒருபுறம். எப்புறமும் பேரொலி மயமாக இருக்கின்றது. இரவும் சமீபித்

தது. மழையும் ஒருவாறு நின்றது. மேகமும் வெளுத்தது. உலகின் நிரையிருளை மேல்நின்று நீக்கப் பாலெனப் பனி மதி, தனது தண்ணொளியை வீசி விண்ணகத்தே எழுந்தது. எங்கும் இருள் நீங்க, ஒலி குறைய, ஒளி மிகுவதாயிற்று.

இத்தறுவாயில், உற்ற நண்பரிருவர், சமீபத்தொரு வருங் காணுத் தனியிடமொன்றிலமர்ந்து. ஏதோ சல்லாபித் துக்கொண்டிருந்தனர். ஒருவன் மதிவதனன். மற்றவன் ஞானம். இருவரும் படித்துயர்ந்து பட்டம் பல பெற்றவர் கள். ஞானம் கற்றதோடன்றிக் கற்றவழி நிற்பவன். செல்வந்தராகிய உயர்ந்தாரொருவனின் ஏகபுத்திரன். மதிவதனன் விதிவசப்பட்டவனுகி மனம் வாடினுன். தன் மதியின் பலத்தால் விதியின் வேகத்தைத் தடுத்து மனமகிழ்ச் சியை யடைந்திடும் வகையறியாது கலங்கினுன். அவன் உயர்ந்ததொரு குலத்தில் பிறந்தவன். குபேர சம்பத்துள்ள சீமானெருவரின் இரண்டாவது புத்திரன். அவனது தந்தை சமீபத்தில் இறந்துவிட்டார். அதுபற்றியே அவன் துன் புற்றுத் தவித்து நின்றுன். தந்தை இறந்த செய்தியை அவனது தோழன் ஞானம் அறியான். உற்ற நண்பர் செய் யக் கிடக்கும் உரிய கடமைக்கோர் உதாரணமாகிய ஞானம், தனது நண்பனைத் தேற்றுவான் வேண்டிச் சற்றே ஞானேப தேசம் செய்யத் தொடங்கினுன்.

## II

(பாசத்தால் வருத்தம்)

**ஞானம்**:—“அன்பா! அடுத்தது காட்டும் பளிங்கு போல, உனது நெஞ்சத்திலுள்ள துயரை உனது முக

மானது காட்டுகின்றது. இதுவரையில் இத்தகைய முகவாட்டத்தை உன்னிடம் நான் கண்டறியேன். இப்பொழுது அது நினதிடத்தில் இருந்திடக் காரணம் யாது? மனக் கலக்கம் ஏன் கொண்டுள்ளாய்?"

மதிவதனன்:—"பாங்கா! எனது வருத்தத்தை என்னவென்று கூறுவேன்? மனமென்னுங் கடலைச் சஞ்சலங்களாகிய அலைகள் தாக்கி மோதுதலால், அமைதியான சாந்த நிலையை அடைய வகையறியாது, தாவிப் படரக் கொம்பில்லாத தனிக்கொடி போல், பாவி என்மனம் பதைத்துப் பரிதவிக்கின்றது. குரங்காட்டமாட்டி வைக்கும் மனதை, என் வசமாக்கிக்கொள்ள, பேதை என்னால் முடியவில்லை. உற்று நோக்குழி, இவ்வுலகமே எனக்குத் துன்ப மயமாகத் தோற்றுகின்றது! அமயத்திற்கேற்ற அருந் துணைவனும், உண்மை நண்பனும், மெய்ஞ்ஞானியுமாகிய உன்னிடத்து இவற்றைக் கூறி, ஆறுதல் பெற்றுத் தேறுதலடையக் கருதியே, வாடிய மனத்தினனாய், என்னில்லம் விட்டு உன்னிடம் நாடி ஓடி வந்துள்ளேன். நின்னையன்றிப் பின்னையெனக்குக் கைகொடுத்துக் கரையேற்றுவார் இங்கு யாருளர்? ஊழ்வினைப் பயத்தால் சிறியேன் இப்பாரினிற் பிறந்து தவிக்கின்றேன். பாசப் பிணியின் பற்றுதலால், சென்றன ஒன்றும் இனி வாராதென்பதுணர்ந்தும், அடியேன் இதயம் அலைந்து தள்ளாடுகின்றது. உலக இயல்பு இதுதானோ?"

ஞானம்:—"தோழா! வெகு நன்று. பொறுத்திடு. துன்பமாவது என்ன? உன் கருத்தில் உலகமே துன்ப

மயமாவது எங்ஙனம்? சற்றே எனக்கு விளங்குமாறு நவிலுக. படித்துப் பரந்த அறிவைப் பெற்றுள்ள நீ, முடிவாக அறிந்துகொண்டது இது தானா?"

(துன்பத்தின் இலக்கணை)

**ம**திவதனன் :—"நேசா! அழகு. நீ மொழிவது விந்தையாக உள்ளது. கற்றவழி நிற்கும் ஞானவானாகிய உனக்கு, நான் சொல்லும் விஷயமும் உண்டா? ஆயினும், என் சிற்றறிவுக்கு எட்டிய மட்டில், துன்பத்தின் தன்மையைக் கூறுகின்றேன். கேட்டிடு.

"இவ்வையகத்தில், வினைப்பயனாற் பிறந்திடும் மக்கள் யாவரும் இன்பமும் துன்பமும் பட்டு உழலுவது இயற்கை. இவ்வுண்மை, யாவரும் உணர்ந்ததே. ஆறறிவு பெற்ற மனிதருக்கேயன்றிப் பிறஜீவப் பிராணிகள் யாவற்றிற்கும் இன்பமும் துன்பமும் வருதலியல்பு. துன்பமானது கண்ணாற்காண முடியாதது. கையிலடங்காதது. உயிரற்றது. உதிரமற்றது. பேச்சும் மூச்சும் கொள்ளாதது. துன்புறும் மானிடரின் தன்மையாற்றான், துன்பத்தினிலக்கணம் போதரும். இரவும் பகலும் மாறி வருந்தன்மையன்ன, வாழ்க்கையில், இன்பமுந் துன்பமும் இணைபிரியாது தொடர்ந்து மாறி மாறியே வந்திடும். புகையுள்ள இடத்துத் தீயிருக்கும் உண்மை, கூறாமல் விளங்கிடுமாறு, இன்பமுள்ள விடத்துத் துன்பமும், துன்பமுள்ள இடத்து இன்பமுங் குடிகொண்டு வாழ்ந்திடுமெனத் துணிவாகக் கூறலாம்.

"சர்க்கரையில் இனிப்பும், வேம்புள் கசப்பும், பூவுள் நறுமணமும், தீயுட் சூடும், நீருள் குளிர்ச்சியும், புலனுக்குப்

புலப்படாது கரந்து உறைதலை நிகர்க்க, இன்பமும் துன்பமும் மானிட ரகத்தே மறைந்து வசிக்கின்றன. எவரும், இவ்வுலகில் துன்பத்தை வலுவில் அழைத்திடார்! ஆயின் துன்பமோ, தன்னை விரும்பாதாரிடத்தும் தானே சென்று அடையும். துன்புற்ருேர், வாயால் தாம் கொண்ட துன்பத்தைக் கூருது போகினும், அவர்கள் துன்புற்ருரென்பது, அவர் தமது நடைபுடை பாவனைகளால் தாமாகத் தோன்றும். துன்புற்ருேர் உருக்குலைந்து நிற்பர். வெளித் தோற்றத்தில் மாறுபட்டுத் தோன்றுவர்.

" துன்பப்பட்டு வருந்துவோர்களுக்கு, எப்பொருளிலும் பிரியமேற்படாது. எப்பொழுதும் அவர்கள் கலங்கிய மனமுடையவர்களாய் இருப்பர். அவர்களது குணம் பேதமுற்றிருக்கும். மனம் எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி ஏக்கமடையும். ஊக்கங்குன்றியவர்களாகி அவர்கள், பித்தங்கொண்ட பதுமை களெனத் திகைத்து நிற்பர். இப்பொல்லாக்குணமுடைய துன்பம் படுத்தும் பாடு கொஞ்சமல்ல. இதுவே துன்ப இலக்கணம். இவற்றில் பல நான் என்னிடமே அறிந்து கொண்டேன்."

## (துன்பத்தின் வகை)

**ஞானம்**:—" மதிவதனு! நீ மொழிந்தன யாவும் உண்மைதான். துன்பத்தை நன்கே வருணித்தாய். சுயமாக அறிந்து, துன்ப இலக்கணம் கூறிய குருவுமானுய். பொதுவாக, துன்பம் எதனுல் உண்டாகு மென்று நீ கருதுகின்ருய்."

மதிவதனன் :—" ஞானப்பிழம்பே ! இகபர சாதகங்களின் இயல்புகளை உணர்ந்த உனக்குத் துன்பத்தின் வகைகளைக் கூற நான் அருகனல்லவாகிலும் கூறுகின்றேன். துன்பமுண்டாவதற்குக் காரணங்கள் பலவாகும். துன்பத்தின் அளவைக் காணுதல் இயலாது. உடலை வாட்டி வருத்துவதொன்றே துன்பமன்று. கலக்கடிக்கும் கடுஞ் சொல்லும், 'செவிடு குருடு வடிவு குறை' வாயமெய்க்குறைவும், வறுமையும், பிணியும், மனத்திற்கு ஒவ்வாத மாசுறு மாற்றங்களும், மனவமைதியை மாற்றிச் சஞ்சலிக்கச் செய்யும் கருமங்களும், துன்பம் பயத்தலால் துன்பமே யாகும்' 'நாவினுற் சுட்ட வடு' ஆறாது. மனப் பிணிக்கு மருந்தென்பதே இல்லை. உடலுறுபிணிகள் கொஞ்சமா ? அவற்றால் உளவாகும் இன்னல்கள் கணக்கிட்டு முடியுமா ?"

"இவையேன். பிறவித் துன்பமே பெருந் துன்பமாகவன்றோ இருக்கின்றது ! பிறவாத வரமன்றோ பெரும் பேரின்பத்தை அடைவிக்கக்கூடிய தென்பர் ! மக்களாய்ப் பிறந்த பின்னர், படுந்துன்பங்கள் கணக்கற்றன. 'இவர் போயவராய் அவர் போயிவராய் இதுவே தொடர்பாய்ப்' பிறப்பது துன்பம். 'உறவின் முறை கதறியழ ஊராரு மாசையற, உலகிலுளர் பலரரிசி வாய்மீதிலேசொரிய' இறந்து மண்ணுவதும் துன்பம். நற்குணராயன்றித் தீயோராயிருப்பதுந் துன்பம். வறுமையுற்று இரப்பதும் துன்பம். எனவே, பிறப்பது துன்பம். பிறந்தபின்னிறப்பதும் துன்பம். இருப்பதும் துன்பம். இரப்பதும் துன்பம். வேறு என்ன வேண்டும் ? வாழ்வே துன்பமயமாகும் !"

"அம்மம்ம! இம்மட்டோ! ஆசைகொண்டு மோசம் போகில் அதனாலடைவது அநேக துன்பமன்றோ? பற்றால் வருவது பெருகிய துன்பம். செல்வத்தால் அடையும் துன்பங்களோ கோடி கோடி. பொருளைத் தேடுதல் துன்பம். தேடிய பொருளைப் போற்றுதல் துன்பம். போற்றிக் காத்து வைத்த பொருளை இழப்பதும் துன்பம். கொடுப்பது துன்பம். கொடாமலிருப்பதும் துன்பம். 'ஈயாத லோபி' யென்று பிறர் தூற்றக் கேட்பதும் துன்பம். கொடுத்தும் கொஞ்சமெனப் பிறர் ஏசலும் துன்பம. அதிகம் பேசலும் துன்பம். பேசாது கபடனாயிருத்தலும் துன்பம்.

"தீமை பயக்கும் தீ நட்பால் துன்பம் விளைந்திடும். அண்டியவரை ஆதரியாது, நம்பிக்கைத் துரோகஞ் செய்யின், அதனிலுமதிக துன்பமேயில்லை. கணவனது சொற்றிறம்பிக் கூற்றுவனுக்கொப்பான, 'இல்லிற்கிசைந் தொழுகாப் பெண்'ணால், அப்புருடன் அடையும் துன்பம் ஆயிரமாகும். கடுங்குணங்கொண்ட கணவனால் கற்புடைய பெண்டிரடையும் துன்பமும் அன்னவாறே. புத்திரப்பேற்றால் துன்புறுவோர் பலர். புத்திரரின்மையால் துன்புறுவோர் சிலர். பொறாமையாலும், வஞ்சனையாலும், ஒருவருக்கொருவர் இன்னல் பல இழைத்துத் துன்பப்படுவோருமுளர். உற்றோர் பெற்றோர் பிரிவால் வருந்து வோருமுண்டு. இதற்குமேல் துன்பத்தின் வகையை உரைக்க என்னால் முடியாது. உலகமே துன்பம் உறையும் இடம். உலகினரோ துன்பத் தருத்திகள். இதுவே முடிவாக நான் கண்டறிந்தது."

# III

## (மாண்டார் மீளார்)

ஞானம் :—"ஆருயிர் அன்பா ! வாழ்வில் துன்பத்தை யன்றி மற்றொன்று மில்லையென நீ துணிவாகக் கொண்டுள்ளது, எனக்கு மிகவும் வியப்பாக இருக்கின்றது. இவ்வாறாக நீ துணிந்து கொண்டதற்கும், வாடி இருத்தற்கும் காரணம் யாவை ? சந்தோஷ சாகரத்திலே மூழ்கிக் கிடந்த உனக்கு, எல்லாம் துன்பமும் துயரமுமாகத் தோற்றுவானேன் ?

மதிவதனன் :—"ஞானம் ! எனது அருமைத் தந்தையைச் சில நாட்களுக்கு முன்பு இழந்து விட்டேன். அதனை நீ உணர்ந்திருப்பாயென்று எண்ணி இருந்தேன். அவர் இறந்த அத்தினத்திலிருந்து உலக வாழ்வே எனக்குத் துயர வாழ்வாக இருக்கின்றது. எனது சித்தங்கலங்கி விட்டது. பித்தனைப்போலுள்ள என் செயல்கள் எனக்கே வருத்தத்தை உண்டாக்குகின்றன. இனியென் வாழ்வும் ஒரு வாழ்வா ? உயிர்போல் என்னை வளர்த்து வந்த அப்பிதாவை இனி எக்காலத்தில் காணப்போகின்றேன் ?

"இக்கலியுகத்தில், பணம் பிணத்தையும் வாய் திறக்கச் செய்யுமென்பது உண்மையாகத் தானிருக்கிறது ! அதனால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை. உடன் பிறப்பும், ஒற்றுமையும், உலக வாழ்வும், எல்லாம் பணத்தாலன்றோ பாராட்டப்படுகின்றன ? செல்வம் விளைவிக்கும் கொடும் பாவங்கள்

ஒன்றிரண்டா? அண்டினோரை ஆதரிப்பது ஆண்மைக்கு அழகாக இருக்கவும், நம்பினோர்கள் நம்பிய என் தந்தையைக் கைவிட்டுத் துரோகஞ் செய்தனர். கெடுமதி தூண்ட அவருக்குப் பாதகம் நினைத்தனர். பொருளைக் கொண்டும் பொங்கும் புகழைக் கொண்டும் அவரை வதைத்து வாட்டினர். அதனைப் பொறாது என் தந்தையார் மனங்கலங்கினார். அகப்பிணியும் புறப்பிணியுமுற்று உடல் மெலிந்து வருந்தினார். மாய வாழ்க்கையை வெறுத்துக் குழந்தை வடிவேலனது புகழிலீடுபட்டுச் சின்னாளிருந்தார். பின்னர், கண்ணை மூடி, மண்ணை விட்டு, என் எண்ணைக் கலக்கிப் புண்ணாக்கி விண்ணுக்கு ஏகினார். அவரை நினைந்து நினைந்து ஏக்க முற்று என் மனம் உருகுகின்றது.”

ஞானம் :—“மதிவதனா! பிறந்தோரின் துன்பம் பெருந்துன்பமென்று நீயே மொழிந்தனை. பின்னர் இறந்த உத்தமர்களுக்கு நீ ஏன் அழவேண்டும்? ஆண்டு ஆண்டுகளாக அழுதாலும் மாண்டவர் மீண்டும் வந்திடுவாரா? ‘ஆறிலுஞ்சாவு நூறிலுஞ் சாவு’ யாருக்கு முண்டென்பதை மறந்துவிட்டனையா? உலகமே நிலைத்திராதது. உலகிலுள்ள பொருள்கள் பின்னர் நிலைத்து எங்ஙனமிருக்க முடியும்? தைரியங்கொள். மனிதருக்குப் பங்கயத்தோன் எழுத்துப் படியே நன்மையும் தீமையும் வந்திடும். ஆகலின், அழுவதாற் பயனில்லை. நோவதாற் பயனில்லை. பிறர் நம்மைத் தொழுவதாற் பயனில்லை. சுடவுரைத்துத் தூஷிப்பதாலும் குறையில்லை. ‘சலியாதிரு’ வென நினது நெஞ்சிற்குச் சாந்தோபதேசஞ் செய்திடு.

"கல்லையுங் கலங்கச் செய்யும் உனது இரக்க மொழிகளைக் கேட்க, என் மெய் விதலையுற்று இரங்குகின்றது. துக்கத்திற்காளாகிய உனது வாட்டத்திற்குக் காரணம் உணர்ந்தேன். உன் தந்தைக்கு மோசம் செய்த பாவியர்களைத் தெய்வம் ஒரு பொழுதும் விட்டிடாது. கொடியோரை அரசன் அன்றே கொல்லுவான். அத்துரோகிகளைத் தெய்வமோ நின்று கொல்லும். இதனால் நீ கலங்க வேண்டாம். உலகமே துன்பமயமென்று எண்ணும் நீ, இவ்வுலகத்தில் எதனைத்தான் இன்பமாகக் கருதுகின்றனை?"

மதிவதனன்:—"அருமைத் துணைவா! நிலையாத இவ்வுலக வாழ்வை நான் மெய் வாழ்வென நம்பிவிட்டேன். உயர்ந்த பதவியிலிருந்த என் தந்தை என்றும் இருப்பாரென்றும், அவரால் நாங்களடைந்திருந்த வாழ்வே சுகாநந்தமான மெய்ப்போக நித்திய வாழ்வென்றும் நினைத்து இறுமாந்து இருந்தேன். எனக்கு இப்பொழுது ஒன்றும் இன்பமாகத் தோன்றவில்லை.

"இப்பிறவியில் அடையலாகும் இன்பம் சிற்றின்பமேயாகும். பேரின்ப வாழ்வைப் பெறுதல் குதிரைக் கொம்பே. உலக இன்பமோ, காலவரையறைக்கு உட்பட்டது. நீடித்து நெடுங்காலமிராத நீர்க்குமிழியின் தன்மையை நிகர்த்தது. அது மானிடரைச் சன்மார்க்கத்தில் செல்லவிடாது. அவர்பால் தீய குணங்களையே பலவாகப் பிறப்பித்திடும். உலக இன்பமெல்லாம், அதிகாரம் படைத்திருத்தலும், செல்வச் சீமான்களாக இருத்தலுமாகவே கருதப்படு

கின்றன. ஆயின், இன்ப வாழ்வினமென்று கருதியிருக்கும் செல்வ மிகப் படைத்தோரும், உயர்ந்த பதவியிலுள்ளோரும், பெரும்பான்மை செருக்குற்று, ஆடம்பரப் பிரியர்களாகித் தம் வாழ்வே பெரும் வாழ்வென்று கருதிப் பிறரைக் கண்ணெடுத்தும் பாராது, ஒற்றுமை நீக்கி, ஈகை வெறுத்து, தற்புகழ்ச்சிகொண்டு, ஈட்டிய பொருளைத் தாமுமனுபவியாது, பிறருக்குங்கொடாது, தரும வழியிலும் செலவிடாது, தேனீயை நிகர்த்து, இலவு காத்த கிளி யெனத் தவித்து உழலுவதே இயற்கையாக உள்ளது. இதுவே நான் அறிந்துகொண்ட உலக இன்பம்."

"உன்னை அண்டி மானிடப் பிறவியின் தன்மையையும், அதனைக் கடந்து கடையேறும் சன்மார்க்கங்களையும் முற்றும் அறியவே இயண் வந்துள்ளேன். தந்தையின் பிரிவால் தவித்து அலைந்து வருந்தும் அடியேனை, அஞ்சலென அபயங்கொடுத்து, என் அறிவைப் பெருக்கி, இடரைத் தொலைத்து, அருள்ஞான இன்பத்தை நீ தான் எனக்குத் தந்து உதவவேண்டும்."

(துன்பம் இன்பத்தின் வழிகாட்டி)

**ஞானம்** :—"துன்பமயமாக உலகம் உள்ளதென நீ கருதுவது ஒருவாறு உண்மைதான். அது பற்றியே கற்றோர்கள் யாவரும் உலகில் பிறவாது இருக்கும் வாத்தையே வேண்டுகின்றனர். பிறவித் துன்ப மொழிந்த விடத்துப் பிற துன்பங்கள் தாமாக வாராது ஒழிந்திடுமென்பது அவர்களின் துணிபு போலும்! கசப்பை உண்ணுமிடத்தே,

இனிப்பின் இன்பம் தானாகத் தென்படும். கறுப்பைக் கண்ணுறினே வெண்மையின் தன்மை துலங்க விளங்கும். வெயிலிற்படினே நிழலினருமை புலப்படும். அவ்வாறே, துன்புறினே இன்பத்தினினிமை நன்கு போதரும்.

"துன்பமே பேரின்பத்திற்கு வழிகாட்டி. இன்புற்று வாழ்ந்திடுவோர் துன்புற்று வாழ நேரின், வாழ்க்கை வகையறியாது மயங்கிடுவர். ஆயின், துன்புற்ரோர் இன்ப முறுதலோ, பெறுதற்கரிய பெரும் பேறாகும். துன்புற்ற காலை, துன்புறுவோர் தமது குற்றங் குறைகளைத் துலாக் கோலிட்டு ஆராய்ந்து, குறைகளைத் திருத்தி, நல் வழிப்பட முயலுதல் சாதம்.

"துன்புற்ற காலையே, மக்கள், துன்ப மூட்டியதாகக் கொண்டு, அதனைத் துடைக்க வேண்டி எம் பெருமானை நினைக்கின்றனர். முதலும் முடிவுமில்லாத முழு முதற் பொருளை, அத்தறுவாயிலே, துன்பத்தைத் துடைத்து, இன்பத்தை யூட்டி, நல்வழிப் படுத்துமாறு வேண்டுகின்றனர். எனவே, துன்பமேபக்தியை உண்டாக்குகின்றது. கடவுளின் நினைவை இடையறுது மனத்திலுலவச் செய்து, உலக இன்பத்திலும் மேலாக உள்ள, கிடைத்தற்கரிய வீட்டின்பத்தை யடைவித் தற்கேதுவாய நற்றுணைவனாக உள்ளது. பரத்திலன்றி இகத்திலும் ஈசனது அருளொளி பெற்று, இன்பவாழ்வை அடைவிக்கவும் செய்கின்றது

"பொல்லாத கோபத்தால், அருமைத் தாயானவள், தன்னருங்குழவியைக் கடிந்துரைக்கினும், அன்னாள் அரு

ளையே நினைந்து எக்கழுற்று ஓலமிட்டு அக்குழவிஅழுதிடும். அங்ஙனமே துன்புற்றோர் அதனைக் களைந்திட்டு, இடுக்கணி லாழ்த்தாது இன்பத்தைத் தந்து காத்திடுமாறு, அத்துன் பத்தைத் தந்ததாகக் கொண்டிடும், கருணை வள்ளலையே குறையிரந்து வேண்டுவர். தாயின் அருளை நினைந்து அழத் துன்புறுத்தும் கோபமும், உலக மாதாவாகிய பரமனது கருணையை நினைந்து அழுதற்கு வாட்டும் துன்பமும் காரண மாகின்றன. சதமற்ற உலகை வெறுத்தற்கும், நிலையாத உலக இன்பத்தைக் கடிதற்கும், அதனால் பேரின்பப் பொருளை நினைத்தற்கும் துன்பமே எதுவாகின்றது. துன் பமே இன்பத்தின் வழி காட்டி யென்பதை இப்பொழு தாவது அறிந்துகொள்."

## (இன்புறுத்தும் துன்பம்)

" **து**ன்பப்பட்டோர் இன்பப்படுவது 'ஒன்றொன்றொரு வழி நில்லா' இவ்வுலக இயல்பு. / பதியிழந்து, பாலனை யிழந்து, படைத்த நிதியிழந்து, தனமெனை உள்ள யாவு மிழந்து, தொடர்ந்து வந்த துன்பங்கட்கையுறாது, பொறு மையோடு சகித்திருந்து, முடிவில் மேன்மையுற்ற சத்திய சந்தனாகிய மன்னன் அரிச்சந்திரனின் கதையைப் பள்ளிப் பிள்ளைகளும் நன்கு உணருவர். மற்றும், அமைச்சரின் அரிய மொழிகளுக்குச் செவி கொடாது, வேதனைக்கு ஆளாக்கும் பொய்ச் சூதைக் கண்ணுக்குத் தோன்றாக் கெடுமதி தூண்ட ஆடி, நாடு நகரமிழந்து காடு சென்று மக்களைப் பிரிந்து, மனைவியை யாருமற்ற கானிலே மையிரு ளிலே தனியே விட்டேகி, வாகுக நாமம் பூண்டு, மடைத்

தொழிலுற்று, முடிவில் துன்பம் நீங்கி இன்பமுற்ற வேந்தன் நளன் சரிதையை, நானிலத்தில் கனவிலும், நனவிலும் கற்றோரும் மற்றோரும் நன்கறிவர். பாண்டவர்கள் பட்ட பாடு இப்புவியில் வேறொருவர் பட்டதுண்டோ? முடிவி லவர்களடைந்த இன்பம் பிறரடைந்ததுண்டா? இராமபிரான் தொடர்ந்து வந்த துன்பங்கட்கிலக்காகி, முடிவில் பேரின்ப முற்றது, தொன்று தொட்டு எல்லோரு முணர்ந்ததே. துன்புற்று இன்பமடைந்தவர்களின் சரிதை இக்காலத்திலும் பலப்பலவாக வுள்ளன."

"பாசம் விலக்கி, ஈசநேசம் பூண்டொழுகித் தவவழி நிற்கும் தபோதனர்களும், முக்குறும் பறுத்துயர்ந்து, நாற் குண மதனுள் நற்குணத்தைக் கொண்டு, பொறிகளை யடக்கி, மனத்தை யொடுக்கி, உடலை வெறுத்து முற்றும் துறந்து, எப்பொருளினுங் குடிகொண்டுள்ள நற்பொருளாகிய மெய்ப் பொருளை, அல்லும் பகலும் அனுதினமு மிரந்து, பிறவி யாகிய பெருந் துன்பத்தினின்றும் கரையேற்றுமாறு வேண்டி நிற்பதை நீ படித்தும் கேட்டதுமில்லையா?"

"துன்புற்ற காலத்து, 'நெஞ்சமாகிய புனத்து, வஞ்ச மாகிய கட்டைகளை வேரற அகற்றிச் செப்பனிட்டு, அன் பாகிய பாத்திகளைக்கட்டி, மெய்யென்னு மெருவையிட்டு, பக்தியாகிய விதைகளை விதைத்து, நித்தலும் ஆர்வமாகிய தெள்ளிய நீரைப் பாய்ச்சி, வளர்ந்து வரும் பயிருக்கு இடுக் கண் செய்திடும், ஐம் பூதங்களுக்கு அஞ்சிச் சாந்த மென் னும் வேலியையிட்டு, ஞானமாகிய முளைதோன்றிக் கருணை யென்னும் இளங்களிரைக் காட்ட, மாசுறு காமக் குரோத

மாயகளைகளைக் களைந்து பக்குவப்படுத்தி,' பரம்பொருளாகிய அருங்காய் தோன்ற, அதனைப் பாங்குடனணுகிப் பரிவுடன் தழுவி, வாய் ஓயாது பாடிப் பரவசமுற்று, விண்மாரியென்ன கண்மாரி பெய்து, அடைக்கலம் புகுந்திடின், அதனிலும் சிறந்த பொருள் வேறுண்டோ? அதனிலும் சிறந்த இன்பமு முண்டோ? மலைபோலுள்ள வினைகளெல்லாம், பரம்பொருளின் பாதமலரைப் பற்றியோர்க்குப் பனிபோல வன்றோ நீங்கிக் கடிதேகிவிடும்!"

மதிவதனன் :—"உண்மை அறிந்தேன், மனமுமுவந்தேன். துன்பம் துறந்தேன். துயரமும் துடைத்தேன். அருந்தோழா! வந்தனம். என் மனமுகந்த வந்தனம். பற்று உற்றதால் பரிதவித்தேன். துன்பம் இன்பம் பயத்தலால், இன்பத்தினும் துன்பத்தையே மேன்மையாகக் கொள்ளவேண்டுமென நீ கூறிய நல்லுபதேசத்தை மனத்துட் கொண்டேன். சிற்பியென்ன யாவும் சிறப்புடன் கூறினை. வேதனாற் செய்யப்பட்ட பதுமைகளான மனிதரின் தன்மை தானென்ன? பொதுவாக நாம் பற்றி நடக்க வேண்டிய வழிகள் தானென்ன?"

(யாக்கை யினிழிவு)

**ஞானம்** :—"நமது உடல் ஊனாலுடுத்தப்பட்டது. ஒன்பது வாசலையுடையது. எலும்பைத் தூணாகக் கொண்டது. உரோமத்தால் வேயப்பட்டது. புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது. அசுத்தமானது. நாம்பாற் பொதிந்த இப்பொதி வினை வயத்தால் விளைந்தது. வினைக்கு விளைவா

யது. கண்ணிமை போன்றது. நித்தியமானது. யுக முடிவில் புணரியால் உலகமே அழியுந்தன்மையதென்று ஆகமங்கள் அறைகின்றன. பின்னர் உலகிலுள்ள உயிர்ப் பொருள்கள் நிலைத்து நின்றிடுவதெங்ஙனம்

"இச்சரீரம், தீப்பிணிகளுக்கு இருப்பிடமானது. இது பற்றின் பற்றிடம் கள்வர் ஐவர் கலக மிட்டலைக்கும் கானகம். சலமலப்பேழை இருவினைப்பெட்டகம். பித்தங் கோழை குடி புகுஞ்சிறார். சோற்றுத் துருத்தி. காற்றிற் பறக்கும் கானப்பட்டம். விதிவழித்தருமன் வெட்டுக் கட்டை. சதுர் முகப்பாணன் தைக்குஞ் சட்டை. காமக் கனலிற் கருகுஞ் சருகு. அரும்பு கோணினும் நறுமணம் வீசும். கரும்பு கோணினும் இனிய சர்க்கரையும் பாகுமாகும். இரும்பு கோணினும் மதக்கரியை யடக்க உதவும். ஆனால் இப்பொல்லாப் புழுமலி நோய்ப் புன் குரம்பையான இவ்வுடலின் நரம்பொன்று கோணிடில், அதனாலுண்டாகும் தீம்புகள் கூறவும் வேண்டுமா?"

"இப்பட்டோர வேர்வையும் அழுக்கும் மேவிய கழுத்தை நாம், பாரினிலினிய கமுகெனப் பகர்கின்றோம். வெப்பு முத்தையு மேவிய வாயை நாம், துப்பு முருக்கின் றாய்மலரென்கின்றோம். அன்னமுங் கறியுமசைவிட்டிறக்கும் முன்னிய பல்லை நாம் முத்தென மொழிகின்றோம். நீருஞ்சளியும் நின்று நின்று ஒழுகுங் கூரிய மூக்கை நாம் குமிழெனக் கூறுகின்றோம். தண்ணீர்ப் பூளை தவிராதொழுகுங் கண்ணைப் பார்த்து நாம், கழு நீரென்கிறோம்,

உள்ளுங் குறும்பி யொழுகும் காதை நாம், வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்துகின்றோம். கையு மெண்ணெயுங் கலவாதொழியில், வெய்யவதரும் பேனும் விளைந்திடும், தலையோட்டில் முளைத்திடும் சிக்கு மயிரை நாம், திரண் முகிலென்கின்றோம். இவ்வாறு பலவும் பேசி நம்மை நாமே துதித்துக் கொள்கின்றோம்.

" இந்நாறுடலை, எரியெனக் கென்னும், புழுவோ வெனக் கென்னும், மண்ணோ தனக்கென்னும், பருந்தும் நரியும், நாயும், தமக்கென்ன அலைந்திடும். இது மூச்சோடு கின்ற பதுமை; மீகாமனில்லாக்கப்பல்; இத்தகையதான உடலினிடத்தில் நாம் அதிகமான பற்றுக்கொண்டு இருப்பதால் யாது பயன் ?"

(மானிடரியல்பு)

**ம**திவதனன் :--"கற்றறிந்த மேலோர்கள் கூறியாங்கு, யாக்கையின் இழிவை நன்கு கூறினை. பரகதிக்கு வழி தேடுதற்கும், பற்றுக்களை அறுத்தற்கும், உலகில் உள்ளளவும் இன்ப வாழ்வை யடைதற்கும், நாம் பின் தொடர வேண்டிய வழிகள் யாவை? நீ கூறுவதின் பொருளை நன்கு அறிந்து கொண்டேன். மரணத்திற்கு ஏங்கித் துயருறும் என் மதிதானென்ன ? இறப்பது மெய். இருப்பது பொய்யாகுமென அறிந்தும் வாட்டமுறும் என் வினையே தீவினையாம்.

ஞானம் :—"நாடக மேடையிலாடும் பாத்திரங்களைப் போன்ற, விசாலமான இவ்வுலகமேடையிலாடும் மானிடர்களை உலகச் சேற்றினின்றும் கரையேற்றி, நல்ல வழிப்படுத்துவான் வேண்டியே கருணைத் தடங்கடலாகிய வள்ளல்' அவர்களுக்குப் பகுத்தறிவைக் கொடுத்துள்ளார். அதனால் தன்னை நினைக்கச்செய்து பேரின்பமுறச் செய்கின்றனர். ஆனால், வினை முன்னுந்த, மதி பின் செல்ல, இப்பிரபஞ்ச இச்சைகளைக் கொண்டு, சிற்றின்பப் பிரியர்களாகி வருந்துவோர் நாமறிய எவ்வளவு பேர்களிருக்கின்றனர்? நன்னெறி பற்றி முன்னேற்றமடைய முயன்றிடும் எண்ணங்கொண்டு ஒரு சிலரிருப்பின், அவர்களைக்கண்டு கை கொட்டி நகையாடுகின்றனர். தெய்வம் இல்லையென்றும் சாதித்துவிடுகின்றனர். ஆனால் முதலும் முடிவும் அறியாத மக்கள் இல்லையென்பதால் தெய்வம் இல்லாமற் போய்விடுமா?

"மக்களில் தம்மைத்தாமே புகழ்ந்து கொண்டு, பொது நன்மையைக் கனவிலும் கருதாது உள்ளவர் கொஞ்சமா? வாதும் சூதும் செய்து வருந்துவோர் கொஞ்சமா? இம்மையில் இனிதே வாழ்ந்து, மறுமையின்பத்தை யடைதற்கு வேண்டிய வழிகளைத்தேடாது பரிதவிப்போர் கொஞ்சமா? எழு கடல் மணலின் அளவினுமதிகமான பிறவிகளை யெடுத்து, ஏக்கமுறப் பாவங்களைச் செய்துகொண்டே இருப்பவர் கொஞ்சமா? இவை யெல்லாம் வினைப் பயனின் விளைவாகுமென்று கூறுவர். உண்மைதான். விதையின் படியே முளை வருமாறு, நல்வினை செய்தோர் நற்பயனுறுவர்; தீவினை செய்தோர் தீங்குகளடைவர். ஆயின் வினைப்

பயனோ, சிறுகாது. பெருகாது. முறைபிறழ்ந்து வாராது. நல்வினையோ, தீவினையோ செய்தவனைத் தவறுமல் வந்தடைந்திடும். அவரவர்களின் கருமத்தின் அளவு, அது பயனையும் அளித்திடும். இதுவே தத்துவ நூலாரின் கொள்கை. இப் பிரபஞ்ச இலக்கணம். விதியின் விவேகம். கருமக்கூற்று.

(அறவழி நிற்றல்.)

" நம்மை மேலான நிலையில் வைத்தற்கும், தாழ்மையுட்படுத்தி அழித்தற்கும், நமது மனமே காரணம். அதனை அடக்கி ஆளவேண்டும். அதன் வழிப் பதுமையாக நாமாடிவரின், அது நம்மைப் பாகதியடைய விடினும் விடும். அன்றி நம்மிடத்துப் பற்றுக்களை அதிகரிப்பித்துப் பாவங்களைச் செய்திடுமாறு தூண்டினும் தூண்டும். இதனுலன்றோ பெரியோர்கள் யாவரும் சிந்தையை யடக்கவேண்டுமென்கின்றனர். பெறுதற்கரிய மானிடப் பிறவியை நாம் பெற்றுள்ளோம். அதனுலடையக் கிடக்கும் பலாபலன்கள் பல கோடியாகும். அவற்றைப் புறக்கணித்து, அளவற்ற பாவங்களைச் செய்வதால், பிறவிகளெடுத்துப் பரிதவிக்க நேரும். உள்ளதைக் கொண்டு உகந்து, தாமும் அனுபவித்துப் பிறருக்குங் கொடுத்துப் பலருக்கும் உபகாரியாக இருப்பவர்களுக்கன்றோ பிறப்பும் இறப்பும் இருந்திடா?

"செல்வர்களும், முடிமன்னர்களும், ஏழைகளும், பிறரெவரும், முடிவில் ஒரு பிடி சாம்பலாக வெந்து மண்ணுகவே போகின்றனர். யோசிக்கும் வேளையில், இவ்வெரிதனிலிடும் வாழ்வு, பசிதீர உண்பதும் உறங்குவதுமாகவே

முடிகின்றது. தந்தை, தாய், தமர், தாரம், மகவாகிய பலரில் உடன் வருவோர் எவருளர்? உடன் வருபவை அவரவர் செய்த புண்ணிய பாவமாகிய வினைகளிரண்டே யாம். பிறக்கும் பொழுது மக்கள் தம்முடன் கொண்டுவந்த பொருள்கள் ஒன்றுமில்லை. கற்ற கல்வியும் போய், பைவருங் கேளும் பதியும் கதறப் பழகி நிற்கும் ஐவரும் கைவிட்டு மெய்விட இறந்து செல்லும் பொழுது கொண்டு போவதும் ஒன்றுமில்லை.”

“பிறப்பும் இறப்பும் நமது சக்தியால் ஏற்படுவதில்லை. எல்லாம் சர்வேசனின் செயலால் ஆவதாகும். வீடிருக்கத் தாயிருக்க, வேண்டு மக்கள் மனையிருக்க, வைத்த பொருள் யாவும் அசையாதிருக்க, இந்தக் கூடுமிருக்க, உயிரானது யாருமறியாது போகும் கோலம் தான் என்னே! மனைவி மைந்தரோடும், சுற்றத்தாரோடும் செல்வவான்களாக மாட மாளிகைகளில் வாழ்ந்திடும் வாழ்வு நித்திய வாழ்வா? விதியை விலக்கவும், வினையை அறுக்கவும், நற்கதியைக் கொடுக்கவும் அவ்வுண்மைப் பொருளினலன்றிப் பிறரெவராலும் முடியாது.

“தரும எண்ணங்களைக் கொண்டு, தருமச் செயல்களை நாடி, அறவழி நிற்றலே இவ்வுலகில் நாம் செய்யக் கிடக்கும் தலையாய கடனாகும். அறவழி நிற்றலாவது, தெய்வ பக்தியை இச்சித்து, ‘வித்தை விரும்பி நூல் பல கற்று, சினம் மடக்கிக் கெடுப்பதொழித்து, கொள்ளை விரும்பாது காப்பதே விரதமாகக் கொண்டு, வஞ்சகம் பேசாது ஞயம்பட வுரைத்து, ஈவது விலக்காது ஐயமிட்டுண்டு, தீவினையகற்றி நன்மையைக் கடைப் பிடித்து, குணமது கைவிடாது கீழோர

ராயினும் தாழவுரைத்து, நன்றி மறவாது ஊருடன் கூடி வாழ்தலாகும்.' இவ்வாறு இருப்போர், 'முடியாப் பிறவிக் கடலிற் புகார். முழுதுங் கெடுக்குமிடியால்' துன் புறுரென் பதில் தடையென்ன? அவருக்கு, இருவினை மும்மலமும், இறவொடு பிறவியுமற்றிடு மென்பதில் சந்தேகமேது?"

மதிவதனன் :—"உத்தம குணத்தோய்! சீரிய உனது நன்மொழிகளால் என்னிதயம் குளிர்ச்சியுற்றது. இவ்வுலக மேடையில், வினைக் கயிற்றிலாடும் மானிடப் பதுமைகளின், நாடக வாழ்க்கையின் தன்மையை நன்கு உணர்ந்தேன். கடவுளே எனக்குக் கதி மோக்ஷமளித்திடும் காருண்யரென்பதை என் மனதில் பதித்துக்கொண்டேன். வெகுநேரமாக இங்கிருந்து சல்லாபித்தோம். இனி உன்னை மீண்டும் காணுமட்டில் சிந்தித்து உணருதற்கு வேண்டிய விஷயங்களை உரைத்துள்ளனை. நேரமாயிற்று. எழுந்து செல்லுவோம்."

# 7. அன்பிற்குரிய பேரைம் பெருங்குரவர்.

## I

### (நன்றியறிதல்)

'**ந**ன்றிமறவேல்' என்ருர், நற்றமிழுணர்ந்த சொற்றிறன் மிகுந்த கற்றறி புலவர் ஔவை மூதாட்டியார். இவ்வமுத வாக்கியம், நம்மாட்டுப் பிறர் செய்த உதவியை மறத்தலாகாதென்ற, மேலான நீதியைப் புகட்டுகின்றது. இதனுல், செய்ந்நன்றி யறிதல்வேண்டு மென்னும் சீரிய கொள்கை நன்கு புலப்படும். தேவரும், 'நன்றி மறப்பது நன்றன்று' என்ருர். அமயத்திற் கேற்றவாறு தலையாகச் செய்திட்ட நன்றியை என்றும் மறந்திடலாகாது. துய ருற்ற போழ்து அடைந்த நன்றியின் அளவு சாலச் சிறியதே யாயினும், அதனுலடைந்த பலன்களை யெண்ணியும், அது செய்யப்பட்ட காலத்தைக் கருத்துட் கொண்டும், அதனைப் பெறுதற்கரிய பெரும்பேருகவே கருதுதல் வேண்டும். சான்ரேர்கள், செய்ந்நன்றியின் அளவு, திணையனைத்தாக இருப்பினும், அதனைப் பனையனைத்தாகக் கொண்டு பாராட்டி நிற்பர்.

இப்பிறவியில், ஒருவன் செய்திடும் பாதகச் செயல்கள் பலவற்றுள்ளும், பிறர் தனக்குச் செய்த நன்றியை மறத்த லாகிய கொடுஞ் செயலே, பெரும் பாவமானதாகும். அதுவே, மாபாதகத் தொழில்களில் தலை நிற்கும் தகைமை யது. கல்விக்கு அரசெனப்படும் பெரியார் கம்பரும், 'உதவி கொன்ருர்க்கு, ஒன்றேனும், ஒழிக்கலாமுபாய

முண்டோ' என வியந்து வினவி, உபாயமில்லை யென்ற விடையைப் பெற வைப்பாராயினர். (கிட்கி 62). தெய்வப் புலவர் திருவள்ளுவரோ 'செய்ந்நன்றி கொன்ற மகற்கு— உய்வில்லை' எனத் திடமாகக் கூறிப்போயினர்.

பிறப்பிற்குப் பின்னும் இறப்பிற்கு முன்னும், மண்ணிடை யுறையும் மானிட ரெவரும், பலரிடத்தும் பல விதங்களிலும் பலவகைப்பட்ட நன்மைகளையும் அடைகின்றனர். அவர்தமுள், முன்னறி தெய்வங்களாகிய தாய் தந்தையரும், எழுத்தறிவித்த இறைவனாகிய குருவும், முழுமுதற் பொருளாகிய அகத்து இறைவன் தெய்வமும், அவனி காத்திடும் அதிபனாகிய, புறத்து இறைவன் அரசனும், செய்த நன்றி யென்றும் மறந்திடக் கூடாததாகும்.

## II

### (தாயும் சேயும்)

பெற்றோர்கள் செய்திடும் நன்றியையே, ஒருவன் முதற் கண் உணர இயலுகின்றது. அவர்களே தமது மகவை அன்போடு ஆதரித்துக் காக்கின்றனர். தாயானவள், அங்கமெல்லாம் நொந்து, அவதியுற்று, ஐயிரண்டு திங்களாய் அன்போடும் சுமந்து, அல்லல் அனேகம் பட்டுப் பெற்றெடுத்து, பெயரிட்டழைத்து, இரு கரங்களிலும் வாரியெடுத்து மார்போடணைத்துப் பொன்னே போல் வளர்த்து வருகின்றாள். குழவியின் குறுநடையும் இளநகையும் கண்டு அகமகிழ்கின்றாள். தொட்டிலிலும் கட்டிலிலுமிட்டுத்

தாலாட்டிச் சீராட்டிக் கண்வளரச் செய்கின்றாள். தண்டைச் சிலம்பணிந்து, தளர் நடையாய் நடந்து வரும் தன்மதலையை நோக்கி நோக்கிப் பேருவகை கொள்கின்றாள். பால் மணமாறாத தன்னருங் குழவி வாய்க்குதலை மொழி கேட்டு மெய்ம் மறந்து நிற்கின்றாள். இரவென்றும் பகலென்றும் பாராது அருந் துயிலொழித்தும், இனிய உணவொழித்தும், மகவுடனிருந்து மகிழ்ச்சியோடும் கட்டிக் காக்கின்றாள். ஈயும், எறும்பும் அணுகாவாறு பார்த்து நிற்கின்றாள். பிணியொன்றும் வாராவாறு கவனித்து வருகின்றாள். தாயே அன்பின் வடிவினளென்று, கற்றறிந்த ஆன்றோர் தம்மனுபவத்தில் கண்டறிந்த உண்மையாக மொழிகின்றனர். 'தாயினிற் சிறந்த தெய்வமில்லை' யென்று உறுதியாகவும் கூறுகின்றனர்.

சேயால், தாயே தந்தைக்கு முன்னதாக அறியப்படுகின்றது. ஆகலின் அன்னையும் பிதாவுமாகிய இரு முன்னறி தெய்வங்களுள், தாயே முதலறி தெய்வமாக விளங்குகின்றாள். தாய்மாரை உணர்ந்த பின்னரே, மகவு தந்தையாகிய தெய்வத்தை உணருகின்றது. அதுவும் அத்தாயானவளே தெரிவிக்கின்றாள். கடவுளின் குணங்களைக் குழவிக்கு முன்னதாக அறிவிப்பவளும் தாயே யாவள். பாவ புண்ணியங்களின் போக்கையும், அவற்றின் விளைவையும் அவளே எடுத்துக் காட்டுகின்றாள். உலக வாழ்க்கையின் வழிகளை எளிதில் உணரவும், பிறர் சொல்லுவனவற்றை இலகுவே அறிந்து கொள்ளவும், தனது கருத்தைப் பிறருக்குப் பிழையறத் தெரிவித்தற்கும், வேண்டிய போதிய அறிவை முதற் கண்

மகவு அத்தாயாலேயே அடைகின்றது. பொதுவாக, குழவியின் எல்லா உணர்ச்சிக்கும் தாயே ஆதி காரணமாவாளென்னலாம்.

## (தந்தையும் தநயரும்)

**தா**யைப் போலவே தந்தையும், தான்படுங் கஷ்டநஷ்டங்களைச் சற்றும் பொருட் படுத்தாது, தனது மக்கள் எப்படியும் முன்னுக்கு வந்து சுக வாழ்வையடைய வேண்டுமென்பதையே பெரிதாகக் கருதுகின்றனன். புத்திரனாகில், தன் மகன் கற்றறிந்த பண்டிதனாக வேண்டுமென்றும், புகழுக் குரியோனாக விளங்கவேண்டு மென்றும், அவாமிகக் கொள்கின்றான். அவனைப் பள்ளிக் கனுப்பி, உரிய காலங்களில் கல்வியும் கற்பிக்கின்றான். உணவும் உடையும் வேண்டிய பொருளும் கொடுத்து நன்னடக்கையும் கற்பிக்கின்றான். பெண்ணாகிலோ, கல்வியறிவும் இனிய இசையறிவும் பெறச் செய்து, குலமும் குணமும் பார்த்து, ஏற்ற கணவனைத் தேடி மணஞ் செய்து தந்து, பொருளும் ஆடையாபரணங்களும் கொடுத்துப் போற்றுகின்றான்.

## (பெற்றோரைப் போற்றல்)

**பெ**ற்றோர்கள் தாம் எந்நிலையிலிருப்பரேனும், தமது சிசுக்களை அன்போடும் வளர்த்தே வருவர். சாந்துணையும் பாடுபல பட்டுத் தமது குழந்தைகளுக்கு உதவி புரிந்து வரும் தாய் தந்தையரை மறந்திடுவோர் மதியீனரென்றே கருதப் படுவர். பெற்றோரைப் பேணுதலாகிய தவத்தினும் சிறந்த தவம் வேறு இல்லை யென்பர். பெற்றோரைப் பரிதவிக்க

விட்டு நிற்கும் எவனும் மேன்மையுறுன். முற்றும் துறந்த முனிவர்களும், பற்றைக்களைந்த பெரியோர்களும், சற்றும் தயங்காது தாயுள்ளளவும் அவளுக்குத் தாழ்ந்து நின்று, நேயமுடன் அவள் விருப்பப்படி நடக்கின்றனர். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' யென்பதும், 'தாய் சொல் துறந்தால் வாசகமில்லை' யென்பதும், எல்லா முணர்ந்த பெரியார்களின் முடிவான வாக்கியங்களாகும்.

தாய் தந்தையர்களின் மொழிகளைத் தட்டாது நடக்கு மவனே உத்தமப் புதல்வன். அவரது வயோதிகப் பருவத்தில் அவர்களைக் காத்து, முகங் கோணுது அவர்களுக்குப் பணிவிடைகள் செய்து வருபவனே குணவான். அவர்களது மனம் கோணுதவாறு நடந்து கொள்ளுமவனே புனிதன். அவனே செய்ந்நன்றி மறவாதவன். அவனே பரிசுத்தன். அவனே சற்புத்திரன். பெற்ருேர் பெறத் தக்க பெருநிதி. பெற்ருேரைக் கடைத்தேறச் செய்ய வந்த புண்ணியன். 'இத்தகைய மகனைப் பெறுவதற்கு, இவன் தந்தை என்ன புண்ணியஞ் செய்தானே!' என்று உலகத்தவர் தன் தந்தையைப் புகழும் வண்ணம், அவரை ஆதரித்துக் காத்திடும் அப்புத்திரனே, ஒப்பில்லாத நற்புத்திரனுவான். அவ்வாறன்றி, 'இக்கிழங்கள் என்று ஒழிந்திடுமோ!' என்று வாய் கூசாது, மனங் கூசாது உரைத்து, மாதா பிதாக்களைப் புறக்கணித்து நிற்போர் ஈடேறுவதெக்காலத்தில்? 'மாதா வயிறெரிய வாழாயொரு நாளு' மென்பது முதுமொழி. பெற்ருேரை யாதரியாதவன், இம்மையிலன்றி மறுமையிலும் பாவியென்று தூற்றப்படுவான். பழிபாவங்களுக்கு ஆளாவான். துன்புற்று வருந்துவான்.

'ஈன்று வளர்த்த தாய் தந்தைக் கெவரே கைம்மாறியற்றிடுவர் ?
ஆன்ற மதலை நூறுவய தளவு மடிமைத் திறம் பூண்டு
மூறுன் புவனத் துள்ள பொருள் முற்று மளித்து முறை முறையே
யேன்று வழிபாடாற்றிடினு மொருநாள் வளர்த்தற் கியையாதே'

என்னும் புலவரது செய்யுளடிகளின் செவ்வி காண்க.

## III

### (எழுத்தறிவித்த இறைவன்)

பெற்றோர்க்குப் பின்னர் ஒருவன், எண்ணையும் எழுத்தையும் அறிவித்த இறைவனாகிய குருவையே உணரு கின்றான். குரு ஒருவனுக்குச் செய்திடும் உதவிகள் பல வாகும். அவை யென்றும் மறத்தற் குரியவையன்று. 'குரு' வென்ற சொல்லுக்கு, அஞ்ஞானமாகிய இருளினைப் போக்குபவ னென்பது பொருளென்பர். மனமாகிய குடி லின் கண்ணமைந்த, அஞ்ஞானமாகிய அந்தகாரம் நீங்கு மாயின், மெய்ஞ்ஞானமான ஒளி பிறந்திடும். அவ்வொளி யால் மாயை யாகிய பாசபந்தங்களினின்றும் விடுபட்டுப் பேரின்ப மடைந்திடலாம்.

### (சற்குரு இலக்கணம்)

சற்குரு வெனப்படுவோர், வேதாந்த சித்தாந்த நூற் களையும், அறமுறைக்கும் ஆன்றோரது நூற்களையும், கசடறக் கற்றுணர்ந்தவராயிருப்பர். இலக்கண இலக்கியக் கடலைக் கடந்து நின்று, நல்லொழுக்கமும் விசேட அறிவும் நிரம்பப் பெற்றவராயு மிருப்பர். அறம் பொருளின்ப வீடென்னும் நற்பயன்கள் நான்கின் இலக்கணம் யாவும் நன்கு உணர்ந்

திருப்பர். அவரிடத்தில் கடவுள் பக்தியும், கருணை நோக்கமும், பொறுமைக் குணமும், உலகியலுணர்ச்சியும், வாய்மையும், தூய்மையும், தற்புகழ்ச்சியின்மையும், பிறரைக் குறை கூறுத் தன்மையும், மற்றுமிவை போன்ற மேலான குணங்கள் பலவும் திரண்டு கூடி ஒன்ருக அமைந்து கிடக்கும்.

## (குருவுபதேசம்)

நல்லறிவைப் போதிக்கும் கற்றுயர்ந்த பெரியோரே குருவெனப்படுவர். கையும் பிரம்புமாக இருந்து, மாணக்கர்களை வீணேமிரட்டி, உள்ள புத்தியையும் அடித்து ஓட்டும் உபாத்தியாயர்களெல்லாம் நல்லாசிரியர்களாகார். சுயநலம் பாராட்டி உபாத்திமைத் தொழில் புரியும் இவர்கள், தம்மிடம் வரும் மாணவர்கள் கடைத்தேறவேண்டுமென்பதைக் கனவிலும் கருதார்கள். மெய்க் குருவோ, பல கலைகளையும் தம்மை யண்டியுள்ள மாணவர் அறிந்திடும் முறையில் போதித்திடுவார். கடவுளது ஒப்பற்ற குணப்பெருமைகளைக் கூறி, அவரை வழிபடச் செய்வார். உலகில் அனுசரிக்க வேண்டிய நீதி மார்க்கத்தை உபதேசிப்பார். மேன்மையடையும் வழியினையும் காட்டுவார். மாணவரிடத்து மிக்க அன்புடையாராக இருந்து, களங்கமற்ற தமது நடையுடை பாவனைகளால், தம்மை நாடி வந்துள்ள அவர்களையும் சீர்படுத்துவார்.

## (குருபக்தி)

முற்காலத்தில் 'குருகுலவாச' மென்ற வழக்கமொன்று இருந்தது. அது, சற்குருவுள்ள இடத்திலே எக்

காலும் தங்கியிருந்து, மாணவர்கள் கலைகளை யாராய்ந்து குருவோடும் வசித்து வருதலாகும். பெருமை வாய்ந்த குருவை எக்காலத்தும் போற்றிக் கௌரவித்தல் வேண்டும். அவரிடத்துப் பரிசுத்தமான பக்தி பூண்டொழுக வேண்டும். குருவாய்மொழி திருவாய்மொழி யென்றும், குருப்பிரசாதமே வரப்பிரசாதமென்றுங் கொண்டு, தமது குருவைத் தாழ்விலும் வாழ்விலும் மறவாது, அவரது சொற்படி நடந்து, மேன்மை யடைந்திடுமவனே நன்மாணவன். அவனே சன்மார்க்கத்தை யடைந்து உய்பவன். அவனே மாணவனென்ற பெயருக்கு முரியவன். 'எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்' என்றதால், அவை கற்பித்த ஆசான், கண்ணைக் கொடுத்த கருணையாளனாகின்றான். இங்குக் கண்ணென்றது, புறத்துள்ள ஊனக்கண் மட்டுமன்று. மேலாம் பதவியை யடைந்திட வழிகாட்டும் அகக் கண்ணுமாகும். புறக் கண்ணின் பரந்த ஒளியையும், அகக்கண்ணின் மூதானந்தத்தையும் உண்டாக்கிய, ஆசானை ஆர்வத்தோடென்றும் போற்றியே நிற்றல் வேண்டும்.

## IV

### (அகத்து இறைவன்)

அகரம் எழுத்துக்களுக்கு முதலாக அமைந்துள்ளவாறு, உலகிற்கு ஆதியாக, எப்பொருளகத்தும் மறைந்து நின்றிடும் அகத்து இறைவனாகிய பரம் பொருளே பொருந்தியுள்ள தென்றார், புகழ் மிகக் கொண்ட தமிழ் மொழிப் புலவர் பொய்யா மொழியார். வேதாகமங்களும் இவ்வாறே

அறைகின்றன. விவேகிகள் துணிபும் இக்கருத்தே. நூலறிவாளரும் நுண்ணுணர்வுடையோரும் கண்டறிந்த உண்மையும் இதுவேயாம். உலகிற்கு முதற் காரணமாக உள்ளவர் கடவுள். அவரே இம்மண்ணகத்துள்ள பல கோடி ஜீவன்களையும் படைத்தவர். எறும்பு முதலாக யானையீருக உள்ள உயிர்கள் யாவையும் காப்பவர் அவரே. முடிவில் எல்லா உயிர்களையும் அழிப்பவரும் அவராகவே இருக்கின்றார். ஆக்கல், அளித்தல், அழித்தலென்ற ஒப்புயர்வற்ற குணங்கள் மூன்றும், அவரொருவரிடமே ஒருங்குடன் சேர்ந்து உறைகின்றன.

## (எல்லாமான எம்பெருமான்)

**ப**ரம பிதாவாகிய கடவுளே, இம்மகிதலத்தில் உறைவோர்களுக்கு, அவரவர்கள் செய்திட்ட நல்வினை தீவினைகளின் அளவிற்கு ஏற்றபடியாக, சுகத்தையும் துக்கத்தையும் தந்தருளுகின்றார். ஆகாயம் முதல் பிருதிவி ஈருக உள்ள ஐம்பூதங்களையும், அவற்ருலாய அளவிடக் கூடாத பொருள் யாவற்றையும், குறைவற எங்கணும் வியாபிக்கும் வண்ணஞ் செய்பவரும், ஆசாபாச பந்தங்களைக் கடந்திட்ட பேரறிவாளராகிய அக்கடவுளே யாவர். உலகில் உயிரினங்கள், பற்றி வாழ்ந்திடுதற்கென ஏற்ற வழிகளை அமைத்துக் காட்டியிருப்பதும் அக்கருணைத் தடங்கடலே. அவர் தமது அளவிலா அருளொளியால், ஆன்மாக்கள் பெறுதற்கரிய சிறப்புற்ற நன்னெறி மார்க்கத்தைப் பற்றி, முத்தி வழியிலே நின்றிட, வேதங்களையும் ஆகமங்களையும் சிருஷ்டித்திருக்கின்றார்.

கடவுள் தமது மாயை யாகிய பிரகிருதியாலே, இப் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தார். பிரகிருதியிடம் சிருஷ்டி யாதிய காரியங்களனைத்தையும் நிகழுமாறு செய்வித்தார். எப்பொருளுடனுங் கலந்து நின்று, அவ்வப் பொருளாகத் தோன்றினும், தான் எப்பொருளுமாகாது, ஒன்றோடுங் கலவாது தனித்தே நிற்கின்றார். அவர் மனவாக்குக் கெட்டாத வான்பொருளர். ஆதியந்த நடுவே துமிலாத சோதியர். அவர் நித்தியர். பரிபூரணர். சச்சிதானந்தர். நிர்மலர். நிட்களங்கர். உயிருக்குயிராகியும், நினைவுக்கு நினைவாகியு மிருப்பவர். எல்லாமான அவரது செயலை முற்றி லுங்கூற யாரால் முடியும்?

## (தெய்வ வழிபாடு)

கடவுள் தாம் படைத்துள்ள சிருஷ்டிகளின் மூல மாய்த் தம்மைக் காட்டிநின்று ஆன்மாக்களை இன்ப வீடடையச் செய்கின்றார். புண்ணிய பாவங்களின் பயனால், இம்மண்ணிடைப் பிறந்தாரனைவரும் தேவாதி தேவனாகிய சர்வேசனைப் போற்றி நிற்கவேண்டுமென்பதே குரு முதலி யோர் முதலாகக் கற்பிக்கும் கல்வியாகும். கற்பிக்க வேண் டிய கல்வியும் அதுவேயாகும். முயற்சியானது மெய்வருந் தக் கூலி தந்த போதிலும், திருவினையாக்கிய போதிலும், தெய்வ பலத்தாலன்றி எந்தக்காரியமும் கைகூடாது, 'அவ னன்றி ஓரணுவும் அசையா' தென்பது முதுமொழி வாக் கியமன்றோ? ஒருவனுக்குத் தெய்வ பலமென்பதில்லையா யின் அவன் நினைத்த காரியம் வேறுசகத் தான் முடியும்.

எல்லாம் தெய்வச் செயலென்பதும், 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கு' மென்பதும், இக் கருத்துப் பற்றியே. தெய்வச் செயலை அறிய யாரால் முடியும்? மனிதர்கள் படும் கஷ்ட சாத்தியங்களை அவரே சுலப சாத்தியங்களாக்க வல்லார். தாம் செய்யும் தீவினைகளைத் திருத்தியமைத்துக் கொள்ள மக்களுக்கு, அபாயத்தைக் கொடுத்துத் துன்புறச் செய்வதும் அவரே. அவ்வபாயத்தினின்றும் நீக்குவித்து நலப்பாடு பல அடையச் செய்வதும் அவரேயாகும்.

இவ்வாறான ஞானப் பரம்பொருளை என்றும் மறவாது, அவரது தாமரைத் தாள்களைத் தூமலர் தூவித் துதித்து வரும் பக்தர்கள், எக்காலத்தும் எச்சமயத்தும் எவ்வித துன்பமும் அனுபவிக்க வேண்டுவதில்லை. அவர்கள் என்றும் நிலைத்து நிற்கும் மோக்ஷவின்பங்களைச் சதா அனுபவிக்க இடமுண்டாகும். மனம் வாக்குக் காயத்தால் பக்தி பண்ணிக்கொண்டிருந்தாலன்றோ முக்தி பெறலாம்? அதுவன்றோ உற்றயாக்கையின் உறுபயனாகும்.

'கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்' என்றார், உலகிற்கு ஆதியும் அந்தமும் அச்சோதி வடிவினனாகிய பரம்பொருளென்ற பசுந்தமிழ்ப் புலவர். கடவுளது சொரூபத்தைக் காணாத கண்ணுமொரு கண்ணோ? எம்பெருமானின் திரு நாமத்தை நவிலாது சாக்குப் போக்குப் பேசிச் சண்டித் தனஞ் செய்யுமவர் நாவுமொரு நாவோ? அல்லும் பகலுமற்ற ஆனந்தப் பேரொளியைக் கும்பிட்டிறைஞ்சாத கையுமொரு கையோ? வேத

புராணங்களைக் கற்றுத் தேறியும் கடவுளிடத்து அடைக்கலம் புகுந்து, ஏகாந்த பக்தி கொள்ளாதவன் நீசனேயாவன். அத்தேவாதி தேவனை, வேத நாதனை, ஞான வடிவனை, மெய்சிலிர்த்து, உடல் குழைய, மொழி குழற, அனலிலிட்ட வெண்ணெயென மனம் நெக்குருகப் பாடியாடிப் பணியவேண்டும். கடவுள், தம்மை நம்பினோரைக் கைவிடாது காத்திடுவர். அவர்களுக்குச் சகல பாக்கியங்களையும் தந்து உதவுவர். தெய்வ பக்தியும், பற்றைக்களைந்திடும் வைராக்கியமும் கொண்டவர்களுக்கு முக்தி வாழ்வு தானுகச் சித்திக்கு மென்பர், சித்தாந்த முணர்ந்த பெரியோர்கள். தேவநாம உச்சாரணை யொன்றே சகலப் பேற்றினையும் தந்து நல்வழிப் படுத்துமென்பது அவர்கள் கண்டறிந்த உண்மை.

## V

### (புறத்து இறைவன்)

ஒப்பில்லாத பெருங் குணங்களை வாய்க்கப் பெற்ற, பரப்பிரம சொரூபியாகிய கடவுள், மக்களை மறைந்து நின்று பாதுகாக்கின்றனர். அக்கடவுளுக்கு அடுத்தபடியாகக் கருதுதற்குரிய மன்னனே மக்களை நேராக இருந்து காத்து வருகின்றனன். அதுபற்றியே அவனைப் பூவுலகத்திற்கு இறைவனென்றும், புறத்து இறைவனென்றும், புகழ்ந்து கூறுவர். தெய்வப் புலவர், உலகத்துள்ள உயிர்களனைத்தும் வானை நோக்கி வாழுதலைப்போன்று, குடிகளென்போரனைவரும் தம்மையாளும் மன்னனது செங்கோலை நோக்கி வாழுவரென்று தமது குறட்பாவொன்றிற் கூறியுள்ளனர்.

(செங்கோல் மன்னன்)

ஒருபாற் சாய்ந்து சிறிச்சினந்து மற்றொருபாற் றளராது, குடிகளிடத்து ஒருமனப்பட்டு ஒரு நிகராக நேர்வழி நிற்கும் செவ்விய ஆட்சிக் கோலாகலின், அரசனது கோலைச் செங்கோலென்பர். செங்கோல் மன்னனின் ஆட்சிக்குட்பட்ட குடிகள், "நம்மன்னன், குவலயங் குலையச்சமர் செய்யுங் கீர்த்தியோன்; வாகை யணிந்த புகழ் வீரன்; போர்த்திறத்திற் கைதேர்ந்த சூரன்; இறுமாப்பெய்தி வீணே சண்டையிடாது குதறுதலுற்ற குறும்பர்மேல், தருமயுத்தமே புரிந்திடும் தீரன்; கொடும் போரியற்றிக் கொலை பல புரியினும் அபயம் புகுந்தோரை ஆதரித்துக் காக்கும் அருளன்" என்று அவனை வாழ்த்துவர்.

"இம்மட்டோ! இவனே மீதலம் புகழும் வேந்தன்; விண்ணோர் ஏத்தும் விமலன்; உடைந்தவர்க்கு உதவுபவன்; ஈகையாளி; குணநிதி; கல்விக்களஞ்சியம்; நல்லொழுக்கமுடைய குரிசில்; நியமந்தவறு நிமலன்; செய்வன திருந்தச்செய்யும் பரிசுத்தன்; பகுத்தறிவுள்ள பாவலன்; நடுநிலையோடு உள்ள இவன் நாட்டில், தருமம் தழைத்திடும்; மாதம் மும்மாரி சொரியும்; வளஞ்சுரக்கும்; விளைவுஞ் செழிக்கும்; குடிகளும் க்ஷேமமாக வாழ்ந்திடலாம்; அரசன் அனைவரையும் காத்திட, அவனது கோலே அவனைக் காத்திடும்; கோலுயரக் குடியுமன்றோ உயர்ந்திடும்!" என்று இவ்வாறாகத் தமது மன்னனைப் புகழ்ந்து கூறுவர். கோலெப்படியோ குடியும் அப்படியன்றோ இருக்கும்!

மன்னனென்பான் 'படைகுடி கூழமைச்சு நட்பா ஞறு' முடையனாதல் வேண்டுமென்னும் செந்தமிழ் இலக்கியங்கள். நட்பபுத்தியுள்ள அமைச்சரும், வலிமிக்க சேனையும், நீதிவழியிற்கொண்ட பொருளும், செங்கோல் மன்னரது அவையை அலங்கரித்திடும். அரசனுக்குரிய முதற்றொழில் காவலாம். மன்னுயிரைக் காக்குமக்காவலன், தன்னாலும், தனது பரிசனத்தாலும், இன்னலிழைக்கும் பகைவராலும், கொடிய கள்வராலும், தீய பிற உயிர்களாலும், உளவாகும் பயங்களை அடியோடும் ஒழித்திட்டுக் குடிகளது குறைகளை யகற்றிச் செம்மையாகச் செங்கோல் செலுத்துவான். தீயவரைத் தண்டித்து நல்லவரைப் பாதுகாத்து நீதியாகப் பரிபாலனம் செய்திடுவான். குற்றங்களைக் கண்டவிடத்து ஏற்றபடியாகத் தண்டித்துத் தருமத்தை நிலைநாட்டுவான். பகையழித்துத் திறைகொண்டு, தனது நாட்டின் நன்மைக்காகச் செலவிடுவான்.

## (ராஜபக்தி)

கல்விச்சாலைகளையும், போக்கு வரவு சாதகங்களையும் வைத்திய சாலைகளையும், நியாய சபைகளையும், பாது காவலையும், நாட்டின் சமாதானத்தையும், தனது குடிகளின் பொருட்டாகக் கவனித்துச் செய்து வரும், மன்னனிடத்து அவனது குடிகள் நன்றியறிவுடையவர்களாக இருக்க வேண்டுவது மிகவும் அவசியமானது. குடிகளுக்கு அரசன், அன்பில் அன்னையையும், அளித்தலில் தந்தையையும், அறிவைப் பெருக்குவதில் குருவையும், பாவங்களை அகல ஓட்டித் தண்டித்தலில் கடவுளையும், ஆதரிப்பதில் உயிர்த் தோழனை

யும் நிகர்த்தவனாகின்றான். உலகில் பிறரிடத்தில் ஒருவன் கொள்ளும் உதவிகளுக்கு வரம்பொன்று இருக்கும். ஆயின் அரசனிடத்துக் கொண்டதற்கோ எல்லையென்பதே இல்லையாகும்.

குடிகள் ராஜாபிமானத்துடன் விளங்கி, நீதி முறையினின்றும் வழுவாத, அரசனது ஆக்கினைக்குட்பட்டு நடப்பதே முதல் விரதமாகக் கொள்ளவேண்டும். 'வேந்தன் சீறின் ஆந்துணையில்லை' என்பதை உணர்ந்து, எக்காலத்தும் அரசனது விருப்புக்கு ஆளாகி, வெறுப்புக்கு வேறாகி இருக்கவேண்டும். அரசற்கு நேரிடும் துன்பத்தைத் தாம் பெற்ற துன்பமெனக் கொண்டு, குடிகள் ஒற்றுமையாக இருந்திடுவார்களாயின், அரச காரியங்கள் நேர்மைப்பட்டு நிற்கும். அவ்வாறு நேர்மைப் படுவதால், சாந்த நிலையுற்ற நாடும் சிறப்புடன் விளங்கும். நாட்டின் சிறப்பால் அதன் மக்களும், மேன்மை யுற்றிடுவர். அதனால் புகழும், உயர்வும் சமாதானமும், நாட்டிலும் அதன் குடிகளிடத்தும் எப்பொழுதும் குடிகொண்டிடும். தெய்வத்திற்குச் சமமாகக் கருதப்படும் அரசனைப் பக்தி விசுவாசத்தோடு தொழுதேத்த வேண்டுமென்று நூற்கள் கூறுகின்றன.

"பெறுதற்குரிய நன்மைகளைப் பெரிதுஞ் செய்வோரைங்குரவர்
உறுமற்றவரில் ஒப்பற்ற உதவி புரிவோன் மன்னவனே
மறுவில்லரசன் மாலெனவே வகுத்த மன்னும் பெருநூல்கள்
உறுதியளிக்கு மவனுணை ஒன்றி நடத்த லறமாகும்"

என்ற, ஆன்றோரின் அமுத மொழிகளையும் கவனிக்க.

# 8. தமிழ் உரை நடை வளர்ச்சி.

## I

### பழந்தமிழ் வசனம்.

### (வசன நூற்களின் குறைவு)

முதலிடை கடையென்னும் மூச்சங்கங்கள், முற் காலத்தில் தமிழகத்திலிருந்து, தமிழ் மொழியைத் தழைத் தோங்கி வளரச் செய்துவந்தன. செந்தமிழ் மொழியை உலகுள்ளளவும் உயர்த்திக் கூறுதற்கு, அத்துணைச் சிறந்த மேலான நிலையில் அதனை வைத்துள்ள பெருமை அச்சங்க நூற்களுக்கே உரியதாகும். அக்காலத்திய தமிழ் நூற் களில், தமிழுலகின் தவப்பயனாக இக்காலத்தில் கிடைத் துள்ள நூற்களைத் திரட்டிப் பார்ப்போருக்கு, வசன நூற்கள் அங்குமிங்குமாக ஒன்றிரண்டே காணப்படுவது மிகவும் வியக்கத்தக்கதாக இருக்கும். பல துறைப்பட்ட விஷயங்களைக் கூறும் சங்க நூற்களில், உரைநடை நூற்கள் அதிகமாகக் காணப் படாமலிருப்பதற்கு முக்கிய காரணங் களாக இரண்டொன்றைக் குறித்திடலாம்.

தென்னவன் நாட்டில் தென்மொழி, பல்கலையுணர்ந்த பாவலரது நாவிலும் கையிலுமாக வளர்ந்து வந்த அச்சங்க நாளில், அவர்கள் தமது இலக்கண இலக்கிய நூற்கள் யாவற்றையும், செய்யுள் வடிவினதாகவே அமைத்துக் கொண்டனர். முழுதும் வசனமாக உள்ள நூல் அக்காலத் தில் இல்லை யென்றே கூறலாம். தமிழ் வசன நூலை அத் துணைச் சிறந்ததாக அவர்கள் கருதவில்லை போலும்! அன்றி,

தமிழ் மொழிப் புலமை முதிர்ந்து கிடந்த அவர்களுக்கு, வசன நூற்களைக் காட்டிலும் செய்யுள் நூற்களே, இலகு வாகவும் சாமானிய மாகவும் விளங்கும் தன்மையதாக இருந்திருக்கலாம். அன்றி, கருங்கடலாலும், சுடும் தீயா லும், அழித்திடும் செல்லாலும் கொள்ளப்பட்டுத் தமிழ் நாட்டின் திருமுகத்தைத் திரும்பிப் பாராது மறைந்து போன, முற்காலத்திய நூற்கள் சிலவற்றைப் போல், அக் காலத்திலிருந்த வசன நூற்களும் இருந்த இடம் தெரியாது அழிந்து போயுமிருக்கலாம். அன்றி, செந்தமிழ் நாட்டில் கவனிக்கப்படாது, எண்ணுமெழுத்து மறியாதார் வசித் திடும் இல்லங்களில் எவருக்கும் பயன்படாது, பழந் தமிழ் வசன நூற்கள் உறங்கி இருப்பினும் இருக்கலாம். இவ்வாறு பலபடியாக எண்ணுதற்குப் போதிய சான்றுகளில்லாமை யால், முதற் கண் கூறியாங்கு, சங்க காலத்திலும் அதற்குப் பிற்பட்ட சமீப காலத்திலும், வசன நூற்களின் அவசிய மேற்படவில்லை யென்றே எண்ணவேண்டியுள்ளது.

## (குறைவின் காரணம்)

**வி**ரைவில் நூற்களை வெளிப்படுத்தப் போதிய வசதி கள் இக்காலத்திலிருப்பதைப்போல் முற்காலத்தில் இருக்க வில்லை. அச்சு யந்திரங்களின்மையாலும், காகிதங்கள் கிடைக்காததாலும், பழந் தமிழ் நூற்களெல்லாம் பன ஓலைகளின்மேல் கையால் எழுதப்படவேண்டி இருந்தன. பெரிய நூலொன்றைச் சிறிய சுவடியில் எழுத அதிக காலம் கழிந்திடுமென்பது கூறாமல் விளங்கும். ஒரு முறை யெழுதுவதே கடினமாகக் காணப் படுவதால், ஒரு நூலின்

பல பிரதிகள் அக்காலத்தில் கிடைப்பது வெகு அருமை யாகவே இருந்திருக்கும். காலத்தின் நீடிப்பையும், கையால் எழுதவேண்டிய சிரமங்களையும் கருதி, முற்காலத்தில் நூற் கள் எழுதுவோர், 'சுருங்கக்கூறி விளங்கவைத்' திடும் முறையினைப் பின்பற்றித் தமது கருத்துக்களைச் சுருக்க மாகப் பாக்களில் எழுதிப் பொருள் பலவும் அவற்றுள் பொதிய வைத்து விளக்கிப் போயினர் போலும்! வசனமாக எழுதுவதென்றால் விரிந்த நூற்களாகுமென்று அவர்கள் கருதி இருப்பர்.

அதுபற்றியே, பழம் தமிழ் நூற்களில், உரையாசிரி யர்கள் எழுதிய உரை நூற்களையன்றி, வசன நூற்கள் அதிகமாக இல்லாமற் போயின. சிலப்பதிகார உரையாசிரி யர் அடியார்க்கு நல்லார், அந்நூலின் பதிக உரையில் விரி வஞ்சித்தமது உரையைச் சுருக்கயாகக் கூறுவதாக மொழிந் துள்ளது நோக்கற்பாலது. பிற உரையாசிரியர்களது உரை நூற்களும் இக்காரணம் பற்றியே சுருக்கமாக எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்! அவ்வாறு சுருங்கக் கூறப்பட்ட நூலாக இருந்தும், உரையாசிரியரது நூற்கள், விரிவாகப் பல பொருள்களையும் விளக்குமுறக் கூறுவதாக உள்ளதைக் கண்டு, தமிழ் மக்கள் தற்புகழ்ச்சிகொண்டு மனமகிழ்ச்சி யடைந்திடுவரென்பதில் சந்தேகமில்லை.

## II

### (பழந்தமிழ் வசன நூற்கள்.)

இனி, தமிழ்மொழி வசன நூற்களாக, முற்காலத்தி லிருந்தனவற்றைக் கவனிப்போம். வசன மென்பது வட

மொழிப்பதம். அதனை உரை நடை யென்பர் பழந்தமிழ் மக்கள். கி. பி. 17-ம் நூற்றாண்டிற்கு முன்னர், தமிழில் உரை நடை நூற்கள் வெகு குறைவாக இருந்தன. ஒல்காப் புகழ்பெற்ற தொல்காப்பிய மென்னும் இடைச் சங்கத்து இலக்கண நூலின் ஆசிரியர் தொல்காப்பியர், அடிவரை யறையின்றிவரும் செய்யுளின்வகை, நூலும் உரையும் பிசியும் முதுமொழியும் மந்திரமும் கூற்றிடை வைத்த குறிப்புமென ஆறாகு மென்றார். அவற்றுள் உரைப் பகுதி வழக்கு, பாட்டிடை வைத்த குறிப்பும், பாவின்றெழுந்த கிளவியும், பொருளொடு புணராப் பொய்ம்மொழியும், பொருளொடு புணர்ந்த நகை மொழியுமென நான்காகு மென்றார்.

## (பெருந்தேவனார் பாரதம்)

**தொ**ல்காப்பியச் செய்யுளியலில் வந்துள்ள, 'தொன் மைதானே, உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே' (செய். 238) என்ற சூத்திர அடிக்கு, ('தொன்மை என்பது உரைவிராய்ப் பழமை யவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது' என உரைகூறி) அதற்கு உதாரணமாக உரையாசிரியர், பெருந் தேவனாரின் பாரதத்தையும், தகடூர் யாத்திரை யென்ற நூலையும் காட்டியுள்ளார். பெருந் தேவனார், கடைச்சங்கத்துப் புலவர்களிலொருவர். இவரது பாரதம், பாரத வெண்பாவென்றும் அழைக்கப்படும். இந் நூலிலேயே இடையிடையில், வசன பாகங்களும் உள் ளதால், இதனை 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யு' ளென்றும் கூறுவர். இதுவே தமிழில் முதலாக இருந்த வசன நூலென்பர்.

## (தகடூர் யாத்திரை)

தகடூர் யாத்திரை யென்னும் நூல், பொன்முடியார், அடிசில்கிழார் என்ற புலவர்கள் இருவரால் எழுதப்பட்டது. (தொ. புறம் 8–12 நச்). இந்நூல் இப்பொழுது கிடைக்க வில்லை. இந்நூலில், பெருஞ்சேர லிரும்பொறை யென்ற சேரமன்னனொருவன், சேலம் ஜில்லாவிலுள்ள தருமபுரி யெனக் கருதப்படும் தகடூரை ஆண்டு வந்தவனும், ஔவைக்கு அருங்கனி கொடுத்து உதவியவனும், பாவலரைப் போற்றிய காவலனுமாகிய அதிகமானெடுமானஞ்சி யென் பானைப் பொருது, அவனது நாட்டைக் கைப்பற்றிய விவரம் கூறப் பட்டு இருந்ததெனத் தெரிய வருகின்றது. இச்சேரனுக்கு அதுபற்றியே, 'சேரமான் தகடுமெறிந்த பெருஞ்சேரலிரும் பொறை' யென்ற பெயர் வருவதாயிற்று. இப்பெயரோடும் புலவர்கள், பலர் இவனைப் புறநானூறென்ற சங்க நூலில் பாடியுள்ளனர். தகடூர் யாத்திரையில், பெரும்பான்மையாக வசனமும், சிறுபான்மை செய்யுளும் இருந்த தென்பது, தொல்காப்பிய சூத்திரமொன்றின் உரையில், 'பாட்டு வருவது சிறுபான்மையாகலின், அவை தகடூர் யாத்திரை போல்வன' என்று கூறப்படுவதால் (சூ. 174) விளங்கு கின்றது.

## (சிலப்பதிகாரம்)

சிலம்பின் காரணமாக மதுரை அரசனால் கொல்லப் பட்ட கோவலனது சரிதையைக் கூறும், சங்க காப்பியமாகிய சிலப்பதிகாரத்திலும், இடையிடையே உரை நடை விரவி

வருகின்றது. இந்நூல், சேர அரசன் செங்குட்டுவனது சகோதரர், நாடாட்சி வெறுத்துத் துறவறம் பூண்ட இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. இந்நூலின் பதிகத்தில் ஆசிரியர் இளங்கோவடிகளே, தமது நூலை உரை நடையோடு கூடிய காவிய மெனக் கூறுதல் காண்க. உரை பெறு கட்டுரை யென்ற பாகமொன்றே, சிலப்பதிகாரத்தில் வசன வடிவினதாக உள்ளது. அப்பகுதியில் வரும், 'அன்று தொட்டுப் பாண்டிய நாடு மழைவறங் கூர்ந்து வறுமை யெய்தி வெப்புநோயுங் குருவுந் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்ல ராயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழை பெய்து நோயுந் துன்பமும் நீங்கி யது......' என்ற அடிகளால் இளங்கோவடிகளது வசன நடையைக் கண்டறிக.

## (மணிப் பிரவாள நடை)

கடைச்சங்கமிருந்த காலத்திற்குப் பின்பு, தமிழ் பெரும்பாலும் ஜைனர்களால் ஆதரிக்கப்பட்டு வந்தது. தமிழில், ஜைனர்களால் இயற்றப்பட்ட ஸ்ரீபுராணம், கத்ய சிந்தாமணி போன்ற நூற்களிருந்தன. அவை வடமொழியும் தென்மொழியும் கலந்துவரும் மணிப் பிரவாள மென்ற நடையினைக் கொண்டவை. ஸ்ரீபுராணத்திலிருந்து எடுத்த 'மற்றொரு நாள் சிரேணிக மகாராஜன் ஸமவ சரணமடைந்து அசோக வனத்துள் அசோக விருக்ஷ மூலத்து ரூப யௌவன சுப லக்ஷண ஸகிதராகித் தியாநாரூடராகியிருந்த ஜீவந்தர முனிகளைக் கண்டு அத்தியந்தம் விஸ்மிதனாகி, சுதருமகண

தாரையடைந்து, 'பகவானே ஈதிருசல லக்ஷண சகிதராகிய இத்தபோதனர் யார்?' என்று வினவ அவரும் அருளிச் செய்வார்" எனற அடிகள் மணிப் பிரவாள நடையினை விளக்குவதாகும்.

## III

### உரையாசிரியரது உரை நூற்கள்

(முசிரி நீலகண்டர்)

கற்றறிந்த புலவர்களாகிய தமிழ் உரையாசிரியர்கள் பலர், முற்காலத்தில் தோன்றிச் சங்க நூற்களுக்கு இனிய வசன நடையில் தமது உரைகளை யெழுதிச் சென்றனர். முதல் உரை நூலாக, முசிரி நீலகண்டரென்ற பெரியாரெழுதிய, நக்கீரது இறையனாரகப் பொருளுரையைக் குறித்திடலாம். இறையனாரென்பவர், கடைச்சங்கத்தில், அகப்பொருளுரைக்கும் இலக்கண நூலொன்றைச் செய்தார். இந்நூல், இயற்றிய ஆசிரியர் பெயரோடும் சேர்ந்து, இறையனாரகப் பொருளென்று வழங்கப்பட்டு வருகின்றது.

இறையனாரகப் பொருளுக்குக் கடைச்சங்கத்துப் புலவரும், திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை யென்ற சிறந்த செய்யுள் நூற்களுக்கு ஆசிரியரும், மதுரைக் கணக்காயனார் மகனருமாகிய நக்கீரர், உரையொன்றை இயற்றினர். இவ்வுரை வழிவழியாகக் கேட்கப்பட்டு வந்து, நக்கீரருக்கு ஒன்பது தலைமுறைக்குப் பின்னவராகிய, முசிரி நீலகண்டரால் எழுதப்பட்டதென அவ்வுரை நூலால் விளங்குகின்றது.

இது நக்கீரரால் ஆக்கப்பட்டதென்பது; உரையாசிரியர் நச்சினார்க்கினியர், 'கடைச்சங்கத்தாருட் களவியற்பொருள் கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரர்' (தொ. பொரு.) எனவும், 'இவ்வுரை செய்தார் யாரோ வென்றவழி மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரரென......' (தொ. மரபி.) எனவும்; கூறுவதால் விளங்கும். அடியார்க்கு நல்லாரும், சிலப்பதிகார உரையில் 'கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரை' என மொழிதல் காண்க.

ஆயின், தமிழ் ஆராய்ச்சியாளர் பலர், இவ்வுரை நக்கீரரால் இயற்றப்பட்டதன்றென்று கூறுகின்றனர். இவ்வுரை நக்கீரரால் சங்க காலத்தில், மூங்கைப் பிள்ளையின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டதென்ற விஷயமே கட்டுக்கதையெனக் கருதுவோரும் பலருண்டு. எவர் கருத்து எதுவாயினும், இவ்வுரை நூல், பழம் தமிழ் வசனநடையை விளக்கிக் காட்டுகின்றதென்ற செய்தி நமக்குப் போதுமானது. முச்சங்கங்களின் விவரங்கள் பலவற்றையும் இந்நூலால் இக்காலத்தில் தெளிவாக அறிய முடிகின்றதென்பதைக் கண்டு தமிழ்மாட்டுப் பேரன்புடைய தமிழ்ப் பிரியர் யாவரும் களித்திடுவரென்பதில் சந்தேகமில்லை.

இறையனாரகப் பொருளுரையில், 'எதிர்நூல் என்பதும் ஒன்றுண்டு. அது யாதோவெனின், முதனூலின் முடிந்த பொருளை ஓராசிரியன் யாதானும் ஒரு காரணத்தாற் பிறழ வைத்தால் அதனைக் கருவியாற் றிரிவுகாட்டி ஒருவாமை வைத்தற்கு ஒள்ளியான் ஒரு புலவனால் உரைக்கப்படுவது' எனவும், 'அன்பு என்றது, குடத்துள் விளக்குந் தடற்றுள்

வாளும் போல இதுகாண் அன்பென்று தந்து காட்ட லாகாது. ...அன்புடையரான குணம் யாவையோ வெனின், சாவிற் சாதல், நோவினோதல், ஒண் பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனிவேட்டல், பிரிவு நனி யிரங்கல் என இவை' எனவும், வரும் அடிகளால் அவ்வுரை நூலின் நடையைக்கண்டு களித்திடுக.

## (இளம்பூரணர்)

இளம்பூரணர், கல்லாடர், பேராசிரியர், சேனா வரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், பெருந்தேவனார், அடியார்க்குநல்லார் முதலிய பல பெரியோர்கள் முற்காலத் தில் முறையே உரையாசிரியர்களாக விளங்கி யிருந்தனர். முதலுள்ள ஐவர் தொல்காப்பியத்திற்குப் பொருள் எழுதிய வர்கள். இவர்தமுள் வெகு முந்தியவராகிய இளம் பூரணர், 'உரையாசிரியர்' என்றே அழைக்கப்படுவார். இவரது உரை முழுவதும் தற்காலத்தில் கிடைப்பதில்லை. எழுத்ததிகாரத் திற்கும் பொருளதிகாரத்தின் முதலிரண்டு இயல்களுக்கும் இவரது உரை இருக்கின்றது. தெளிவாகவும் சுருக்கமாக வும் இவர் தமது உரையை எழுதியுள்ளார். 'ஒல்காப்புலமைத் தொல்காப்பியத்துள், உளங்கூர் கேள்வி இளம் பூரணரெனு மேதமின் மாதவர்' என மயிலைநாதரும், 'உளங்கூருரையா மிளம்பூரண' மென, இலக்கணக் கொத்துரையுடையாரும் கூறுவன, இவரது உரை நூலின் சிறப்பை நன்கு விளக் குகின்றன.

"உலகத்தில் நூல் செய்வார் செய்கின்றது அறிவிலா தாரை அறிவு கொளுத்த வேண்டியன்றே. யாதானும் ஓர் நூல் விரித்தோதிய பொருளைத் தானும் விரித்தோது வானாயின் ஓதுகின்றதனாற்பயன் இன்றாமாதலால், முதனூலா சிரியர் விரித்துக் கூறின பொருளைத் தொகுத்துக் கூறலும் தொகுத்துக் கூறின பொருளை விரித்துக் கூறலும் நூல் செய்வார் செய்யும் மரபாம் என்க. இன்பங்காரணமாகப் பொருள் தேடுமாகலானும், பொருளானே அறஞ் செய்யு மாகலானும், இன்பமும் பொருளும் எற்றமென ஓதினானென வுணர்க" எனவரும், இளம் பூரணரது இனிய வசன நடை யைக் காண்க.

## (பேராசிரியர்)

கல்லாடரைப் பற்றிய விவரம் நன்கு புலப்படவில்லை. அவரது உரை நூல் இக்காலத்தில் காணவும் கிடைப்பதில்லை. பேராசிரியரின் உரையும் அவரது உரை நடையும் மிகவும் பெருமையுடையன. பேராசிரியர், பொருளதிகாரத்தின் இறுதி நான்கு இயல்களுக்கும், திருக்கோவையாரென்ற நூலுக்கும், குறுந்தொகையில் இருபது செய்யுள்கள் நீங்க எஞ்சிய செய்யுட்களுக்கும், உரை எழுதியுள்ளார். பேரா சிரியரின் வசன நடை மிகவும் தெளிவாகவும், சிறிய சிறிய வாக்கியங்களாலானதாகவும் இருப்பது நோக்குக.

"யாமுன்பொரு நாள் கடற்கரை யிடத்தே வண்டல் செய்து விளையாடா நின்றேமாக, அந்நேரத் தொரு தோன்றல், நும்வண்டல் மனைக்கு யாம் விருந்தென்று

வந்து நின்ற பொழுது நீ பூக்கொய்யச் சிறிது புடை பெயர்ந்தாய்; அந்நிலைமைக்கட் கீழ் காற்று மிகுதலாற் கரை மேலேறுங்கடல் மேல் வந்துற்றது. உற, யான்றோழியோ! தோழியோ! என்று நின்னை விளித்தேன்; அதுகண்டிரங்கி அவனருளொடு வந்து தன் கையைத் தந்தான்; யானு மயக்கத்தாலே அதனை நின் கை யென்று தொட்டேன்; அவனும் பிறிதொன்றுஞ் சிந்தியாது, என்னுயிர் கொண்டு தந்து, என்னைக் கரைக்கணுய்த்துப் போயினன்; அன்று என் நாணினால் நினக்கதனைச் சொல்ல மாட்டிற்றிலேன்' (திருக்கோவையார். 'அறத்தொடு நிற்றல்; தலைவி தோழிக் குரைத்தல்') என்ற அடிகளால், பேராசிரியரின் நடைவனப்பை அறிக.

## (சேனாவரையர்)

**சே**னாவரையரும் நச்சினார்க்கினியரும் சமகாலத்திலிருந் தவர்கள். சேனாவரையர், தொல்காப்பியத்தின் சொல்லதி காரத்திற்குப் பொருளெழுதியுள்ளார். இவரது வசன நடை நச்சினார்க்கினியரின் நடையைக் காட்டிலும் கடினமான தென்று கூறலாம். 'யானை நூல் வல்லானொருவன் காட்டுட் போவுழி ஓர் யானை யடிச்சுவடு கண்டு இஃதரசுவா வாதற் கேற்ற இலக்கண முடைத்து என்ற வழி...........' என்பது இவரது வசன நடையைக் காட்டும்.

## (நச்சினார்க்கினியர்)

**ந**ச்சினார்க்கினியர் பல தமிழ் நூற்களுக்கு உரை யெழுதியுள்ளார். அவை தொல்காப்பியம், கலித்தொகை,

பத்துப்பாட்டு, சிந்தாமணி, குறுந்தொகை (பேராசிரியர் விடுத்த இருபது செய்யுள்) முதலியன. இவர் தெளிவாக எழுதும் இயல்பினர். சுருங்கக் கூறி விளங்க வைக்கும் சுபாவத்தினர். இனிய பதங்களை ஏற்ற இடத்தில் உபயோகித்திடும் குணத்தினர். படிப்பவருக்குத் தமது கருத்து நன்கு விளங்குமாறு எழுதிப் போகும் பேராற்றலைப் பெற்றவர். 'வேதபோத, நச்சினார்க்கினிய னெச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்' எனவும், 'உச்சி மேற்புலவர்கொள் நச்சினார்க்கினிய' னெனவும், பெரியோர்கள் புகழ்ந்து கூறுவன காண்க. இவரது உரை நடை பெரும்பாலும் எதுகை மோனைகளோடு கூடிச் செய்யுள் நடைபோன்றே இருந்திடும்.

'பறந்து செல்லுஞ் செலவிலே தருக்கின, பாத்தலையுடைய போரிலே திரிவன' எனவும், 'கணவர்க்கு மெய்ம்முழுதும் இனிதாயிருத்தலிற் கரும்பு.' நல்லாருறுப்பெல்லாங் கொண்டு இயற்றலிற் றேன். இவ்வுலகிலில்லாத மிக்க சுவையும் உறுதியுங் கொடுத்தலின் அமிர்து. காமவேட்கையை விளைவித்து இனிய பண்டோற்றலின் மழலையையுடையதோர் யாழ். கணவற்குச் செல்வத்தைக் கொடுத்தலிற் றிரு. நடையா லன்னம். சாயலான் மயில். காலமன்றியுங் கேட்டோர்க்கு இன்பஞ் செய்தலின் குயில். மன்னன் மகளேயென்றல் புகழன்மையின், மன்னன் பாவாய் என்றது அவன் கண்மணிப்பாவை யென்பதுணர்த்திற்று; இனியிவள் கொல்லிப்பாவையன்று, மன்னன் பாவை யென்றுமாம். சேடியர் கற்பித்த கட்டளை தப்பாமற் கூறலிற் பூவை.

நோக்கத்தான் மான்' எனவும், வந்திடும் அவாது உரை நடையின் உயர்வு காண்க. (சீவக சிந்தாமணி, ந. உரை)

(பரிமேலழகர்)

**ப**ரிமேலழகர் திருக்குறளுக்கு உரையெழுதியவர். நச்சினார்க்கினியாது நடைபோலன்றி, இவாது நடை சிறிது கடினமானதாக இருக்கும். எனினும் இவர் தாம் கூறுவனவற்றைச் சுருக்கமாக எழுதும் சுபாவத்தினர். இவாது நூலில் சொற்கள் வேண்டிய அளவே பயன்படுத்தப்பட்டு இருக்கும். 'இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமிலின்பத் தழிவில் வீடும், நெறியறிந் தெய்துதற்குரிய மாந்தர்க் குறுதி யென வுயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள்கள் நான்கு. அவை, அறம், பொருள், இன்பம், வீடென்பன. அவற்றுள் வீடென்பது, சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்து' எனச் செய்யுள் நடைபோன்று இவாது வசனநடை வருதல் நோக்குக.

(அடியார்க்கு நல்லார்)

**பெ**ருந்தேவனாரென்னும் ஒருவர் வீரசோழியர் என்னும் இலக்கண நூலுக்குப் பொருள் எழுதியுள்ளார். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையாசிரியர். அந்நூலின் பெரும் பகுதிக்கு இவாது உரை உள்ளது. இவாது வசன நடை தெளிவாக இருக்கின்றது. இவர் பெரியவாக்கியங்

களையே உபயோகப் படுத்துவார். அவை சிற்சில இடத்தில் செய்யுள் நடை போன்றுமிருந்திடும். 'அது கேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்து, நங்கைக்கு விழவொடு சாந்தி செய்து, மழை தொழிலென்றும் மாறாதாயிற்று' எனச் சிலப்பதிகார உரையில் அவர் எழுதுதல் நோக்குக.

# IV

## இடைக்காலத்து வசன நூல்கள்.

### (வசன நூலாசிரியர்கள்)

உரையாசிரியர் காலத்திற்குப் பிறகு, தமிழ் உரை நடையை வளர்த்துவந்த பெரியார்களில் முதலாக, நிரம்ப அழகிய தேசிகரென்பாரைக் கூறலாம். இவர் செய்யுளியற் றும் திறமை வாய்ந்த புலவரோடன்றி, விரிந்த உரை யெழுதும் ஆசிரியராகவும் விளங்கினார். இவருக்குப் பின்பு முறையே, தத்துவபோதக சுவாமி யென்ற புனை பெயருடையராயிருந்த ராபர்ட் டீ நோபிலிபஸ், திருநெல்வேலி மயிலேறும்பெருமாள் பிள்ளை, திருவாரூர் வைத்தியநாத தேசிகர், குருகூர்ச் சுப்பிரமணிய தீக்ஷிதர், ஈசான தேசிகரெனப்படும் சுவாமிநாத தேசிகர், சங்கர நமச்சிவாயப் புலவர், தைரியநாதரென்ற மாறுபெயர் கொண்ட கான்ஸ்டான் ஷியஸ் பெஸ்க்கி, சிவஞான சுவாமிகள், தஞ்சைவாணன் கோவைக்கு உரை யெழுதிய சொக்கப்ப நாவலர், விசாகப் பெருமாளையர், சரவணப்பெருமாளையர், பஞ்ச தந்திர

ஆசிரியர் தாண்டவராய முதலியார், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், இராமலிங்க சுவாமிகள், வீராசாமிச் செட்டியார், தாமோதரம் பிள்ளை, வேதநாயகம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை, தொழுவூர் வேலாயுத முதலியார், ஸ்ரீநிவாசராகவாசாரியார், கபிஸ்தலம் துரைசாமி மூப்பனர், சூரியநாராயண சாஸ்திரியார் முதலிய பிரபலமாக இருந்த பலரையும் கூறலாம். இவர்களியற்றிய தமிழ் உரைநடை நூற்கள் பலப்பலவாக உள்ளன.

இயற்றமிழ் வசன நூற்கள், மேற்குறித்த இரு கிறிஸ்தவப் பாதிரிமார்களாலேயே வளர்த்தப்பட்டன. தங்களின் மதங்களைப் பரவுவித்தற்கு வேண்டிய நூற்களை அவர்கள் எழுதினார்களாயினும், தமிழ் வசன நூற்கள் எழுதும் ஊக்கம் அவர்களாலேயே முதலில் பிறந்ததென்னலாம். வைத்தியநாத தேசிகரும், சுப்பிரமணிய தீக்ஷிதரும், சுவாமிநாத தேசிகரும், இலக்கண சம்பந்தமான சூத்திரமும் உரையும் எழுதினர். சிவஞான முனிவர், இலக்கண சித்தாந்த சாஸ்திர உரைகளும் கண்டனங்களும் வரைந்தனர். தருக்க சங்கிரக மொழி பெயர்ப்பு இவருடைய நூலாகும். இவை யாவும் புலவர்களே படித்துப் புகழக்கூடியவைகளாக இருக்கின்றன. சாமானியமாகச் சிறுவர் சிறுமியருக்கேற்றபடியான வசன நூற்கள், 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தான் எழுதப்படலாயின. அவைகளைத் தமிழாசிரியர்களான சரவணப் பெருமாளையர், தாண்டவராய முதலியார் போன்ற பெரியார்கள் எழுதினர். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் சாதாரணமான வசன நூற்கள் பல எழுதப்பட்டன.

(தற்காலத்திய வசன நூற்கள்)

தற்காலத்தில், தமிழ் வசன நூற்களே பெரும்பாலாக வெளிவருகின்றன. முற்காலத்தில் செய்யுள் நூற்கள் வெகுவாக விரும்பப்பட்ட விதம் போன்று, இக்காலத்தில் வசன நூற்களே எல்லோராலும் பெரிதும் விரும்பப்படுகின்றன. இலக்கண நூற்களும், சரித்திர நூற்களும், நவீனங்களும், நாடகங்களும், மொழிபெயர்ப்பு நூற்களும், இவைபோன்ற பலவும் இக்காலத்தில் தமிழ் உரை நடை நூற்களாகவே இருக்கின்றன. இவற்றோடன்றி, முன்போலன்றி இப்பொழுது, தினசரி, மாதப் பத்திரிகைகளும் பல மடங்காக அதிகரித்துள்ளன. அவையும் தெளிவான வசன நடையில் ஆக்கப்பட்டவைகளாகவே அமைந்துள்ளன.

காலப்போக்கை யநுசரித்தும், புதிதுபுதிதாக எழுந்திடும் விஷயங்களுக்கும் கருத்துக்களுக்கும் தகுந்தபடியாக அமைத்துக்கொண்டும், நூற்கள் பல தமிழ் வசனத்தில் எழுந்திடல் வேண்டும். கடினமான நடையை விடுத்துப் பாவலருக்கே யன்றிப் பாமாருக்கும் எளிதில் பொருள் விளங்கக்கூடிய, தெளிவான நடையையுடைய நூற்கள் பல பிறந்திடல் வேண்டும். சிறிய சிறிய வாக்கியங்களால் விஷயங்களை விளக்கிக் காட்டும் நூல் பலவாகத் தொகுக்கப்படல்வேண்டும். பொருள் நன்கு எல்லோருக்கும் விளங்காது கிடக்கும் பழந்தமிழ் நூற்களை, தமிழ் உரை நடையில் எழுதுதல் வேண்டும். பிறபாஷைகளில் சிறந்த நூற்களெனக் கருதப்படும் அவற்றை மொழிபெயர்த்திடல் வேண்டும்.

விளங்காத வேதாந்த சித்தாந்த நூற்களை யாவர்க்கும் விளங்குமாறு கற்றறிந்தார் கருத்தோடு எளிய தமிழ் வசன நடையில் வரைதல்வேண்டும். உயர்ந்த நீதிகளைப் புகட்டி, நல்ல வழிகளைக் காட்டும், கருத்துக்கள் நிறைந்துள்ள நவீனங்கள் பல தோன்றல் வேண்டும். மாதரொழுக்கமும், பாலர் பழக்கமும், சீலர் வழக்கமும் கூறும் நூற்கள் பலப்பலவாகக் கிளம்பவேண்டும். விளங்காத சொற்களை விடுத்தும், கடினமான சந்திகளைப் பிரித்தும், இலக்கணப் பிழைகளும், பிற பிழைகளுமில்லாது, பல நூற்களை உரை நடையில் எழுதவேண்டும். சாமானியமாக எல்லோருக்கும் விளங்கக் கூடிய சொற்களை நூலில் உபயோகித்தலும், பொருள் விளங்காத கடினமான சொற்களை யகற்றிப் பிற மொழிச் சொற்களாயினும் அவற்றை உபயோகித்தலும் இழுக்காகாது. தற்காலத்தில் சமூக வாழ்க்கையில் பயிலப்பட்டு வரும் பல பொருள்களையும் விளக்கிக் காட்டும் வசன நூற்கள், தமிழ் மொழியில் அதிகமாகப் பல கலையறிந்த கலைவல்லவர்களால் எழுதப்படவேண்டும்.

முற்றிற்று.

Printed at the SANJIVI PRESS, DHARMAPURI, (Salem Dt.) 200/35.